# ஆகுதி



கலையார்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3-6

# ஆகுதி

(சிறு கதைகளின் தொகுப்பு)

கலையார்வன்

வெளியீடு
நெயோ கல்சரல் கவுன்சில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | |
|---|---|
| நூல் | : ஆகுதி |
| விடயம் | : சிறு கதைகளின் தொகுப்பு |
| ஆசிரியர் | : கலையார்வன் |
| | 28, மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். |
| பக்கங்கள் | : 116 + viii (124) |
| முதற் பதிப்பு | : தை 2009 |
| பதிப்புரிமை | : ஆசிரியர் |
| வெளியீடு | : நெயோ கல்சுரல் கவுன்சில் |
| | 28/1, சென். ஜேம்ஸ் மேற்கு வீதி, யாழ்ப்பாணம். |
| கணினி வடிவமைப்பு அட்டை | : ஜெயந்த் சென்ரர் 28 , மாட்டின் வீதி, யாழ்ப்பாணம். |
| அச்சுப்பதிப்பு | : அஸ்ட்ரோ கிராபிக்ஸ், சென்னை - 17 |
| விலை | : 200/= |

| | |
|---|---|
| Title | : AHUTHI |
| Subject | : Short Stories |
| Author | : Kalayarvan |
| | No. 28, Martyn Road, Jaffna. |
| Pages | : 116 + viii (124) |
| First Edition | : January 2009 |
| Copy Right | : Author |
| Published by | : Neo Cultural Council |
| | 28/1, St. James West Street, Jaffna |
| | 021- 222 3224 |
| Computer Layout | : Jeyanth Centre, |
| | 28, Martyn Road, Jaffna. |
| Print by | : Astro Graphics |
| | No. 37, Dhomodharan Street, Doron Complex |
| | T.Nagar, Chennai -17. Tel : 044-6591 7211 |
| Price | : 200/= |

Website : jeyanthcentre.com
E-mail : kalayarvan@jeyanthcentre.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ஆகுதியானவர்களுக்கு...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளே...


1. கல்வீடு .................... 2
2. முச்சநதி .................... 7
3. வேப்பம் மரம் .................... 11
4. தண்ணீர் .................... 14
5. காப்பகம் .................... 18
6. உள்ளக்குமுறல் .................... 27
7. சமத்துவம் .................... 29
8. திருமணம் .................... 33
9. கீ பேத்டே .................... 37
10. மருநது .................... 41
11. அடையாளம் .................... 44
12. மீன்கள் .................... 54
13. தவிப்பு .................... 56
14. அதீதம் .................... 60
15. எல்லை .................... 64
16. வாழ்க்கை .................... 67
17. தூக்கம் .................... 70
18. காத்திருப்பு .................... 74
19. முரண்பாடு .................... 78
20. எதிர்பார்ப்பு .................... 81
21. இணைப்பு .................... 91
22. நகர்வு .................... 94
23. வழிமுறை .................... 97
24. கரங்கள் .................... 100
25. அழைப்பு .................... 103
26. வண்டில் .................... 107
27. இலவம்பஞ்சு .................... 110
28. சதைத்துகள் .................... 113




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வெளிப்பாடு...**

மூன்று தசாப்தங்களாக இம்மண்ணில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் முடிவற்ற போர் தமிழ் மக்களின் அபிலாசைகளை அடியோடு சிதைத்துவிட்டு அவர்களது வாழ்வியலையே தலைகீழாக மாற்றிவிட்டிருக்கிறது என்ற உண்மையை எவராவது மறுக்க முடியுமா? பல்லாயிரக்கணக்கான உயிர்களையும், அளவற்ற வளங்களையும், செல்வங்களையும் காவுகொண்ட இப்போர் தமிழ் மக்களின் சமூக, சமய, அரசியல், கல்வி, கலை, பண்பாட்டு விழுமியங்களை இங்குமட்டுமல்ல தமிழ் மக்கள் இடம்பெயர்ந்து வாழும் கிராமங்களிலும், நகரங்களிலும் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் அடியோடு மாற்றிவிட்டிருக்கிறது என்ற யதார்த்தத்தை அறிந்தும், உணர்ந்தும் ஏன் மௌனமாயிருக்கிறோம் என்பது புரியவில்லை. இந்நிலை தொடருமானால் நமது வாழ்வியல் மேலும் நலிவுறும் என்பது திண்ணம்.

1995 இல் நடைபெற்ற தமிழ் மக்களின் மாபெரும் இடப் பெயர்வு, 2004 இல் நிகழ்ந்த சுனாமி அனர்த்தங்கள் ஆகியவை நம்மை நாமே திருத்திக் கொள்ள இறைவன் தந்த மேலான சந்தர்ப்பங்கள் என்றே நம்புகிறேன். ஆனால் நாம் மனந்திருந்தவில்லை. அதன் விளைவு இன்று நமது வாழ்வியலே கேள்விக் குறியாகிவிட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'ஆகுதி' எனும் இந்நூலில் 27 சிறுகதைகள் அடங்கியுள்ளன. நூலாசிரியர் கலையார்வன் அவர்கள் குறிப்பிட்டுள்ளதுபோல், இதிலுள்ள ஒவ்வொரு சிறுகதையும் நெஞ்சைப் பிழிகின்ற உண்மை நிகழ்வுகளின் தொகுப்பே அன்றி வேறில்லை. போர்ச் சூழலில் பல்வேறு காலகட்டங்களில் தளத்திலும், தமிழர் இடம்பெயர்ந்து வாழும் இடங்களிலும், புலம் பெயர்ந்து வாழும் நாடுகளிலும் நிகழ்ந்த உண்மைச் சம்பவங்களில் சிலவற்றை ஒரு வெட்டு முகமாக இங்கு எமக்குத் தந்துள்ளார். சொல்லப்பட்டுள்ள ஒவ்வொரு சம்பவமும் நமது நெஞ்சை நெருடுவதை ஒவ்வொரு வாசகனாலும் உணர்ந்து கொள்ளமுடியும். அவற்றை அனுபவித்த மக்கள் இன்றும் நிம்மதி அற்று அலைந்துகொண்டிருக்கிறார்கள் என்பது தான் உண்மை. இதைவிட பல ஆயிரக்கணக்கான துன்பியல் நிகழ்வுகள் ஆவணப் படுத்தப்படாமலே ஆகுதியாகிவிட்டன.

சொந்த மண்ணில் நிகழ்ந்த சோகங்களைத் தமது புலப்பெயர்வுக்கு ஆதாரமாக்கிக்கொண்டு வேகமாக ஓடியவர்கள் இன்று தாம் புலம் பெயர்ந்து வாழும் நாடுகளின் கலாசாரங்களுக்குள் தங்களை முழுமையாக கரைத்துக் கொண்டுவிட்டதனால் அவர்கள் தம் மூலத்தைப் பற்றிய சிந்தனைகளிலிருந்து முற்றாக விடுபட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்பது தான் கசப்பான உண்மை.

தமிழ் மக்களின் அடையாளங்கள் நிலை நிறுத்தப்படவேண்டும் என்ற பெருநோக்கோடு முன்னெடுக்கப்பட்ட நமது போராட்டம் இன்று நமது அடையாளங்களையே கேள்விக் குறியாக்கிவிட்டது. 'ஆகுதி' நூல் தரும் பாடங்கள் நம் மனதில் தெளிவைத் தரும் என நம்புகின்றேன். இந்நூலினை நாம் வெளியிடுவதில் பெரு மகிழ்வடைவதுடன் நூலாசிரியர் 'கலையர்வன்' அவர்களுக்கு எம் நெஞ்சம் நிறைந்த நன்றிகள்.

வாழ்க, வளர்க அவர் பணி.

**கலாபூஷணம்**

**V. J. கொன்ஸ்ரன்ரைன்** J. P. (All Island)

இயக்குநர், நேயோ கல்சரல் கவுன்சில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## என்னுள்ளிருந்து...

யாழ்ப்பாணத்தில் வழமையாகிவிட்டதும், மனதை உருக்குவதுமான அந்தக் காட்சியை மற்றையோரைப்போல் நானும் பார்த்துக்கொண்டு நின்றேன்.

"ஐயோ! என்ர ராசா..."

கூட்டத்தின் உட்புறமிருந்து எழுந்த அலறல் சத்தத்தால் கூட்டத்தினரிடையே காணப்பட்ட சலசலப்பு அடங்கியது.

என் இதயம் வழமையைவிட அதிகமாகத் துடித்ததை உணர முடிந்தது. காதுகளைக் கூர்மை யாக்கிக் கொண்டேன்.

அங்கு நின்றவர்களில் சிலர் பலதையும் கதைத்தனர்...

அதில், விசமத்தனங்களும் இருந்தன... விதண்டாவாதங்களும் இருந்தன... விரும்பத்தகாதவை களும் இருந்தன.

கதைத்தவர்கள் மெல்லமெல்லத் திரும்பிச் செல்லத்தொடங்கினர்...

"தலையிடியும் காய்ச்சலும் தனக்குத் தனக்கு வந்தால்தான் தெரியும்"

கூட்டதிலிருந்து ஒரு பெண்ணின் குரல்.

சென்றவர்களில் சிலரும், நின்றவர்களும் குரல் வந்த திசையைத் திரும்பிப் பார்க்கத் தவறவில்லை.

அந்தப் பெண்ணின் கூற்றிலிருந்த உண்மைத் தன்மையை உணர்ந்தவர்களது முகத்தில் மாற்றம் தெரிந்தது.

என் சிந்தனையையும் கிளறியது...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அந்தப் பெண் உணர்ந்து சொல்ல நினைத்த வேதனையை அங்கே தங்கிநின்ற பலர் உணர்ந்ததாகத் தெரியவில்லை. சின்னத்திரை நாடகங்கள்போல் நீண்டுசெல்லும் மனித அவலங்களை நேரிலும், பத்திரிகைகளிலும் பார்த்தபோதும் அவை பலரையும் ஜடங்களாக்கிவிட்டன...

கைபட்டால் குற்றம், கால் பட்டால் குற்றம், கதைத்தால் குற்றம், கருத்துச் சொன்னால் குற்றம் என்று நீண்டுசெல்லும் பட்டியலின் வெளிப்பாடே, வேதனையை உணர முடியாத அந்த நிலையைத் தோற்றுவித்தது எனலாம்.

இன்று உணரத் தவறிய வேதனையின் வடிவங்களைப் பலரும் என்றோ ஒருநாள் திருப்பிப் பார்த்து உணரவேண்டும். அந்தப் பெண் கூறியதுபோல தனக்குத் தனக்கு வந்தால் மட்டும்தான் வலியல்ல. மனிதர் எவருக்கு வந்தாலும், அந்த வலி சொந்த வலியாக உணரும் பக்குவம் ஏற்படவேண்டும்.

இவை யாரால் ஏற்பட்டது?, எதற்காக ஏற்பட்டது?, யார் சம்பந்தப்பட்டுள்ளார்கள்?, யார் குற்றவாளி? என்று ஆராய்வதோ, பழி சுமத்துவதோ எனது நோக்கமல்ல. இவை ஒவ்வொன்றையும் வரலாற்று நிகழ்வுகளாக எதிர்காலத்தவர் அறியவேண்டு மென்பதே என் அவா. அதற்காகவே பரவலாக அறியப்பட்ட பல உண்மை நிகழ்வுகளை, கற்பனைப் பாத்திரங்களின் துணைகொண்டு உங்கள்முன் சிறு கதைகளாக முன்வைத்திருக்கின்றேன். இவை உங்கள் உள்ளங்களை உரசும் என நம்புகின்றேன்...

பல்வகை இடர்களின் மத்தியிலும் கணினிசார் வேலைகளைச் செய்து வடிவமைத்து உதவிய 'ஜெயந்த் சென்ரர்' நிறுவனத்தாருக்கும்; எழுத்துக்களுடன் ஒட்டிக்கொண்ட பிழைகளைக் கண்டறிய உதவிய நண்பர்களுக்கும்; சிரமத்தைக் கருத்திற்கொள்ளாது எனது தேவைக்கேற்ப அச்சிட்டு உதவிய .......... அச்சகத்தாருக்கும்; வெளியீடுசெய்ய முன்வந்த 'நெயோ கல்சரல் கவுன்சில்' நிறுவனத்தாருக்கும்; வாசகர்களாகிய உங்களுக்கும் எனது இதயம் நிறைந்த நன்றிகளைத் தெரிவிப்பதில் மனநிறைவு அடைகிறேன்.

அன்புடன்

**கலையார்வன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல கட்டங்களாக எம்மண்ணில் உருவான
அமைதியற்ற சூழலெனும் சூளையில்
'ஆகுதி'யானவை மனிதர்கள் மட்டுமல்ல,
எம்மவரின் பண்பாடும், கலாசாரமும்தான்.

குறிப்பாக 2006 - 2007 களில்
பத்திரிகைகளை ஆக்கிரமித்திருந்த
வேதனை தோய்ந்த நிகழ்வுகள்
எவராலும் மறக்கக்கூடியவைகளல்ல...

மறக்க முடியாத அந்த நிகழ்வுகள்,
மறைந்து கிடந்த குருநகர் மக்களின்
துன்பியல் பதிவுகள்,
கடல் கடந்த விசமத்தனங்கள்
போன்றவற்றின் வெளிப்பாடே இந்நூல்.

இந்த வெளிப்பாடு;
எவர்மீதுமான குற்றச்சாட்டுக்களல்ல.
மனிதம் சந்தித்த வேதனைகள்,
மனித மேம்பாட்டிற்கான பதிவுகள்.

இந்தப் பதிவுகளில்
திகதிகள் உள்ளடக்கப்படாது விடினும்
மாதிரியாக வெளிக்கொண்டுவரப்பட்ட
இவைகளனைத்தும் யதார்த்தமானவை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 01 கல்வீடு

"இந்த வீட்டை வாஸ்துசாஸ்திர முறைக்கு கட்டினதாக நீங்க சொல்லுறீங்க.. ஆனா, என்னைப் பொறுத்தவரை சில குறைகள் இருக்குதுங்க. அதை நிவர்த்தி செய்யத்தான் வேணும்"

"சொல்லுங்க ஐயா!"

"இது தெற்குப் பக்க வாசலாக இருக்கிறதால இந்த முன் அறையை உள்பக்கத்தால உடைச்சு சிறுசாக்கவேணும். குசினிக் கதவை இஞ்சாலப் பக்கம் போடவேணும். அப்பத்தான் ஒழுங்காக அமையும்." ...

வாஸ்து சாஸ்திரி சென்று அரைமணி நேரமாகியும் இராசதுரைக்கு யோசனை விட்டபாடாயில்லை...

'வீட்டைத் திருத்துவதா?... இல்லையா?...'

அறைச் சுவரை இடித்து உள்ளே கட்டுவதென்பது சிறிய வேலையல்ல. கூரையின் ஒரு பக்கத்தை அந்தச் சுவர்தான் தாங்கிப் பிடித்திருக்கிறது...

ஏற்படக்கூடிய செலவை நினைத்துப்பார்த்த போது இராசதுரையின் இதயத்தில் வலி எடுத்தது.

கையிலிருந்த பணம், நகைகள், கழித்து எடுத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சீட்டுக்காசென எல்லாவற்றையும் போட்டு இந்த வீட்டையும், வீட்டோடு சேர்ந்த இரண்டு பரப்புக் காணியையும் வாங்கிய மனநிறைவில் இருந்த அவருக்கு இது பேரிடியாகவே இருந்தது.

மனைவி செல்லம்மாவிடம் இதுபற்றிக் கூறியபோது; அவர் சொன்ன ஆலோசனையின்படி இன்னமும் ஒரு வாஸ்து சாஸ்திரியைத் தேடி அலைந்தார். பலரிடம் விசாரித்துத் 'திறமையான வாஸ்து சாஸ்திரி' எனப் பேர்பெற்ற மாசிலாமணியைக் கண்டுபிடித்து அழைத்துவந்தார்...

வீட்டின் வெளிப்பக்கத்தையும், அறைகள் ஒவ்வொன்றையும் சுற்றிச் சுற்றி வந்த மாசிலாமணி, சில நிமிட சிந்தனையின் பின்னர், முன்னைய சாஸ்திரி சொன்னவற்றுடன் புதிதாக வீட்டின் நீளத்தைக் கூட்டவேண்டும் என்ற புதுக் கட்டளையையும் போட்டார். அதற்கு, வீட்டின் பின்பக்கமாக ஐந்து அடிக்கு ஓர் அறையை வீட்டோடு இணைத்துக் கட்டும்படியும் ஆலோசனை கூறினார். அவரின் பார்வையில் சமயலறையில் மாற்றம் செய்யவேண்டிய அவசியமிருக்கவில்லை.

இராசதுரைக்குக் குழப்பம் தீர்ந்தபாடாயில்லை...

எப்படியும் வீட்டில் திருத்தம் செய்யவேண்டுமென்ற கட்டாயம்... இறுதி முடிவுக்கு வந்தார்.

மனைவியிடமிருந்த ஏனைய நகைகளை வங்கியில் அடைவு வைத்தும், கைமாற்றாகவும் பணத்தைப் பெற்று வீட்டு வேலையைத் தொடங்கி சில நாட்களில் முடித்து விட்டார்...

முன்னர் வீடு எப்படி இருந்திருந்தாலும் இப்போது முறையான வாஸ்து சாஸ்திரப்படி வீடு மாற்றியமைக்கப்பட்டதில் பூரண திருப்தி அவருக்கு...

* * *

நாள் பார்த்து, நேரம் பார்த்து, உறவினர்கள் - அயலவர்கள் - நண்பர்களென ஒன்றுகூடி, பால் காய்ச்சி - உணவு பரிமாறி சிறப்பாக புதுமனை புகும் நிகழ்வு நடந்தபோது இராசதுரையின் மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மற்றவர் கண்பட்டுவிடுமென்பதில் கவனமாக இருந்து வாசலில் பெரியதொரு நீத்துப் பூசனிக்காயைக் கட்டி வைத்தார். கூடவே திருஷ்டி பொம்மை ஒன்றையும் செய்துவைத்தார்...

இத்தனை நாளும் வாடகை வீடுகளில் மாறி மாறி இருந்து சலிப்படைந்த அவருக்கு சொந்த வீட்டில் குடியேறியமை பெரும் மகிழ்ச்சியையும், மனநிம்மதியையும் கொடுத்தது.

பின் வளவில் மா, கொய்யா, தேசிக்காய், தோடை எனப் பயன்தரும் மரங்களை நட்டும், முற்றத்தில் குறோட்டன் வகை மரங்களை நட்டும் அழகூட்டி மகிழ்ந்தார். 'பொன்னொச்சி' எனும் மஞ்சள் நிறப் பூ மரம் வீட்டுக்கு 'லட்சுமி' யாம் என்று நண்பன் கூறியதைக் கேட்டு பெரிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கன்றாகத் தேடிப்பிடித்துக் கொண்டுவந்து வாசலின் உட்பக்கம் நட்டுவிட்டார்.

மரக்கன்றுகளுக்குத் தினமும் நீர் ஊற்றும்போது மனதில் எழும் கற்பனைகளால் அவர் அடையும் பூரிப்பு எம்மாத்திரம்...

* * *

இராசதுரை வங்கியில் கடமையாற்றுகிறார். இவருக்கு ஆஸ்திக்கு ஓர் ஆணும் ஆசைக்கு ஒரு பெண்ணுமென இரு பிள்ளைகள்... இருவரும் படிப்பதில் ஒருவருக்கொருவர் சளைத்தவர்களல்லர்... மற்றவர்கள் பொறாமைப்படும் விதமாக பையன் யாழ். பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டிலும், பெண் அதே பல்கலைக்கழகத்தில் முதலாம் ஆண்டிலும் கல்வி கற்கிறார்கள். அவர்களைக்கொண்டு எந்தவேலையும் செய்வது கிடையாது. எல்லாவற்றையும் இராசதுரை தானே முன்னின்று செய்வார். பிள்ளைகள்மீது காட்டும் பாசத்திற்கீடாகப் படிப்பிலும் அதீத அக்கறை காட்டிவந்தார்...

மனைவி செல்லம்மா மீது அளவுகடந்த அன்பு.. 'அவவுக்கு தலையிடி என்றால் அவருக்குக் காய்ச்சல் வந்துவிடும்' என உறவினர்கள் கேலி செய்வதுண்டு. கணவனின் கூற்றுக்கு செல்லம்மா மறு வார்த்தை பேசியதே கிடையாது.

* * *

ஆறு மாதங்களில் மரக் கன்றுகள் ஆச்சரியப்படத்தக்க வளர்ச்சியைக் கண்டதற்கு இராசதுரையின் இடைவிடாத முயற்சியே காரணம். அவ்வப்போது இலை, குழை, சருகுகள், உலர்ந்த மாட்டுச் சாணம் போன்றவற்றைப் பசளையாகப் புதைத்து அவற்றின் வளர்ச்சிக்கு வலுவூட்டினார்.

பொன்னொச்சியில் மஞ்சள் நிறப் பூ பூத்தபோது அவர் அடைந்த மகிழ்ச்சிக்கு அளவேயில்லை. மற்றவர்கள் பேசிக்கொள்வதிலிருந்து அந்த மரத்தை 'அதிஸ்ர லட்சுமி' என்றே நம்பினார். மரம் பூப்பதனால் தமது வாழ்வும் செழிக்கும் என்ற எண்ணமே அவரது மகிழ்வுக்குக் காரணமாக இருந்தது.

* * *

"நாட்டு நிலமை வரவர மோசமாப்போகுதுங்க. பிள்ளகளையும் வச்சிருக்கிறநாங்க..."

"நாங்க என்ன செய்யிறது... அவங்கட படிப்பைக் குழப்புறதா?... நீ ஒண்டும் யோசியாத அவங்களுக்கு எதுவும் நடவாது. அந்த நம்பிக்கை எனக்கிருக்கு..."

மனைவிக்கு ஆறுதல் சொல்லிவிட்டு வேலைக்குக் கிளம்ப ஆயத்தமானார். அவர் முகத்தில் வழமையான சந்தோஷம் இல்லாமையை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டு செல்லம்மா பதறிப்போனாள். தனது கேள்வி அவரின் மனதில் சலனத்தைப் புகுத்திவிட்டது என்று நினைத்து தன்னையே நொந்து கொண்டாள்.

வேலைக்குப் போகும்போது மனைவியைத் திரும்பித் திரும்பிப் பார்த்தவாறே சென்றார்...

மனைவியின் கண்களிலிருந்து அவளையறியாமல் நீர் வெளியேறியது...

* * *

இராசதுரை வங்கியில் அமைதியிழந்து காணப்பட்டார். நாட்டில் உருவாகியுள்ள அசாதாரண சூழ்நிலை பிள்ளைகளை வைத்திருக்கும் ஒவ்வொரு பெற்றோரினதும் அமைதியைக் கெடுத்துள்ளதென்பது உண்மையே. இதற்கு இராசதுரை மட்டும் விதிவிலக்கா?

தேநீர் அருந்திக்கொண்டிருந்த இராசதுரையின் அருகாமை வந்த முகாமையாளரிடமிருந்து கிடைத்த முழுமையற்ற, அதிர்ச்சியான செய்தியை நம்பமுடியாமல் உடனடியாகவே வீட்டுக்குப் புறப்பட்டு விட்டார் இராசதுரை.

அவரின் மனவேகத்திற்கு அவரது துவிச்சக்கரவண்டி ஒத்துழைக்க மறுத்தது. வியர்க்க வியர்க்க மிதித்து அதனைச் செலுத்திக் கொண்டிருந்தார்...

வீட்டுக்கு அண்மையிலுள்ள பிரதான வீதியில் சனக்கூட்டம்... புழுதி படிந்த காட்சிகள்...

வீட்டுக்குப் போகவேண்டிய குறுக்கு ஒழுங்கைக்குள் திரும்பியபோது தடுமாறிவிட்டார்...

அந்தக் கணம் ஆயிரம் வலு மின்சாரம் தாக்கியதைப்போன்ற அதிர்ச்சி அவருக்கு... கண்களை மூடி மூடி விழித்தார்.

சைக்கிளை மேற்கொண்டு செலுத்த அவரால் முடியவில்லை. அப்படியே விட்டுவிட்டு சனக்கூட்டத்தை விலக்கிக்கொண்டு வீட்டைத் தேடி ஓடினார்.

இதயம் கட்டுப்பாட்டை இழந்து துடித்துக்கொண்டிருந்தது... அதனைத் தாங்கிக்கொண்டு நடந்தார்.

வெளி வாசலில் குழுமி நின்றவர்கள் வழிவிட்டு நின்றனர். வாசலுக்குள் நுழைந்தவர் பக்கத்தில் புழுதி தோய்ந்து காணப்பட்ட பொன்னொச்சி மரத்தில் தரித்து நின்று வீட்டை பார்த்தார்...

அந்தக் காட்சி...

அதிர்ச்சிமேல் அதிர்ச்சி அவருக்கு...

அழுகுரல்கள் காற்றோடு கலந்து வந்தன...

தன் கண்களையே நம்ப முடியாமல் கையால் துடைத்துவிட்டுப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தார்.

வீடு முற்றாக நொருங்கிக் கிடந்தது...

அந்தக் கணம்...

இதயத்தை யாரோ சம்மட்டியால் தாக்கியதுபோல உணர்ந்தார்...

ஓர் அடிகூட எடுத்துவைக்க அவரால் முடியவில்லை...

கண்கள் கலங்கியிருந்தன...

கலங்கிய கண்களுடன் சுற்றும்முற்றும் தேடினார்..

அவரினது தேடலின் காரணம் அங்கு நின்றவர்களுக்குப் புரிந்திருக்கவேண்டும்...

"குண்டு விழேக்க செல்லம்மா உள்ளதான் இருந்தாவுங்க... கல்லுகளுக்க கிடந்துதான் அவைய எடுத்து பொடியள் ஆஸ்பத்திரிக்கு கொண்டுபோயிருக்கிறாங்க. அவ..."

"அவ..."

தகவலைச் சொல்லிக்கொண்டிருந்த தமது உறவுக்காரப் பெண்ணின் கண்கள் கலங்குவதை அவதானித்த அவர் அங்கு நின்றவர்களின் முகங்களை ஏக்கத்துடன் பார்த்தார்...

"அவ... எங்களை விட்டுப் போயிற்றாவுங்க..."

இராசதுரையின் முகத்தில் அதிர்ச்சியின் கீறல்கள்...

"செல்லம்மா..."

அலறல் சத்தம் வானம் பிளந்ததுபோல இருந்தது...

இராசதுரை மயங்கிச் சரிந்தார்...

நின்றவர்கள் தாங்கிக்கொண்டனர்...

* * *

"இரக்கமில்லாம மூண்டு குண்டுகள அடுக்கடுக்காப் போட்டானே!..."

"நிலையம் பாத்துக் கட்டின இத்தின வீடுகளும் நொருங்கிப் போயிற்றே..."

இராசதுரையின் காதுகளில் லேசாக நுழைந்தது பெண்ணின் குரல்... ■

*1990களில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 02 முச்சந்தி

மூன்று மைல் தூரத்தைக் கடந்து, அம்மன் கோவில் ஒழுங்கைக்குள் சுந்தரின் 'சுப்பர் கப்' மோட்டார் சைக்கிள் திரும்பும்வரை, பின்னால் இருந்த கணேஷ் எங்கு போகிறோம் என்பதை அறியாமலே இருந்தான்...

மறுநாள் காலை கொழும்புக்குச் செல்லும் விமானத்தில் சுந்தர் ஏறிவிட்டால் திரும்ப எப்போது சந்திக்க முடியுமோ? என்ற ஏக்க உணர்வின் தாக்கத்தால் சுந்தரிடம் எதையும் கேட்க மனமின்றிப் பின்னாலே அமைதியாய் இருந்தான்.

அம்மன் கோவில் ஒழுங்கைக்குள் திரும்பும் வரை பொறுமையாயிருந்த கணேஷினால் தொடர்ந்தும் இருக்க முடியவில்லை. சுந்தரின் காதுக்குக் கிட்ட முகத்தை நெருக்கி;

"எங்கேயடா போறாய்?"

"சோதிடரட்ட... உனக்குச் சொன்னா நீ விதண்டாவாதம் கதைப்பாயடா... நான் இத்தாலிக்குப் போறத்துக்கிடையில என்ர குறிப்ப சோதிடரட்ட காட்டிவரச்சொல்லி அம்மா பெரிய கரச்சல் படுத்துறாவடா. அதுதான்..."

சுந்தர் சொல்லி முடிப்பதற்கும் சோதிடரின் வீடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதற்கும் சரியாக இருந்தது.

இருவரும் மோட்டார் சைக்கிளிலிருந்து கீழே இறங்கி அதனை நிறுத்துவதற்கு இடம்தேடினர்.

யாழ்ப்பாணத்து வீதியோரங்களிலெல்லாம் 'இங்கே வாகனங்கள் நிறுத்த வேண்டாம்' எனப் போடப்பட்டிருக்கும் அறிவித்தல்கள் இங்கே காணப்படவில்லை.

தயக்கமின்றி மோட்டார் சைக்கிளை வீதியின் ஓரம் நிறுத்திவிட்டு இருவரும் வீட்டினுள் நுழைந்தார்கள்.

சோதிடர் புன்னகையுடன் வரவேற்று இருக்கும்படி கூறினார். இருவரும் பதிலுக்குப் புன்னகை செய்தவாறு அவர் காட்டிய இருக்கையில் அமர்ந்தனர்.

கணேஷிற்குத் தெரியாமல் தான் கொண்டுவந்த குறிப்பை சோதிடரிடம் கொடுத்தான் சுந்தர். நிதானமாகப் பெற்றுக்கொண்ட அவர் அதனைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தார். கணேஷ் ஏளனமாகச் சிரிப்பதை சுந்தர் பார்க்காமலில்லை.

"தம்பி இந்தக் குறிப்பில எந்தப் பிழையும் சொல்லுறத்துக்கில்ல... தம்பி! உங்களுக்கு பதினாலு வயசு நடக்கிறபோது தத்து ஒண்டு வந்திருக்கவேணுமே..."

"ஓமுங்க ஐயா."

சோதிடர் உண்மையைக் கண்டுபிடித்து விட்டாரே என்ற சந்தோஷம் அவனுக்கு...

"எனிமேல் உமக்கு எந்தப் பிரச்சினையும் இல்லை... எங்க, கையப் பார்ப்பம்."

சுந்தர் வலது கையைக் காண்பித்தான்.

"... ஆயுள்ரேகை கெட்டியாய்த்தான் இருக்கு. தம்பி வெளிநாடு போகப்போறீங்க போலயிருக்கு... உங்கட ஜாதகம் அப்பிடித்தான் சொல்லுது. போனா நல்லாயிருப்பீங்க தம்பி..."

சுந்தர் திறந்த வாய் மூடாமலே தலையசைத்துச் சிரித்தான். அளவிடமுடியாத சந்தோஷம் அவனுக்கு... கணேஷைக் கடைக் கண்ணால்ப் பார்த்தான்.

அவன் முகத்திலும் சந்தோஷத்தின் வெளிப்பாடு தெரிந்தது. சிரிப்புடன் சோதிடரின் கையில் இரண்டு நூறு ரூபாய்த் தாள்களைத் திணித்துவிட்டு குறிப்பை மீளப் பெற்றுக்கொண்டு இருவரும் விடைபெற்று வெளியேறினர்.

* * *

சோதிடர் வீட்டிலிருந்து புறப்பட்டது முதல் தலைகால் புரியாத சந்தோஷத்தில் மோட்டார் சைக்கிளை வேகமாகச் செலுத்திய சுந்தர் விரைவாகவே கணேஷின் வீட்டை அடைந்தான்.

"கணேஷ் எனக்கு நேரம்போகுதடா... இப்ப போனாத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'கேவ்யூ'வுக்கு முதல் போயிடலாம். எனி 'கொன்வே' வராது பாதையும் திறந்திடுவாங்க..."

"சரியடா..."

"கணேஷ்! நீ காலமைக்கு ஸ்ரேசனடிக்கே வாவன். நான் அங்க ஆறரை மணிக்கெல்லாம் வந்திடுவன். நீ வீட்ட வந்து அலையத் தேவையில்ல."

கணேஷ் தலையசைத்து விடைகொடுத்தான்...

தனது உயிர் நண்பனைப் பிரியப் போகின்றோமே என்ற வேதனை அவன் இதயத்தை வருடத்தான் செய்தது.

* * *

இரவு பூராவும் சரியான நித்திரையின்றிப் புரண்டுகொண்டு கிடந்த கணேஷ், அதிகாலை ஆறு மணிக்கே யாழ். புகையிரத நிலையத்திற்கு அண்மையில் விமானப் பயணிகள் கூடுமிடத்திற்கு வந்துவிட்டான். கூட்டத்தோடு கூட்டமாய் நின்ற அவன், வீதியையே வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான்.

ஏழு மணியாகிவிட்டது...

சுந்தர் இன்னமும் வரவில்லை.

விமானப் பயணிகள் நிரையாக அழைத்துச் செல்லப்பட்டார்கள்.

பயணிகளையும் வீதியையும் மாறிமாறிப் பார்த்தவாறு நின்றான்...

சற்று நேரத்தால் விமானப் பயணிகளை ஏற்றிய பேருந்து வண்டி புறப்பட்டுச் செல்லும் சத்தம் கேட்டதும் அங்கு நின்ற கூட்டம் கலைந்து செல்லத்தொடங்கியது.

வேறு வழியின்றி அவனும் துவிச்சக்கரவண்டியை எடுத்துக் கொண்டு சுந்தரின் வீடுநோக்கிப் புறப்பட்டான்.

* * *

எண்ண அலைகளுடன் வேகமாய்ச் சென்றுகொண்டிருந்தவன் சட்டென வேகத்தைக் குறைத்தான்.

கண்ணுக்கெட்டிய தூரத்திலிருந்த முச்சந்தி, ஆட்களால் நிறைந்துள்ளதுபோலக் காணப்பட்டது... ஊர்வலம் செல்வதாக நினைத்தான்...

அதனைக் கடந்துதான் சுந்தரின் வீட்டுக்குச் செல்ல வேண்டும். அதனால் குறைந்த வேகத்திலேயே சென்றுகொண்டிருந்தான்...

ஊர்வலம் அசைந்ததாக இல்லை...

முச்சந்தியை நெருங்கியபோதுதான், தான் ஊகித்தது தவறு என்று உணர்ந்தான்.

சந்தியில் ஆட்கள் கூட்டமாக நின்றனர். சிலர் போவதையும் வருவதையும் காணக்கூடியதாக இருந்தது.

சனக்கூட்டதை நெருங்கிய கணேஷ், மற்றையோரைப்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தானும் துவிச்சக்கர வண்டியை ஓரமாக நிறுத்திவிட்டு கூட்டத்திற்குள் நுழைந்தான்.

நெரிசலாக நின்ற ஆட்களை மெல்ல மெல்ல விலக்கி, தலையை நுழைத்துப் பார்த்தான். நடுவீதியில் இரத்த வெள்ளத்தில் ஒரு உருவம் கிடப்பது தெரிந்தது.

'நெடுக இதுதானே நடக்குது. எந்தப் பாவியோ...?'

அவன் மனம் பரிதாபப்பட்டது.

உருவத்தை அடையாளம் காணும் நோக்குடன் எப்படியோ கூட்டத்திற்குள் நுழைந்து சடலத்தை நெருங்கிவிட்டான்.

மிக அண்மையில் சென்று அதனைப் பார்த்த அவன், தனது இதயம் வெடித்துச் சிதறுவதைப்போல உணர்ந்தான்...

"சுந்தர்..."

குரலை மட்டுமே உரத்து உச்சரிக்க அவனால் முடிந்தது. அவனுடல் சிலிர்த்து - உரோமங்கள் நிலைத்து வியர்த்துக்கொட்ட, கண்கள் மங்கத் தொடங்கின... மேற்கொண்டு அவனால் நிற்கமுடியாமல் கூட்டத்தினர் மீது சாய்ந்தான்...

* * *

கணேஷ் கண் விழித்தபோது அவனது நண்பர்கள் சிலர் சூழ நின்றார்கள்...

அவர்களிடம் எதையோ கேட்டிடத் துடித்தான். இயலாமையால் வார்த்தைகள் வெளிவர வில்லை. கண்கள் மட்டும் பேசின... அதை அவனது நண்பர்கள் புரிந்துகொண்டிருக்கவேண்டும்...

"ராத்திரி கேவ்பூ நேரம் ஆரோ ரெண்டு மூண்டு பேர் வந்து சுந்தரை எழுப்பி இழுத்துக்கொண்டு போனாங்களாம். விடியப் பார்த்தா சந்தியில சுட்டுப்போட்டிருக்கிறாங்க..." ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 03 வேப்பம் மரம்

இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் இறந்த அவரது மனைவி கனகத்தின் நினைவுகள் என்றுமில்லாத வாறு உயிர்த்தெழுந்தவண்ணம் இருந்ததனால், சின்னையா நித்திரையின்றி படுக்கையில் புரண்டு புரண்டு கிடந்தார்... கண் எரிவு அவருக்கு எரிச்சலை கொடுத்தது. எதையோ யோசித்தவராய் திடீரென படுக்கையை விட்டெழுந்து முற்றத்திற்கு வந்தார்.

மாரிகால பூரண நிலவின் ஒளி இரவைப் பகலாக்கிக் காண்பித்தது... பகலெல்லாம் சனசந்தடி களால் நிறைந்து காணப்படும் அந்த வீதி ஊரடங்குச் சட்டம் காரணமாக உறங்கிக்கிடந்தது.

உள்ளத்தின் அடியிலிருந்து எழுந்த பெருமூச்சை வெளியேற்றியவாறு கண்களைச் சுழற்றினார். காணியின் வடக்குப் பக்கம் கம்பீரமாய் நின்ற வேப்பம் மரம் அவரது கண்களை வலிந்திழுத்தது.

வேப்பம் மரத்தையே பார்ப்பதற்கென எழுந்து வந்தவர்போல அதனையே வெறித்துப் பார்த்துக் கொண்டு நின்றார்...

அவரது கண்கள் கலங்கின...

* * *

சின்னையாவுக்கு மரங்கள் நடுவதில் எவ்வித நாட்டமுமில்லாதபோதும், அவர் மனைவி கனகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எதிர்மாறாக இருந்தாள். ஒருநாள் எங்கிருந்தோ வேப்பம் மரக்கன்று ஒன்றைக் கொண்டுவந்த அவள், தனது விருப்பப்படியே காணியின் வடக்குப் பக்கம் நட்டுவிட்டாள்.

'அந்த இடத்தில் நட்டால்தான் வீட்டுக்கும், வீட்டிலுள்ளவர் களுக்கும் நல்லமாம்' என்று யாரோ சொன்னதாக அடிக்கடி நினைவுகூருவாள்.

தனது அல்லது அயலவரின் பிள்ளைகள் விளையாடும்போது அந்த வேப்பமரக் கன்றைத் தொட்டுவிட்டால் பத்திரகாளியாகவே மாறிவிடுவாள். அதனால் பிள்ளைகள் விளையாடும்போது மிகவும் அவதானமாக இருப்பார்கள்.

நாள் முழுவதும் கன்றுக்கு வெயில் படுவதனாலும், கனகத்தின் தவறாத தண்ணீர் ஊற்றலினாலும் அந்தக் கன்று விரைவாகவே மரமாகியது.

ஒவ்வொரு நாளும் காலையில் எழுந்தவுடன் அதனைத் தரிசிப்பதுதான் கனகத்தின் முதல் வேலை.

மரம் வளர்ந்து கிளை பரப்பி பெரும் விருட்சமாகும் வரை அவள் அதன் நினைவாகவே இருந்தாள்...

பேரப்பிள்ளைக்கு அதன் கொப்பில் ஊஞ்சல் கட்டி ஆடவிடவேண்டுமென்ற அவளது ஆவல் நிறைவேறியபோது கோடி கிடைத்ததுபோல மகிழ்ந்தாள்.

தனக்கு நேரம் கிடைக்கின்றபோதெல்லாம் பிள்ளைகள், பேரப்பிள்ளைகள், ஏன் கணவனோடுகூட வேப்பமர நிழலில் ஓய்வெடுப்பதை பெரும் கொடையாகக் கருதினாள். எவரும் வராவிட்டாலும்கூட தனியாகவே மரத்தடியில் அமர்ந்துகொள்வாள்.

மின்சார சபையினர், வேப்பம் மரத்தில் வீதிப்பக்கமிருந்த ஒரு கொப்பு தமக்கு இடையூறு என்று தறித்தபோது கனகம் பட்ட பாட்டையும், அவர்களோடு தர்க்கப்பட்டதையும் சொல்லவேண்டியதே யில்லை. அன்று பூராவும் உணவு உண்ணாமல் அழுகையுடனே இருந்தாள். அவ்வளவுக்கு, எல்லாவற்றிற்கும் மேலாக அந்த வேப்பம் மரத்தை நேசித்தாள். 'வீட்டுக்கொரு மரம் வைத்தால்தான் நாட்டுக்கு மழை பெய்யும்' என்பது அவளது தாரக மந்திரம்.

தான் இறந்த பின்னர் இந்த மரத்தின் கீழேதான் தனது உடலை வைத்திருக்கவேண்டுமென்று பேரப்பிள்ளைகளுக்கு அடிக்கடி அவள் கூறிவந்ததால், அவள் இறந்த பின்னர் அவளது விருப்பப்படியே செய்தார்கள். அதனால், அந்த மரத்தை கனகத்தின் நினைவுச் சின்னமாக, கனகத்தின் வாசஸ்தலமாக, ஒரு புனித மரமாக கருதி வீட்டிலுள்ளோர் அனைவரும் வாழ்ந்து வருகின்றனர்.

* * *



கலையார்வன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னையா விம்மி விம்மி அழுதார்.

மேற்கொண்டு அங்கே நிற்க முடியாமல் உள்ளே சென்று படுக்கையில் சரிந்தார்...

அதிகாலை வெளிக் கதவில் யாரோ தட்டிச் சத்தம் கேட்கும் போதுதான் கண்விழித்தார். சோம்பலை முறித்து எழுவதற்கிடையில் பேத்தி எதிர்கொண்டாள்...

"தாத்தா! ஆக்கள் மரம் வெட்ட வந்திருக்கிறாங்க..."

'பாதுகாப்புக் காரணத்திற்காக வீதிக்கு அருகிலுள்ள மரங்களைத் தறிக்கவேண்டும்' என, நேற்று படையினரால் விடுக்கப்பட்ட அறிவித்தல் அப்போதுதான் அவர் நினைவுக்கு வந்தது.

* * *

வீதியில் சற்றுத் தூரத்தில் மரமொன்றில் பொருத்தப்பட்டிருந்த கிளைமோர் குண்டு வெடித்ததன் பின்னர், அதனைக் காரணமாக வைத்து மரத்தைத் தறிக்கவேண்டுமென்ற அறிவித்தல் கிடைத்தவுடன் சின்னையா ஆடிப்போயிற்றார்.

செய்துமுடிக்க வேண்டிய கட்டாயம்...

கிளைமோர் வைத்தவர்களை மனதுக்குள் ஏசிவிட்டுச் சென்றவர், மரக்காலைகளெல்லாம் அலைந்து மரத்தைத் தறிப்பதற்கான ஏற்பாடு களைச் செய்வதற்கிடையில் போதும் போதுமென்றாகிவிட்டது.

ஒரு சிறு கொப்பைக்கூட எரிக்கப் பயன்படுத்தக் கூடாதென்பதில் உறுதியாக இருந்தார். ஏனென்றால்; அந்த மரத்தின் ஒவ்வொரு கொப்பிலும் கனகம் வாழ்கின்றாளென்பது அவரது நம்பிக்கை. இதுவரை வேப்பம் பட்டை எடுப்பதற்குக்கூட எவரையும் அனுமதித்ததில்லை.

* * *

மரம் வெட்ட வந்தவர்கள் தங்கள் வேலையைத் தொடர்ந்தனர். கிளைகள் ஒவ்வொன்றாய் விழுந்துகொண்டிருந்தன.

சின்னையாவின் இதயத்தில் வலி...

விழி நிறைந்த நீர்...

கண்வெட்ட மறந்தவராய்ப் பார்த்துக்கொண்டிருந்தார்.

சிறிது நேரத்தில் மரம் கிளைகளையிழந்து மொட்டையாகியது...

அடி மரத்தைச் சுற்றி கிடங்கு வெட்டினர்..

மரத்தின் அடியைத் தறிக்கத் தொடங்கினர்...

மரத்தில் விழும் ஒவ்வொரு கோடரிக் கொத்தும் சின்னையாவுக்கு இதயத்தில் விழும் அடியாக இருந்தது.

சில மணித்துளிகளில்;

பலருக்கு நிழல் தந்த அந்த வேப்பம் மரம் பலத்த சத்தத்துடன் தரையில் விழுந்தது.

சின்னையா மரத்தை வெறித்துப் பார்த்தவாறே இருந்தார். அவர் சுயநிலை இழந்துவிட்டதை அப்போது எவரும் அறியவில்லை... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 04 தண்ணீர்

கடற்றொழிலால் கிடைத்த கை நிறைந்த வருவாயோடு மூன்று பெண்கள் ஒரு பையனென நான்கு பிள்ளைகளுடன் சிறப்புடன் வாழ்ந்துவந்தனர் சேவியர் - மேரியான் குடும்பத்தினர். குருநகரின் கடற்றொழில் சிறப்பிற்கு இவர்களது வாழ்வும் ஓர் எடுத்துக்காட்டு.

1995 இல் ஏற்பட்ட இடப்பெயர்வு அவர்களின் வாழ்க்கைப் பாதையை மாற்றியது... இடம்பெயர்ந்த கையோடு வன்னிக்குச் சென்று ஒரு வருடத்திற்குள் சிலவற்றை விரும்பியோ விரும்பாமலோ ஜீரணிக்க வேண்டியவர்களாக இருந்தார்கள்.

ஒரேயொரு பையனென கண்ணுக்குக் கண்ணாய் வளர்த்த மூன்றாங்கால் பையனை இழந்தனர்... இரண்டாமவள் தனது விருப்பப்படியே நாச்சிக்குடாவில் இந்து மதப் பையனைத் திருமணம் செய்துகொண்டாள். மூத்தவளுக்கு குருநகர்ப் பையனை முறைப்படி திருமணம் பேசி ஓரளவு சிறப்பாகச் செய்து முடித்தார்கள். அவர்கள் தனிக்குடித்தனமாக ஜெயபுரம் சென்றுவிட்டார்கள்...

நாச்சிக்குடாவில் நிகழ்ந்த விமானக்குண்டுத் தாக்குதலையடுத்து பலரும் இந்தியாவுக்கு இடம் பெயர்ந்தபோது சேவியரும் மேரியானும் அவர்களது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடைசி மகளும் இந்தியாவுக்குச் சென்றார்கள்.

இந்தியாவில் தொடர்ந்து இருக்கப் பிடிக்காமல் 2004 ஆம் ஆண்டின் இறுதியில் குருநகருக்குத் திரும்பிவந்தபோது சேவியரும் மேரியாளும் மட்டுமே வந்தார்கள். அவர்கள் கூடவே சென்ற மகள் இந்தியாவிலே மைத்துனன் முறையிலான ஒருவனைத் திருமணம் செய்து அங்கேயே தங்கிவிட்டாள்...

* * *

சேவியரும் மனைவியும் குருநகரிலுள்ள தமது சொந்த வீட்டில் மீண்டும் குடியேறிவிட்டனர்...

முன்னர் தொழிலுக்குச் சம்மாட்டியாய் இருந்து பலரை வைத்து தொழில் நடத்திய சேவியர் இன்று தொழிலாளியோடு தொழிலாளியாக தானும் தொழிலுக்குப் புறப்பட்டுவிட்டார்.

சமாதானம் நிலவிய அக்காலத்தில் மெல்லமெல்ல அவர்கள் வாழ்வு செழிப்புறத் தொடங்கியபோது இருதய நோய் சேவியரின் உடலோடு ஒட்டிக்கொண்டது... அது உடலில் அதிக கவனம் செலுத்த வேண்டிய கட்டாயத்தையும் அவருக்கு ஏற்படுத்திவிட்டது.

வீட்டில் திருத்தவேலைகள் செய்யவேண்டியிருந்ததால் சிறுகச்சிறுகச் சேமித்த பணத்தைக்கொண்டு அவற்றைத் திருத்திக் கொண்டனர்...

கையிலிருந்த காசுகள் செலவழிந்து புதிய தேட்டத்திற்குத் தயாராகும் நேரம், வந்தது ஆவணி 11.

2006 ஆவணி 11 இல் திடீரென உருவான நாட்டின் அசாதாரண சூழல் கடற்றொழில்களை மட்டுமல்ல பல தொழில்களையும் முற்றாக முடக்கி விட்டது.

பொருட்களின் தட்டுப்பாடு, வியாபாரிகள் பதுக்கல், பல மடங்கு விலையேற்றம், வருவாயின்மை, இடப்பெயர்வு, திகில் நிறைந்த வாழ்வு. இவை ஆவணி 11 கொடுத்த கொடைகள்... அந்தக் கொடைகளைச் சுமக்க முடியாமல் சுமந்த மக்களில் பலர் ஒருவேளை உணவுகூட உண்ண முடியாமல் தவித்தார்கள்...,

பாண்கூடக் கிடைக்காமல் பரிதவித்தார்கள்...,

கையில் பணமின்றித் துடித்தார்கள். இவற்றால் பலர் நோயாளராகவும், நோயாளர் மேலும் பாதிக்கப்பட்டவர்களாகவும் ஆனார்கள்...

ஒருவேளை உணவை உண்பதற்காக நிவாரணங்களைத் தேடி மக்கள் கூட்டம் கூட்டமாக அலைந்துகொண்டிருந்தனர்...

வருவாயைத் தேடி ஆலாய்ப்பறந்தனர். இதனால் அடிபட்டு இடிபட்டு எடுத்த நிவாரணத்தில் ஒரு பகுதியை விற்பதற்கும், அதிகாலை நாலு மணி முதல் வரிசையாகநின்று இராணுவத்தினரின் கடைகளில் பொருட்களைப் பெற்று அதனைக் கூடுதல் விலைக்கு விற்றுப் பணத்தைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெறுவதற்கும் பலர் அலைந்தனர்...

உணவுப்பொருட்களைப் பெறுவதற்கு கூட்டுறவுக்கடைகளுக்கு முன்னால், நடுச்சாமம் முதல் வரிசையாய் நின்று பலரிடம் ஏச்சும் பேச்சும் வாங்கி, நெரிபட்டு விழுந்தும் பொருட்கள் கிடைக்காமல் அலையும் துன்பம் நிறைந்த வரலாற்றை ஆவணி 11 ஏற்படுத்திவிட்டது.

இந்த நிலை சேவியர் குடும்பத்திற்கென்ன விதிவிலக்கா?... எடுக்க முடிந்த கால் இறாத்தல் பாணும் தண்ணீரும்தான் இரண்டு நாட்களின் உணவாக இருந்தது...

கையில் பணமில்லை... தேவையான உணவில்லை... இருவரும் சோர்ந்துபோயினர். மறுநாள், கூட்டுறவுக் கடைகளில் நிவாரணம் கொடுக்கப்போவதாகத் தகவல் வெளியாகியதும்; தம்முடைய நிவாரண அட்டையுடன் அதிகாலை 5 மணிக்கு முன்னரே கூட்டுறவுக்கடை நோக்கிப் புறப்பட்டுவிட்டார் சேவியர்.

கூட்டுறவுக் கடையின் முன்னால் நீண்ட வரிசையில் ஆட்கள். வேறு வழியின்றி இறுதி ஆளாக நின்றுகொண்டார். அரைமணி நேரத்திற்குள் அவர் பின்னாலேயும் நீண்ட வரிசை காணப்பட்டது. அதைக் கண்டதும் சேவியருக்கு உள்ளூர ஆறுதல்...

காலை 9 மணிக்குப் பொருட்கள் விநியோகம் ஆரம்பமாகியது.

பலர் பொருட்களைப் பெற்றுச் சென்றும் ஓர் அடிகூட வரிசை நகரவில்லை. அவ்வளவுக்கு நெருக்கமாக இறுகிப்போய் நின்றது கூட்டம்.

நேரம் செல்லச் செல்ல வரிசையின் நெருக்கம் குறைந்ததும் எறும்புபோல நகரத் தொடங்கியது...

1 மணிக்கு மேலாகிவிட்டது.

காலை உணவு, மதிய உணவு உண்டிட வாய்ப்பில்லாமல் நிற்கும் மக்களில் பலர் சோர்ந்து, தளர்ந்துபோய் நின்றனர். வெயில் உச்சி பிளந்திடும்போல இருந்தது.

ஊதிவிட்டால் விழுந்திடும் நிலையிலும் சிலர் காணப்பட்டனர்.

சோர்ந்து, சலிப்படைந்திருந்த சேவியர் தனக்கு முன்னால் நிற்பவர்களை எண்ணிப் பார்த்தார்.

இன்னமும் பத்துப் பேர் செல்லவேண்டும்...

மனதிற்குள் அளவிடமுடியாத ஆனந்தம்.

இப்போது ஒன்பது...

இப்போது ... எட்டு...

ஆவலுடன் தனக்குள் எண்ணிக்கொண்டிருக்கையில் திடீரெனக் கடைக்கதவு பூட்டப்பட்டது...

"நாளைக்குத்தான் சாமான்கள் கொடுப்பாகளாம்..."

பூட்டப்பட்ட கடைக்குள்ளிருந்து வெளியேறிய இருவர் கூறியதைக் கேட்டு, கடை முகாமையாளரை ஏசிவிட்டு திரும்பிச் சென்றனர் பலர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிலர் அங்கேயே தங்கி நின்றனர், சற்றுத் தாமதித்துக் கடையைத் திறந்து பொருட்கள் தருவார்கள் என்ற நம்பிக்கையில்.

'அரிசியையாவது எடுத்துப் போனால்தான் வீட்டில் கஞ்சியையேனும் குடிக்கலாம்' என்ற எண்ணம் அங்கு நின்ற எல்லோரிடமும் இருந்தது.

சேவியரும் அவர்களுடன் சேர்ந்தாற்போல் தங்கி நின்று பார்த்தார்... பயனில்லை.

"இண்டைக்கும் தண்ணீர்தான்..."

வயிற்றின் நச்சரிப்புத் தாங்கமுடியாமல் வாய் முணுமுணுத்தது...

கண்கள் சுற்றுவதுபோல இருந்ததால் கண்ணை வெட்டி வெட்டி விழித்தார்.

தொண்டை காய்ந்து தாகம் எடுத்தது...

தொடர்ந்தும் அங்கே தங்கி நிற்க விரும்பாமல் பல்லைக் கடித்துக்கொண்டு தார் வீதியில் இறங்கி நடந்தார்...

தார் அனலாகச் சுட்டது... தாங்கிக்கொண்டு நடந்தார்...

தொடர்ந்து நடக்க அவரால் முடியவில்லை.

உடல் வழமைக்கு மாறாக வியர்த்துக்கொட்டியது...

கண்களின் ஒளி மங்கிச் செல்ல தலை சுற்றியது.

சற்றுத் தடுமாறிவிட்டார்...

தன்னைச் சுதாரித்துக்கொண்ட அவர், கைகளை விரித்து தாங்கிக் கொள்ள ஆதாரத்தைத் தேடினார்...

எதுவும் கிடைக்கவில்லை...

மேற்கொண்டு நிற்க முடியாமல் நடுவீதியில் சோர்ந்து விழுந்தார்...

சற்றுத் தூரத்தில் நின்ற சிலர் ஓடிவந்து சேவியரைத் தூக்கினர்...

"தண் ணீர்... தண் ணீர்..."

சேவியரின் வார்த்தைகள் தடுமாறி வெளிவந்தன. ஒருவன் ஓடிச்சென்று தண்ணீரை எடுத்துவந்து சேவியரின் வாயினுள் பருக்கினான்.

ஒரு முறை விழுங்கினார்.

இரண்டாம் முறை விழுங்கவில்லை.

நீர் கடைவாயால் வெளியேறியது.

நடுக்கத்துடன் அவர் முகத்தில் நீர் தெளித்தனர்...

கைமீறிப் போன நிலையில் சேவியரின் உயிரற்ற உடல் வீதியோரமிருந்த நிழலில் வளர்த்தப்பட்டது...

தகவல் மேரியானைத் தேடிப் பறந்தது... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 05 காப்பகம்

உலகின் சொர்க்கமாக வர்ணிக்கப்படும் 'சுவிற்சர்லாந்து' நாட்டில், 'சூறிச்' விமானநிலையத்திலிருந்து 'லவுசானு'க்குப் போகும் விரைவுப் பாதையில் வேகமாகச் சென்றுகொண்டிருந்தது சிவப்புநிற 'அல்பா றோமியோ'.

வீதியின் இரு பக்கங்களிலும் கண்ணுக்கெட்டிய தூரத்தில் காணப்பட்ட அழகிய - உயர்ந்த - விசாலமான கட்டடங்கள், வியப்பூட்டும் விதம் விதமான மரங்கள், உயர்ந்த மலைகள் - மலைக்குன்றுகள், பச்சை நிறத்தைக் குறைவின்றிக் காட்சிப்படுத்தும் புற்தரைகள், ஆங்காங்கே மேய்ந்துகொண்டிருக்கும் உயர்ந்த - பருத்த மாடுகள், இடைக்கிடையே காணப்பட்ட பூந்தோட்டங்கள், வீதிகளில் போட்டிபோட்டவாறு விரைந்து செல்லும் பலவகை வாகனங்கள் போன்றவற்றைப் பார்த்து காரினுள் மெய்மறந்திருந்தனர் பிரதீபனும் - றோஸ்மலரும்...

யாழ்ப்பாணத்தில் குறுக்குமறுக்கானதும், வளைவுகளுடன் கூடிய ஒடுக்கமானதுமான வீதிகளை மட்டுமே பார்த்துப் பழகிய அவர்களுக்கு, போவதற்கும் வருவதற்குமென தனித்தனியான பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, பல தடங்களாக அமைத்து ஒருங்கிணைக்கப்பட்டு, அகன்று - நீண்டு செல்லும் வீதிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆச்சரியத்தை ஏற்படுத்தின..

விரைவுப் பாதையை ஊடறுத்து வாகனங்கள் செல்லா திருப்பதற்காய், அப்பாதைக்கு கீழாகக் குறுக்காகவும் - பாதைக்கு மேலாக ஊடறுத்தும் செல்லும் வீதிகள், வீதிகளுக்கெனப் போடப்பட்டுள்ள பாலங்கள், கழுவித் துடைத்ததுபோல் காணப்பட்ட விரைவுப் பாதையின் இருமருங்கையும் அழகூட்டும் செடிகள் - பூ மரங்களின் அலங்கரிப்புப் போன்றவை அவர்களை வியப்பிலாழ்த்தின.

மிதமிஞ்சிய வேகத்தில் ஒன்றுடனொன்று போட்டிபோடுவதைப் போல் தடங்களாக அமைந்த வீதியில் விரைந்து செல்லும் வாகனங்கள் அவர்களின் சிந்தனையைத் தொட்டதுடன், தாம் பயணிக்கும் வாகனமும் அவ்வாறே செல்வதை அப்போதுதான் உணர்ந்தனர்... பயம் அவர்களை ஆட்கொண்டது.

"தம்பி கொஞ்சம் மெதுவாப் போவன்..."

தந்தையின் உள்ளத்தில் எழுந்த பயம் காரணமாகவே கூறுகிறார் என்பதை உணர்ந்த சுரேஸ் சிரித்தவாறு,

"பயப்பிடாதீங்க அப்பா..., இஞ்ச இப்பிடித்தான் போக வேணும். மெதுவா ஓட ஏலாது... அப்பிடி மெதுவாப் போனா நாங்க எப்ப போய்ச் சேருறது?... நான் உங்களுக்காகக் குறைச்சுத் தானப்பா ஓடுறன்."

பிரதீபன் மௌனமானார்... றோஸ்மலர் ஏதோ சொல்ல முனைந்து சொல்லாமல் விட்டுவிட்டாள்.

இப்படியொரு அழகிய நாட்டை தமது வாழ்நாளில் பார்க்கமுடியுமென்று இவர்கள் கனவுகூடக் கண்டதில்லை. இளைய மகளின் திருமணத்திற்கென மகன் 'ஸ்பொன்சரில்' அழைத்ததனாலே இவர்களுக்கு வரக்கூடிய சந்தர்ப்பம் கிடைத்தது. அப்படி வந்ததனால் இரட்டிப்பு மகிழ்ச்சி அவர்களுக்கு...

* * *

பிரதீபன் - றோஸ்மலர் தம்பதிகளுக்கு மூன்று பிள்ளைகள் மூத்தவள் மஞ்சுளா, இரண்டாமவன் சுரேஷ். இவன்தான் முதலில் சுவிஸிற்கு போனவன். சுவிஸில் தனக்கு நிரந்தர வசிப்பிட அனுமதி கிடைத்ததும் மஞ்சுளாவுக்கு சுவிஸில் வசித்த தனது நண்பனை திருமணம் பேசி அவளது திருமணத்தையும், கூடவே தனது திருமணத்தையும் யாழ்ப்பாணத்தில் சிறப்பாகக் கொண்டாடி அவர்களையும் சுவிஸில் குடியேறச் செய்தான்.

மூன்றாமவள் பிரீத்தி. அவளையும் சுவிஸிற்கு வரச்செய்த பின்னர் மச்சான் முறையிலான ஒருவனைத் திருமணம்பேசி அதற்கான ஏற்பாடுகளையும் செய்தான். அந்தத் திருமணத்திற்கு பெற்றோரும் கலந்துகொண்டால் சிறப்பாக இருக்குமென்று எல்லோரும் விரும்பினதால் அவர்களையும் ஸ்பொன்சரில் அழைப்பித்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேஸ் தனது பொறுப்புக்களை குறைவின்றி நிறைவேற்றி வைப்பதனால் அவன்மீது பெற்றோர் பிரியமாகவே இருந்தார்கள். அவன் தானாகவே சகலவற்றையும் உணர்ந்து, தேவையானவற்றை அவ்வப் போது செய்துகொண்டேயிருப்பான். இது அவர்களுக்கு மகிழ்ச்சியைக் கொடுத்தது. இதனால் மகனைப்பற்றி மற்றவர்களிடம் பெருமையாகச் சொல்லிக்கொண்டேயிருப்பார்கள்.

* * *

லவுசானில் குடிசனங்கள் நெருக்கமாக உள்ள பகுதியில், உயர்ந்த மாடிக் கட்டடங்களின் மத்தியில், ஒரு கட்டடத்தின் முன்னாலிருந்த வாகனத் தரிப்பிடத்தில் கார் நிறுத்தப்பட்டது...

புதிதாக தைக்கப்பட்ட நீண்ட கோற்சட்டையுடன் பிரதீபன் இறங்க, சரிகை நிறைந்த 'பனாறஸ்' சாறியுடன் முந்தானையை இடுப்பில் சுற்றிச் சொருகியவாறு றோஸ்மலர் இறங்கினாள்...

வான்நோக்கி உயர்ந்திருக்கும் கட்டடங்களைச் சுற்றிச் சுழன்று பார்த்து இருவரும் மலைத்துப்போய் நின்றார்கள். கட்டடங்கள் அமைத்திருந்த சுற்றாடல்த் தரையில் சிறு குப்பைகூட இல்லாமல் அழகுறக் காணப்பட்டமை அவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியது. றோஸ்மலருக்கு தரையிலே உட்காரவேண்டும் போலிருந்தது...

யாழ்ப்பாணத்திலுள்ள வீடுகளின் சுற்றாடலை ஒருகணம் நினைத்துப்பார்த்தார் பிரதீபன். சிரிப்பு புட்டுக்கொண்டு வந்தது...

கார் வந்து நின்றதையும், பெற்றோர் வந்திறங்கியதையும் மாடியிலிருந்து பார்த்த மஞ்சுளா, காரைத்தேடி ஓடிவந்தாள். அவளைத் தொடர்ந்து மருமக்கள், பேரப்பிள்ளைகள் எனப் பலர் ஓடிவந்தனர்.

சிரித்த முகத்துடன் தங்களை எதிர்பார்த்துக்கொண்டிருந்த பெற்றோரைக் கட்டியணைத்து கன்னத்தில் முத்தம் கொடுத்தாள் மஞ்சுளா... அவளைத் தொடர்ந்து ஒவ்வொருவரும் தனித்தனியே கட்டியணைத்து கன்னத்தில் முத்தமிட்டுத் தமது அன்பைத் தெரிவித்து வரவேற்றனர்.

உறவுகளின் சங்கமத்தினால் றோஸ்மலரின் கண்களிலிருந்து வெளியேறிய ஆனந்தக் கண்ணீரை மஞ்சுளா துடைத்துவிட்டாள்...

எல்லோரும் காரைத் தேடிவந்து தம்மை அழைத்துச் செல்வதில் இருவருக்கும் அளவிடமுடியாத மகிழ்ச்சி. ஒருவரையொருவர் பார்த்து புன்னகைத்தனர்...

திடீரென றோஸ்மலரின் இதழிலிருந்த புன்னகை மாற, கண்கள் கேள்விக்குறியுடன் ஒவ்வொருதராய்ப் பார்த்துக்கொண்டன.

தாய், பிரீத்தியைத் தேடுவதை உணர்ந்த சுரேஷ்...

"பிரீத்திக்கு வேலையம்மா மத்தியானம் வந்திடுவாள்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுரேஷின் சமாதானத்தை ஏற்றுக்கொண்டதைப்போல் தாயின் உதட்டிலிருந்து மீண்டும் புன்னகை வெளியேறியது...

* * *

ஏழு மாடிக் கட்டடத்தில் இரண்டாவது மாடியிலிருந்த மஞ்சுளாவின் வீட்டிற்கு இருவரும் 'லிப்ற்' இல் அழைத்துச் செல்லப் பட்டார்கள்.

நுழைந்தும் நுழையாததுமாய் இளைய பேத்தி இருவரினதும் கையைப்பிடித்து இழுத்து தனது அறைக்குக் கூட்டிச்சென்றாள்.

அங்கே குவிந்து கிடந்த தனது விளையாட்டுப் பொருட்களைக் காண்பித்து ஏதேதோவெல்லாம் சொன்னாள். எதுவுமே அவர்களுக்கு விளங்கவில்லை.

தொடர்ந்து படுக்கையறை, சமையலறை, குளியலறை, பல்கனி போன்றவற்றைக் காண்பித்தாள்...

யாழ்ப்பாணத்து வீடுகளைப் போலல்லாமல் முற்றிலும் மாறுபட்ட அறைகளின் அமைப்பு, ஹோல் அலங்கரிப்பு, கம்பளம் விரிக்கப்பட்ட தரை மற்றும், தளபாடங்கள் காணப்பட்டமை அவர்களுக்குப் புதுமையாக இருந்தது.

மிருதுவான இருக்கையில் இருவரும் சாய்வாக அமந்தனர்... அவர்களுக்குச் சுடச்சுட 'நெஸ்ற்' கோப்பி வழங்கப்பட்டது. சுவைத்துக் குடித்தனர். அவர்களின் பிரயாணக் களைப்பிற்கு சொகுசான இருக்கையும், சூடான கோப்பியும் இதமாக இருந்தது.

பேரப்பிள்ளைகள் பிரதீபனின் மடியில் இடம்பிடிப்பதற்காக போட்டிபோட்டவாறு புரியாத மொழியில் வாக்குவாதப்பட்டுக் கொண்டிருந்தனர். அவர்களின் வாக்குவாதத்தைக் கேட்கவோ, பார்க்கவோ விருப்பமில்லாதவள்போல இருந்த றோஸ்மலர், கணவனைக் கடைக்கண்ணால்ப் பார்த்துவிட்டு திரும்பினாள்...

"அவக ஆறு மாதம் இஞ்சதானே இருக்கபோறாக. பிறகு விளையாடலாம். இப்ப விடுங்க... அவகளுக்கு பிளெயினில வந்த அலுப்பாயிருக்கும்..."

சுரேஷின் பேச்சைக் கேட்டு அவர்கள் விலகிச்சென்றாலும், அவர்கள் அதை விரும்பவில்லை என்பதை முகத்தைத் தொங்கப் போட்டபடி இருக்கையில் இருந்ததைக்கொண்டு ஊகித்தனர்.

"மஞ்சுளா! பிள்ளைகள் எங்களோட சேருதுகள்... ஆனா பேசுறத்துக்கு பின்நிக்குதுகளே!.."

"அதுகள் இப்பிடித்தானம்மா... நீங்க தமிழில சொல்லுறது அதுகளுக்கு விளங்குமம்மா. தமிழ் பேசவராது. எங்கட பிறெஞ்சைத்தான் பேசுங்கள்.."

பெருமையாகச் சொன்னாள் மஞ்சுளா...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

றோஸ்மலருக்கு இதயத்தில் சுள்ளென ஏதோ குத்தியதுபோல இருந்தது... பிள்ளைகளை ஏற இறங்கப் பார்த்துவிட்டு கணவனைப் பார்த்தாள்...

மஞ்சுளா சொன்னதைக்கேட்டு றோஸ்மலர் சங்கடப்படுவதைப் புரிந்துகொண்டார் பிரதீபன். அவள் மனதிற் பட்டதைச் சட்டெனச் சொல்லும் சுபாவமுடையவள் என்பதால், அவள் வாய் திறக்கும் முன்னர் தான் முந்திக் கொண்டார்..

"ஏன் பிள்ள நீங்க எண்டாலும் வீட்டில தமிழ் சொல்லிக் குடுக்க ஏலாதா? இப்ப பார் அதுகள் படுகிற பாட்ட... அதுகளுக்கு எங்களோட கதைக்க ஆசையிருந்தும் கதைக்க முடியாம திண்டாடுதுகள். தாய்மொழி அதுகளுக்கு முக்கியமம்மா... அப்பதான் பின்னுக்கு மற்றவங்களோட அந்நியப்படாம இருக்குங்கள்.."

பிரதீபனின் உபதேசம் மஞ்சுளாவுக்குப் பிடித்ததோ இல்லையோ பிள்ளைகளுக்கு ஓரளவு விளங்கியிருக்கவேண்டும். அவர்கள் தாயை ஏக்கத்துடன் பார்த்தார்கள் ...

மஞ்சுளா மௌனமாய் தலை கவிழ்ந்தாள்...

"அம்மா! அக்காட வீடு ரெண்டு அறைதானம்மா. அதால கொஞ்சம் வசதிக்குறைவு. எங்கட வீட்டபோவோம். அங்க ஓர் அறை சும்மாதான் இருக்கு."

"அப்ப பிரீத்தியும் உங்கட வீட்டையா இருக்கிறாள்?"

"இல்லையம்மா... அவள் புருஷனோட இருக்கிறா"

"புருசனோடையா?..."

ஆச்சரியத்துடன் இருக்கையைவிட்டு எழுந்தாள் றோஸ்மலர்... அவள் முகத்திலே திடீர் மாற்றம்... கோபத்தின் கீறல்கள் உற்பத்தியாகிக் கொண்டிருந்தன...

"என்னும் கலியாணம் செய்யவில்லையே... எப்பிடி...?"

"இஞ்ச எல்லாரும் அப்பிடித்தானம்மா..."

புன்னகையுடன் மஞ்சுளாவிடமிருந்து வந்த வார்த்தையை ஜீரணிக்க முடியாதவளாய் உடல் சிலிர்க்க தடுமாறி நின்றாள்... அவளை எரித்துவிடுவதைப் போலக் கோபமாய்ப் பார்த்தாள்.

மஞ்சுளா சற்றும் எதிர்பார்க்காத நிகழ்வாயினும் தன்னைச் சமாளித்துக்கொண்டு சிரித்தபடி தாயின் பக்கம் வந்தாள்...

"அம்மா! இது யாழ்ப்பாணமில்லையம்மா. இஞ்ச இதுதான் வழக்கமாயிருக்குது. நாங்க என்ன செய்யிறது? அதோட அவள் மூண்டு மாதமா முழுகாம இருக்கிறாளம்மா. அதுதான் கலியாணத்துக்கு அவசரப்பட்டனாங்க..."

கோபத்தால் றோஸ்மலரின் முகம் மேலும் சிவந்தது... கண்கள்

சிவந்தன... விழுங்கிவிடுவதைப்போல் மகனையும், மகளையும் மாறிமாறிப் பார்த்தாள். ஏதோ கேட்கக்கூடாத செய்தியைக் கேட்டதைப் போல், நடக்கக்கூடாதது நடந்ததைப்போல் நிலை குலைந்து நின்றாள்... அவளுதடுகள் துடித்தன...

"இந்தக் கண்றாவிக் கலியாணத்துக்குத்தானா எங்களக் கூப்பிட்டனீங்க..."

"அம்மா!... என்னம்மா சொல்லுறீங்க?"

"வேற என்ன சொல்லச் சொல்லுறாய்?... உனக்குத் தெரியாதாடி எங்கட பண்பாட்டப்பற்றி... உன்ர கலியாணத்துக்கு முன்ன உன்ன இப்பிடியாடி விட்டனாங்க. மானம் மரியாதையோட ஊரறிய செய்துவச்சனாங்க இல்லையா?... எல்லாருமாச் சேர்ந்து எங்களக் கூப்பிட்டுப்போட்டு இப்பிடி ஒரு இடியைத் தூக்கிப் போடுறீங்களே... என்ன சொன்னனி இது யாழ்ப்பாண மில்லையா?... இது யாழ்ப்பாணம் இல்லையெண்டு எனக்கும் தெரியும். நீ யாழ்ப்பாணத்தாள் தானேயடி?... யாழ்ப்பாணத்து மண்ணின்ர பண்பாடு கொஞ்சமாவது இருக்கவேண்டாம் உனக்கு... இப்பிடியெண்டு தெரிஞ்சிருந்தா வந்திருக்கவே மாட்டேன். எல்லாத்தையும் மூடி மறச்சிற்றீங்களே..."

பிள்ளைகளின் முகத்தைப் பார்க்க விரும்பாதவள்போல சுவரை வெறித்துப் பார்த்தபடியே மூச்சிழுக்க நின்றாள்.

"ஏன்புள்ள நீங்க நெடுக ரெலிபோன் எடுக்கிறனீங்கதானே. இதைப்பற்றி ஒரு வார்த்தையேனும் சொல்லவில்லையே!"

பிரதீபனின் கேள்வியுடன் எல்லோரும் மௌனமானார்கள். ஏன் பயந்தே போனார்கள் என்றும் சொல்லலாம்... அங்கு மௌனமே நீண்டு சென்றது.

மௌனமாய் இருப்பதே இப்போதைக்கு நல்லது என அவர்கள் கருதினார்கள். பழமைவாதத்தில் மூழ்கியிருக்கும் பெற்றோருக்கு ஆறுதலாக எடுத்துக்கூறி இரண்டொரு நாளில் புரியவைச்சிடலாம் என்ற நம்பிக்கையில் எதுவும் பேசாது விட்டுவிட்டார்கள்...

வீட்டில் அமைதி சூழ்ந்துகொண்டது...

குழந்தைகளுக்கும் நிலைமை புரிந்திருக்கவேண்டும், அவர்களும் அமைதியானார்கள்.

றோஸ்மலரின் முகத்தில் தோன்றிய கடுகடுப்பு மாறாமலே இருந்தது...

* * *

அழகாக அலங்கரிக்கப்பட்ட பிரமாண்டமான மண்டபம். ஆண்கள், பெண்கள், சிறுவர்களென அந்த மண்டபம் நிறைந்து காணப்பட்டது. பெண்கள் பண்பாட்டின் சின்னங்களாக சேலை, பஞ்சாபி, நீளப் பாவாடை அணிந்து காணப்பட்டனர். நகைக்கடைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விளம்பரம் செய்வதுபோல் விதம்விதமான நகைகள் அவர்களை அலங்கரித்திருந்தன. ஆண்களில் சிலர் சேலம்பட்டு வேட்டி அணிந்து, சால்வையால் இடுப்பைச் சுற்றிக் கட்டியிருந்தனர்.

மேடையிலே யாழ்ப்பாணக் கலாசாரத்தை எடுத்தோதும் முத்து மணவறை அழகாகக் காட்சியளித்தது. திருமணவிழாவின் பயன்படுத்த லுக்குத் தேவையான அம்மி, குடம், செம்புகள், குத்துவிளக்குகள் போன்ற அனைத்துப் பொருட்களுமே காட்சியளித்தன. யாழ்ப்பாணத்தில் நடைபெறும் திருமண விழாவாக மேடை காணப்பட்டது.

மணவறையில் மணமகன் வீற்றிருக்க குருக்கள் மந்திரம் சொல்லிக்கொண்டிருந்தார். சம்பிரதாய ரீதியிலான திருமணத்திற்குரிய அனைத்து நடைமுறைகளும் அங்கு கடைப்பிடிக்கப்பட்டன...

குறித்த முகூர்த்தத்தில் தாலி கட்டுவதற்கு ஏதுவாக மணப்பெண் அழைத்துவரப்பட்டாள். கூறைச் சேலை அணிந்தவாறு கால் பார்த்து நடந்துவந்த மணப்பெண், மணமகனுக்கு அருகாமையில் இருத்தப் பட்டாள்...

குருக்கள் சம்பிரதாய சடங்குகளை முடித்தபின்னர், திருமண வைபவத்தின் முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாகக் கருதப்படும் 'கன்னிகாதான'ச் சடங்கை (மணமகனின் பெற்றோரிடம் மணமகளின் பெற்றோர் தமது கன்னிப்பெண்ணைத் தானம் செய்து கொடுத்தலாகும்) நிறைவேற்றிவைக்க மணமக்களின் பெற்றோரை அழைத்தார்.

மணமகனின் சகோதரியும் அவள் கணவனும் மணமகனினது பெற்றோரினிடத்திலும், மஞ்சுளாவும் அவள் கணவனும் மணப் பெண்ணினது பெற்றோரினிடத்திலும் வீற்றிருந்தனர்...

திடீரென மண்டபத்தில் சலசலப்பு... அங்கிருந்த பலரது கண்கள் பிரதீபனையும், றோஸ்மலரையும் திரும்பத் திரும்பப் பார்த்துக் கொண்டிருந்தன...

இதுவரை மந்திரங்களைச் சமஸ்கிருதத்தில் சொல்லிய குருக்கள் கன்னிகாதானச் சடங்கிற்குரிய வார்த்தைகளை தூய தமிழில் சொல்லத் தொடங்கினார். மணமக்களின் பெற்றோர்களினிடத்தில் இருப்பவர் களும் உரிய சடங்கு முறையில் இணைந்துகொண்டனர்.

சம்பிரதாயப் பொருட்கள் நிறைந்திருந்த தட்டத்தை மணப் பெண்ணின் பெற்றோர் எடுத்து மணமகனின் பெற்றோரிடம் கண்கலங்கக் கொடுக்க, அவர்கள் அதனைப் பெற்றுக்கொள்வதுடன் கன்னிகாதானச் சடங்கு நிறைவேறியது...

மண்டபத்தில் சலசலப்பு மெல்ல அடங்கிக் காணப்பட்டது.

தனது கைக்கடிகாரத்தைப் பார்த்து முகூர்த்த நேரத்தை உறுதிப்படுத்திய குருக்கள், மந்திரத்தை உரக்க உச்சரிக்க, கெட்டி மேளத்தின் ஒலி ஒலிபெருக்கியில் மண்டபத்தை ஆக்கிரமிக்க, மணப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெண்ணின் கழுத்தில் திருமணத்தின் அடையாளமான தாலியை மணமகன் கட்டினான்... குருக்களும், சூழ்ந்து நின்றவர்களும் மலர் தூவி வாழ்த்தினர். மணமகனின் சகோதரி தாலியின் பின்பக்க இணைப்பைப் பொருத்திக்கொண்டிருந்தாள்.

தாலி என்ற பெயரில் மணமகனால் கட்டப்பட்டது தனியான தங்கக் கொடி...

இதனை மண்டபத்தில் இருந்த பலர் அறிந்துகொண்டனர்...

அவர்களது பேச்சுக் குரல்களால் மண்டபத்தில் மீண்டும் சலசலப்பு...

"பொம்பிள மூண்டு மாதமா முழுகாம இருக்கிறாவாம். அதனால தாலி கட்டக்கூடாதென்று வெறும் கொடியத்தான் கட்டினவக..."

மண்டபத்தில் பின்னாலிருந்தவர்களைத் தேடிவந்த ஒரு பெண் புதிய கண்டுபிடிப்பொன்றைச் சொல்லுவதைப்போலச் சொல்லிக் கொண்டு நின்றாள்...

"அப்ப கன்னிகாதானம் செய்யலாமாக்கும்..."

வயதில் முதியவரான மற்றப் பெண் சட்டெனக் கேட்டாள்... அவளது வார்த்தைகள் சற்று உரத்து வெளிவந்ததால் அதைக் கேட்ட பலரது பார்வை அவர்களையும், றோஸ்மலரையும் பார்த்து மீண்டன.

தகவல் சொல்ல வந்தவள் வாயடைத்து நின்றாள்...

அவர்களது வார்த்தைகள் பழுக்கக் காய்ச்சிய இரும்பாக றோஸ்மலரின் செவிகளுக்குள் நுழைய, அவளையறியாமலே தலை கவிழ்ந்து, கண்கள் கலங்கி நீர் வழிந்தது... பிரதீபன் இதனை அவதானிக்கத் தவறவில்லை.

மண்டபமெங்கும் மணப்பெண்ணின் கதையாகவே இருப்பதும், பலரும் தம்மைத் திரும்பித் திரும்பிப் பார்ப்பதும் பிரதீபனின் இதயத்தை வருடச்செய்திருக்கவேண்டும்.

"பெற்றோரின் கண்காணிப்பில்லாது பெண்களை ஐரோப்பிய நாடுகளுக்கு அனுப்புவதே தவறு"

மெதுவாகச் சொன்னார் பிரதீபன்... றோஸ்மலர் திரும்பிப் பார்த்துக்கொண்டாள். இருவரிடமிருந்தும் பெருமூச்சு வெளியேறியது...

மணமேடையில் பெண்ணுக்கு மெட்டி அணியும் நிகழ்வை அனைவரும் பார்த்து இரசித்துக்கொண்டிருந்தனர்...

"பிரீத்தியின் தாயும் தகப்பனும் கலியாணத்துக்கென்று இவ்வளவு தூரம் வந்தும் அவளைக் கன்னிகாதானம் செய்துவைக்கக் குடுத்து வைக்கயில்லையே..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஏனாம்?"

"அந்த அம்மாவுக்கு வீட்டுக்குத் தூரமாம்..."

மிக அண்மையிலிருந்த பெண்களின் உரையாடல் றோஸ்மலர் மற்றும், பிரதீபனின் காதுகளுக்கு சுசப்பாக இருந்தது...

இருவரும் மௌனமாகவே இருந்தனர்...

முன்னோர்களால் கட்டிக்காத்துவந்த பண்பாட்டை மீறிய நிகழ்வில் கலந்துகொள்வதைத் தவிர்ப்பதற்கு றோஸ்மலருக்கு இதைவிட வேறுவழி தெரியவில்லை...

கண்களிலிருந்து சிந்திய நீரை தன் முந்தானையால் துடைத்துக் கொண்டாள்...

பிரதீபன் நிலையும் அப்படித்தான்... சிந்தும் கண்ணீருடன் மனைவியையே பார்த்தார்.

அது பண்பாட்டின் காப்பகமாய் அவளைக் கண்டதனால்... ■

*1990களில்*

யாழ். பிரதேசச் செயலகப் பிரிவின்
கலை இலக்கியப்போட்டி - 2008 இல்
1ஆம் இடம் பெற்றது. (பண்பாட்டின் காப்பகம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஒரு உள்ளக்குமுறல்

"ம்மா... ம்மா... ம்மா..."

சுற்றுமுற்றும் பார்த்தவாறு, வேதனை தோய்ந்த முகத்துடன், ஒழுங்கைக்குள்ளிருந்து கத்திக்கொண்டு வேகமாக வெளியே வந்தது கறுத்த ஆடு ஒன்று.

எப்போதும் இந்த கறுத்த ஆட்டின் கத்தலுக்கு எதிர்ப்பாட்டுப் பாடுவதைப்போலத் தானும் கத்திக் கொண்டு, வாலை அசைத்தவாறு ஓடிவரும் இதனது குட்டியை இப்போது காணவில்லை.

பல தடவைகள் தொடர்ந்தும், விட்டுவிட்டும் கத்தியவாறு பதட்டத்துடனும், ஏமாற்றத்துடனும் வீதிக்கு வந்துவிட்டது அந்தத் தாய் ஆடு.

தான் ஈன்ற இரண்டு குட்டிகளில் ஒன்று தார் வீதியில் துள்ளிக் குதித்தபோது வாகனத்தில் அடிபட்டு அதனது கண் முன்னாலேயே இறந்ததனால், இரண்டாவது குட்டியை மிகவும் கண்காணிப்புடன் வளர்த்து வந்தது அந்த கறுத்த ஆடு.

அந்தக் குட்டி வீதிக்குச் சென்றுவிடாமல் தடுப்பதற்காக, எந்நேரமும் தன்கூடவே வைத்திருந்து ஒழுங்கைக்குள்ளேயே மேய்ந்துகொண்டிருக்கும். இன்று ஏனோ தெரியவில்லை அதனது குட்டி விலகிவிட்டது. தாயின் கவலையீனமா? குட்டியின் சாதுரியமா?

**கலையார்வன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ம்மா... ம்மா..."

நடு வீதியில் நின்று திரும்பத் திரும்பக் கத்தியவாறு ஏக்கத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தது அந்த ஆடு. அது தேடும் தனது குட்டி கண்ணிற் படவோ, குட்டியின் எதிர்க் கத்தல் சத்தம் எழவோ இல்லை...

ஏமாற்றத்தின் பிரதிபலிப்பும், வேதனையும் அதன் கண்ணில் தெரிந்தது. மிரள மிரள விழித்தது.

வீதியின் ஓரத்தில் அமர்ந்து அசைபோட்டுக்கொண்டிருந்தன சக ஆடுகள். தன்னுடைய மொழியால் தனது குட்டி பற்றிய தகவலை அவைகள் தெரிவிக்குமென்ற எதிர்பார்ப்பில். அவற்றை நோக்கிப் பார்வையைச் செலுத்தியவாறு தொடர்ந்து கத்தியது அந்த ஆடு.

அசைபோடலைத் தவிர வேறெந்த சலனமுமின்றி நிமிர்ந்து பார்த்துவிட்டு மௌனமாகின அவை...

ஆடுகளின் எசமானர்களான மனிதர்கள் சிலர் வீதியோரங்களில் நின்று வேடிக்கை பார்த்துக்கொண்டிருந்தனர். அவர்களையும் பார்த்து தன் கத்தலால் கேள்வியெழுப்பியது.

அதற்கு விடை கிடைக்கவில்லை...

அவர்களுக்குப் புரிந்ததோ, புரியவில்லையோ. பதிலுக்கு கல்லெறிந்து கலைத்தார்கள்.

* * *

சற்றுமுன் வெள்ளை நிற வானில் வந்தவர்கள் அந்தக் குட்டி ஆட்டைத் தூக்கிச் சென்றதை வீதியில் நின்ற மனிதர்களும் பார்த்தனர், மந்தைகளும் பார்த்தன. ஆனால், தடுப்பதற்கு எவரும், எவையும் முனையவுமில்லை; அதனை தாய் ஆட்டுக்கு உணர்த்துவதற்கு துணியவுமில்லை.

"ம்மா... ம்மா... ம்மா..."

கத்தலில் தழுதழுப்பு இருந்தது. ஆயினும் கத்தல் நிற்கவில்லை. அங்குமிங்கும் அலைந்தது எதிர்ப்பாட்டு பாடவேண்டிய குட்டியைத் தேடி...

பெற்றவளின் உள்ளக் குமுறலை வெளிப்படுத்த அதற்குக் கத்தலைத் தவிர வேறு மார்க்கம் இல்லை... ■

**கலைமுகம்**

ஜனவரி - ஜூன் 2007



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 07 சமத்துவம்

ஈச்சம்பழ மரங்கள் செறிவாகவும், இடைக் கிடையே செடி - கொடிகளிலாலான பற்றைகளாகவும் காணப்பட்ட பகுதியை ஊடறுத்துச் செல்லும் தார் வீதியில் ஈருருளியில் சென்றுகொண்டிருந்தான் பிரான்சிஸ். அந்தச் சுற்றாடலில் குடியிருப்புகள் இருப்பதற்கான அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை.

வீதியில் வேறு பயணிகளின் நடமாட்டமோ, வாகனப் போக்குவரத்துக்களோ இல்லாதிருந்தமை பிரான்சிஸிற்கு ஆச்சரியமாக இருந்தது. 'தனிமைப் படுத்தப்பட்ட வீதியாக இருப்பதால் கள்வர்கள் இருப்பாங்களே' என நினைத்தபோது அவன் உடல் நடுக்கம் கண்டது. இருந்தும் 'அதிகாலை நேரமென் பதால் போக்குவரத்துகள் குறைவாக இருக்கலாம்' எனத் தனக்குத்தானே சமாதானம் செய்துகொண்டு பயணத்தில் கண்ணாயிருந்தான்.

"கா... கா..."

காகங்கள் பல கத்தியவாறு உயர்ந்த பற்றையை வட்டமிட்டுப் பறந்தன. 'காகங்கள் கத்துவது; தம் இனத்தை ஒன்று சேர்ப்பதற்கே' என்று நூலொன்றில் படித்ததை நினைத்துக்கொண்டான்.

"அந்த இனத்தில்தான் எத்துணை ஒற்றுமை... தனக்குக் கிடைத்ததை பகிர்ந்துண்ணும் பக்குவம். அவற்றிற்கு எப்படி வந்தது..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவனது வாய் முணுமுணுத்தது.

"மனித இனத்திற்கு இந்தப் பக்குவம் எப்போதுதான் வரப்போகிறதோ?"

தனக்குள்ளே கேட்டுக்கொண்டவன் பெருமூச்சை வெளியேற்றியவாறு தன் பயணத்தைத் தொடர்ந்தான். தன் கண்ணெதிரே எவையேனும் தென்பட்டால் அதனைத் துருவித் துருவி ஆராய்ந்து பார்ப்பது அவனது இயல்பு. அன்று அவனுக்கு வெறுமையான வீதி பயத்தை ஏற்படுத்தியதால் எதிலும் கவனம் செலுத்தாமலே தனது பயணத்தைத் தொடர்ந்தான்.

* * *

பிரான்சிஸ் மீண்டும் அந்த வீதியால் திரும்பி வரும்போது பிற்பகல் மூன்று மணிக்கு மேலாக இருந்தது. முன்னரைப்போலவே வீதி வெறுமையாகக் கிடந்தது. தனிமைப்படுத்தப்பட்ட அந்த வீதியால் தவிர்க்கமுடியாத நிலையில் தனியாகவே பயணம் செய்தான்.

வரும்போது இருந்த உள, உடல் நடுக்கம் இப்போது இல்லை. பழக்கப்பட்ட இடம்போன்ற உணர்வே காணப்பட்டது.

காலையில் அவன் வரும்போது காகங்கள் பறந்த அதே இடத்தில் முன்னரைவிட அதிக காகங்கள் வட்டமிடுவதும், நிலத்தைத் தேடிப் பதிவதுமாக இருந்தன.

அந்த இடத்திற்கு வரும்போது, நேராக வீசிய காற்றுடன் இணைந்து வந்த துர்நாற்றத்தால் அவனது வாய் அருக்குளித்தது. மூச்சை உள்ளிழுக்காமல் அடக்கிப் பிடித்தவாறு ஈருருளியை பலங்கொண்ட மட்டும் மிதித்தான். அவன் எண்ணத்திற்கு இசைந்தவாறு ஈருருளியும் வேகமாகச் சென்றது.

சற்றுத் தூரம் சென்ற பின்னர் துர்நாற்றம் குறைவாக இருந்ததை உணர்ந்து, ஈருருளியை நிறுத்திக் காலூன்றியவாறு சுற்றுமுற்றும் பார்த்தான். எவரேனும் வருவதாக இல்லை. காகங்கள் கத்தும் ஒலிகள் மட்டும்தான் கேட்டுக்கொண்டிருந்தன... ஒலிவந்த திசைதேடி கண்கள் திரும்பின...

குறித்த ஓர் இடத்தையே மையமாக வைத்து வட்டமடிப்பது போல் காகங்கள் பறந்துகொண்டிருப்பதும், அந்த இடத்தை இலக்காகக் கொண்டதாக துர்நாற்றம் எழுந்ததும் அவனைச் சிந்திக்கச் செய்தது. ஆராய்ந்து பார்க்காமல் செல்ல அவனது இயல்பான குணம் இடங் கொடுக்கவில்லை.

சிறிதுநேர சிந்தனையின் பின்னர் ஏதோ நினைத்துக் கொண்டவனாக ஈருருளியை வீதியின் ஓரமாகவுள்ள ஈச்சம்பழ மரவோரம் நிறுத்திவிட்டு காகங்கள் பறக்குமிடம் நோக்கி விரைந்தான்...

தனிமைப்படுத்தப்பட்ட வீதி, சன நடமாட்டமற்ற பகுதி, முன்னொருபோதும் சந்தித்திராத சூழல் அவனுக்கு உள்ளூர பயத்தைத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றுவித்தாலும், தற்துணிவில் முன்நோக்கி பற்றைகளை விலக்கிச் சென்றுகொண்டிருந்தான்.

காகங்கள் வட்டமிட்ட குறித்த இடம்நோக்கிச் சென்றவன் சில நிமிட வித்தியாசத்தில் தீயை மிதித்தவன்போல பதறியபடி ஓடிவந்தான். அவன் முகத்தில் பயத்தின் கீறல்கள்... உடலெல்லாம் வியர்த்துக் கொட்டியது... நெஞ்சின் படபடப்பை அவனினது கைகளின் தடுமாற்றத்திலிருந்து உணரக்கூடியதாக இருந்தது.

நிறுத்திவைத்திருந்த ஈருருளியை வேகமாக எடுத்தான். சுற்றுமுற்றும் பார்த்துவிட்டு அதில் ஏறிப் புயலாகப் பறந்தான்...

* * *

வீதியின் உறக்கத்தைக் கலைத்துக்கொண்டு தொடராய் வந்த வாகனங்கள், பிரான்சிஸ் ஈருருளியை நிறுத்திய அதே இடத்தில் ஒன்றன்பின் ஒன்றாய் தரித்து நின்றன. முதலாவது வாகனத்தினுள்ளே இருந்து பிரான்சிஸ் இறங்கினான்.

"கா... கா..."

வட்டமடிக்கும் காகங்கள் கத்ததும் சத்தம் கேட்டுக் கொண்டேயிருந்தது.

"நான் சொன்ன இடம் இதுதான் சேர்... வாங்க..."

பிரான்சிஸ் கையால் சுட்டிக்காட்டி கூறியவாறு முன்னோக்கி நடந்தான்.

அரச உத்தியோகஸ்தர்,

பொலிசார்,

நிறுவன அதிகாரிகளென ஒரு கூட்டமே அவனைப் பின் தொடர்ந்தது.

செல்லச் செல்ல துர்நாற்றம் அதிகமாகிக்கொண்டிருந்ததால் எல்லோரும் கைக்குட்டையால் மூக்கைப் பொத்தியவாறு சென்றனர்.

பிரான்சிஸ் ஓர் இடத்தில் நின்றவாறு பத்து அடி தூரத்திலிருந்த மண் பகுதியை ஈச்சம் மரங்களினூடாகச் சுட்டிக்காட்டினான்...

கூர்ந்து பார்த்தவர்கள், இடியும் மின்னலும் ஒன்றிணைந்து தாக்கியதைப்போல் அசையாது நின்றனர். ஒவ்வொருவர் இதயமும் அதியுச்சத்தில் துடித்தது. பிரான்சிஸ் குறிப்பிட்டுக் காட்டிய அந்த இடத்தை திரும்பவும் பார்க்க முடியாமல் தடுமாறினர்... கண்ணீர் அவர்களை முந்திக்கொண்டு வந்தது.

கைக்குட்டையால் கண்ணீரைத் துடைத்துவிட்டு அமைதியாகி மீண்டும் அந்த இடத்தை ஆழமாக நோக்கினர்...

மனித உடலைக் காகங்கள் கொத்தித் தின்றுகொண்டிருந்தன. மிக மோசமாகத் துர்நாற்றம் எழுந்தது. அப்போதுதான் வழமையாகி ஒருவரையொருவர் கேள்விக்குறியோடு பார்த்துக்கொண்டனர்.

அரச அதிகாரி, கூலியாட்கள் இருவரை நோக்கிச் சைகை செய்ய,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவர்கள் தமது வாயை துணியால் மூடிக் கட்டியவாறு, மண்வெட்டிகளுடன் காகங்கள் உணவருந்தும் இடத்தை நெருங்க, அவை ஏசியவாறு பறந்து சென்றன.

கூட்டத்தினர் அங்கு எழுந்த துர்மணத்தையும், மனவுளைச்சலை யும் சகித்துக்கொண்டு ஈச்சம் மரத்தை விலக்கி மேலும் கிட்டே நெருங்கினர்.

இப்போது அந்த இடம் எல்லோருக்கும் தெளிவாகத் தெரிந்தது. சிதைந்த மனித உடலும் - சதைச் சிதறல்களும் - எலும்புகளும் கிளறப்பட்ட மணலோடு சேர்ந்தாற்போல் கிடந்தன.

கூலியாட்கள் மண்வெட்டிகொண்டு மேலாகக் கிடந்த மண்ணை வழித்து எடுத்தார்கள். அடுத்தகணம் இருவரும் தலையில் கைவைத்தவாறு கதறத் தொடங்கினர்...

நின்றவர்களின் உடல் குளிர் காய்ச்சல் வந்ததுபோல் நடுங்கியது. தங்கள் கண்களை நம்பமுடியாமல் துடைத்துவிட்டு நோக்கினர்.

பல மனித உடல்கள் இரத்தக்கறைகளுடன் குழியில் கிடந்தன. இந்தக் குழி புதிதாக வெட்டப் பட்டதல்ல. ஏற்கெனவே இருந்த பள்ளமொன்றினுள் உடல்கள் போடப்பட்டு குறைவான மணலால் மூடப்பட்டிருக்கவேண்டும்.

* * *

கண்டெடுக்கப்பட்ட பதினைந்து சடலங்களும் இனங் காணுவதற்காய் வைத்தியசாலையில் வைக்கப் பட்டிருந்தன...

தத்தமது உறவுகளைக் காணாது தவித்த பலநூறுபேர் பார்வையிட்டுச் சென்றனர்.

இனங்காணப்பட்ட சடலங்கள் சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளின்றிக் காணப்பட்டன.

சாதி, சமய, பிரதேச வேறுபாடுகளின்றி புதைகுழியில் புதைத்தவர்கள் சமத்துவத்தின் நாயகர்கள்...

* * *

இனந்தெரியாதோரால் சுடப்பட்ட நிலையில் பிரான்சிஸின் உடல் கண்டெடுக்கப்பட்ட செய்தி மறுநாள் பத்திரிகைகளில் வெளிவந்தது... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 08 திருமணம்

"என்ன பரஞ்சோதியண்ணே! சாத்திரியாரட்ட போயிட்டு வாறீங்க போலயிருக்கு..."

"ஓமடா தம்பி! மகள் வனிதாவுக்கு கலியாணப் பொருத்தம் பாக்கலாமெண்டு வந்தனான்."

"பாத்திற்றீங்களாண்ணே?"

"மூண்டு கலியாணம் வந்தது, ஒண்டுக்கும் பொருத்தம் சரிவரையில. இதில அவசரப் படலாமா தம்பி, நிதானமாகப் பொருத்தத் தைப் பார்த்துத்தானே செய்யவேணும். ஆயிரங் காலத்துப் பயிரெல்லா..."

"அண்ணே ஒண்டு கேக்கிறன் கோவிச்சுக் கொள்ளாதேயுங்க... உங்கட மூத்த மகள் லவ் பண்ணித்தானே கலியாணம் முடிச்சவ. அவவுக்குப் பொருத்தம் பாத்தனீங்களா? அவ நல்லாத்தானே இருக்கிறா..."

"அவளின்ர கதை ஏனிப்ப?. அவளோட உறவில்லையெண்டு தெரியும்தானே. அவள் எக்கேடும் கெட்டுப் போகட்டும். இவளை அப்பிடி விட்டுவிடமாட்டோம். நல்ல பொருத் தமாப் பாத்து எங்கட விருப்பப்படிதான் செய்வோம்"

பரஞ்சோதியின் முகம் கோபத்தால் சிவந்தது. பதிலை எதிர்பார்க்காமல் தனக்குள்ளே மெதுவாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏசியவாறு நடந்தார்.

* * *

கலியாணப் பொருத்தம் பார்க்கும் படலம் தொடர்ந்து கொண்டே இருந்தது...

ஐந்தாவதாக வந்த மணமகனின் சாதகம் நூற்றுக்கு நூறு பொருத்தமாயிருக்கிறதென சோதிடர் கூறியதும், பரஞ்சோதிக்குத் துள்ளிக் குதிக்கவேண்டும்போல இருந்தது... ஆனால், அவரால் துள்ள முடியவில்லை. உள்ளம் துள்ளிக்குதித்துக் குதூகலித்தது...

மாப்பிள்ளை அரசாங்க உத்தியோகம். விசாரித்துப் பார்த்தளவில் குறைசொல்வார் எவருமில்லை. ஓரளவு வசதியான குடும்பம். பொறுப்புகள் எதுவுமில்லை. இவை பரஞ்சோதிக்கு மனநிறைவைக் கொடுத்தன.

ஐந்தாவதாக வந்த கலியாணம் பொருத்தமாக அமைந்ததில் மேலும் அவருக்கு நம்பிக்கை வலுவாகியது. மாப்பிள்ளை வீட்டார் எவற்றை எதிர்பார்க்கிறார்களோ அவற்றை மனங்கோணாது செய்யத் தயாராகவே இருந்தார்.

* * *

சோதிடர் குறித்துக்கொடுத்த முகூர்த்த நேரத்தில் குருக்கள் தாலியை எடுத்து மணமகனின் கையில் கொடுக்க, கெட்டிமேளம் முழங்கியது. உறவினர்கள் - நண்பர்கள் மலர் தூவி வாழ்த்தினர். அந்தக் கணத்தில் மணமகளின் கழுத்தில் மணமகன் மாங்கல்யத்தைக் கட்டினான். பரஞ்சோதியினதும் அவர் மனைவியினதும் கண்கள் நீரேந்தி நின்றன...

ஊரே கூடியிருந்ததுபோல கல்யாண மண்டபம் நிறைந்திருந்தது. ஆடம்பரம், சிறப்புகளுக்கு குறைவே இல்லை. ஒலிபெருக்கி, வீடியோ மற்றும் போட்டோ படப்பிடிப்புகளென மண்டபம் களைகட்டியிருந்தது.

* * *

பரஞ்சோதி, இத்தனை சிறப்பாக திருமணத்தை நடத்துவதற்கு மூத்த மகள் அனித்தாமீது இருந்த கோபமும் ஒரு காரணம். அவரது குடும்பத்தில் நடக்கும் முதற் திருமணம் என்றே இதனைச் சொல்லலாம். மூத்தவள் தனது விருப்பப்படி காதலனுடன் சென்றுவிட்டதால் அவளது திருமணத்தை இவர்கள் முற்றாகப் பகிஷ்கரித்ததுடன் பெண் வீட்டாருக்குரிய கடமைகள் எதையுமோ செய்யவில்லை. இந்தத் திருமணத்திற்குக்கூட ஊரை அழைத்தவர், அவளை அழைக்கவே யில்லை... தாய்க்கு அனித்தாவின்மீது பாசம் அதிகமிருந்தபோதும் கணவனின் பிடிவாதத்தின்முன் அது வலுவிழந்துவிட்டது.

* * *

தாலி கட்டிய பின்னர் நடைபெறவேண்டிய சம்பிரதாயபூர்வ மான நிகழ்வுகளுடன் திருமண வைபவம் நிறைவுபெற திருமணத்திற்கு வருகைதந்தவர்களுக்கு உணவு பரிமாறப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமணத்தில் கலந்துகொண்டவர்கள் மணமக்களை மனதார வாழ்த்தி ஞாபகார்த்த அன்பளிப்புகளை வழங்கி விடைபெற்றனர். மணமக்களாலும் ஞாபகார்த்த அன்பளிப்பு ஒவ்வொருவருக்கும் வழங்கப்பட்டது.

* * *

பரஞ்சோதி நிம்மதிப் பெருமூச்சுவிட்டார். வனிதாவுக்கு மாப்பிள்ளை நிச்சயிக்கப்பட்டது முதல் திருமண விழா வரை எந்தவித இடையூறுகளுமின்றி தனது எண்ணம்போல் நிறைவுபெற்றமை பெரு மகிழ்ச்சியையும் ஆறுதலையும் கொடுத்தது...

சிறப்பாகத் திருமணம் செய்து, குதூகலமாக வாழ்ந்த தம்பதியரிடையே நான்கு மாதங்களில் இப்படியொரு இடி விழுமென்று பரஞ்சோதி மட்டுமல்ல எவருமே எண்ணியிருந்ததில்லை...

* * *

வேலைக்குச் சென்ற மருமகன் சுடப்பட்டு வீதியில் இறந்து கிடப்பது தெரியவந்ததும் உளம் உடைந்து தடுமாறிய பரஞ்சோதி தான் நடந்துவந்துகொண்டிருந்த வீதியிலேயே உட்கார்ந்துவிட்டார்.

கணவன் கொல்லப்பட்ட செய்தி காட்டுத்தீயாக வீட்டுக்கு எட்டியதும் வனிதா துடித்தாள். மிகுதியான ஏக்கத்தை தாங்கிக்கொள்ள முடியாமல் மயங்கிச் சரிந்தாள்.

தாய் தன் மார்பிலும் தலையிலும் கைகளால் அடித்து வேதனையை அழுகையாய்க் கொட்டித் தீர்த்துக்கொண்டிருந்தாள். அவளது வாயிலிருந்து வந்த வார்த்தைகள் ஒவ்வொன்றும் நிற்பவர்களின் இதயத்தை வருடி கண்ணீரை வெளியேற்றியது.

அயலவர் சூழ்ந்து மயங்கிய நிலையில் கிடக்கும் வனிதாவின் முகத்தில் நீர்தெளித்து மயக்கத்தைத் தெளிவிக்க முனைந்தனர். அவள் மூன்றுமாதக் கர்ப்பிணி என்பதை அறிந்தவுடன் பெற்ற மகளாக இரக்கம் காட்டினார்கள்.

* * *

வனிதா கண்விழித்துப் பார்த்தபோது அவளது சகோதரி அனித்தா கால்ப்பக்கம் நிற்பதைக் கண்டதும் கண்கள் அகல விரிந்தன...

சற்றுநேரம் அவளையே வெறித்துப் பார்த்தாள்...

"அக்கா...!"

உள்ளடக்கப்பட்ட உணர்வின் அதிர்வுகள் ஒன்றாய்த் திரண்டு வார்த்தையாய் வெளியேறின.

இருவரும் கட்டியணைத்தனர்... கதறி அழுதனர்... உள்ளத்தில் உள்ளவற்றை உரத்துச்சொல்லிச் சொல்லி அழுதனர்...

அயலவரின் ஆறுதல், அன்பான அரவணைப்பு அவர்களைக் கட்டுப்படுத்தவில்லை... அழுகை தொடர்ந்தவண்ணமேயிருந்தது... மடை திறந்த வெள்ளம் போன்றே அவர்களது உணர்வுகள் இருந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அடக்கமுடியாத சோகத்தின் வெளிப்பாடாய் விம்மல் முந்திக்கொள்ள, விழி நிறைந்த கண்ணீருடன் உள் நுழைந்த பரஞ்சோதி, வனிதாவும் - அனித்தாவும் ஒருவரையொருவர் கட்டியணைத்தவாறு அழுவதைக் கண்டு திடுக்குற்று நின்றார்...

இமைமூட மறந்தவர்போல அவர்களையே பார்த்துக்கொண்டு நின்றார்...

அவரிடமிருந்த வழமையான ஆவேசம் அடங்கி, வார்த்தைகள் உறங்கிக் கிடந்தது ...

"உங்கட மூத்த மகள் லவ் பண்ணித்தானே கலியாணம் முடிச்சவ. அவவுக்குப் பொருத்தம் பாத்தனீங்களா?..."

நான்கு மாதங்களின் முன்னர் வீதியில் ஒருவர் கேட்ட கேள்வி நினைவில்வந்து அவர் இதயத்தை ஈட்டியால் குத்துவதுபோல் இருந்தது...

நாணிக் குறுகி நின்றார். ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 09 கீ பேத்டே

பிரியனுக்கு இருப்புக் கொள்ளவில்லை... அங்குமிங்கும் நடந்துகொண்டேயிருந்தான். அவனைப் பார்த்துக்கொண்டிருந்த அவனது தாய் சரஸ்வதி தனக்குள்ளே சிரித்துக்கொண்டாள்...

பிரியன், தன் குழந்தைப் பருவத்திலேயே தகப்பனைப் பிரிந்துவிட்டான். 1987 இல் இந்திய இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்ட யாழ்ப்பாண வைத்தியசாலை படுகொலையில் கொல்லப்பட்டவர் களில் ஒருவராக பிரியனின் தந்தையும் உள்ளடக்கப் பட்டிருந்தார்.

அன்றுமுதல் சரஸ்வதியே அவனுக்கு எல்லாம். அவளும் மிக அன்பாக இருந்தாள். கேட்டது எதையும் அவள் இல்லையென்றதுமில்லை. தேவையில்லாத எதையும் அவன் கேட்டதுமில்லை...

சரஸ்வதியின் கடின முயற்சியுடன், உறவினர் களின் இடைக்கிடையிலான உதவிகளையும்கொண்டு பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டுவரை சிரமமின்றிக் கடந்துவந்த பிரியனுக்கு இன்று 'கீ பேத்டே'.

நண்பர்கள், உறவினர் சகிதம் சிறப்பாகக் கொண்டாடவேண்டுமென்பது அவனது அவா. தாய் அதற்குத் தலையசைத்ததுடன் அதற்கான ஏற்பாடு களைத் தன்னந்தனியே மேற்கொண்டிருந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"பிரியன்! மணி 12 ஆகுது. நீ ரவுணுக்கெல்லா போகப் போறெண்டனி... நேரத்தோட போயிற்று வந்தாத்தான் நீ றெஸ்ற் எடுக்கலாம். நாலு மணிக்கு கேக் வெட்டவெல்லா வேணும்."

"அதுதானம்மா பொடியளப் பாத்துக்கொண்டு நிக்கிறன். அவங்களக் காணயில்லையே... அம்மா! நான் போறன் அவங்க வந்தா குமாரசாமி கடைக்கு வரச்சொல்லுறீங்களா..."

"ஓம் மகனே... நீ கவனமா போயிற்றுவா."

"சரியம்மா..."

சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

அவன் போவதை சற்றுநேரம் பார்த்துக்கொண்டு நின்றுவிட்டு திரும்பி சமையலறைக்குச் சென்று தனது வேலையைத் தொடர்ந்தாள்.

"டுடும்... டுடும்..."

"இந்தச் சத்தங்கள் எப்பத்தான் நிக்கப்போகுதோ... நேரந் தவறினாலும் இதுகள் மாத்திரம் கேக்கத் தவறாது... இருதய வருத்தக்காரருக்குப் பெருங் கஸ்ரம்தான்..."

ஏதோ விரக்தியில் பேசுவதைப்போல் அவள் வார்த்தைகள் வெளிவந்தன. ஷெல் சத்தம் கேட்பது வழமையாகிவிட்ட நிகழ்வாயினும் சூழ்நிலை சார்ந்ததாகவே அதன் தாக்கம் இருந்தது.

நாலுமணிக்கிடையில் நாலைந்து பலகாரங்கள் செய்து முடிக்க வேண்டும்.

ஐசிங் செய்யக் கொடுத்த இடத்தில் கேக் எடுக்கவேண்டும்.

நெல்லிரசம் கரைக்கவேண்டும் எனத் தன்முன் கிடக்கும் வேலைகளின் பட்டியலை நினைத்துக்கொண்டாள். பெருமூச்சு வெளியேறியது.

அத்துடன், தான் சொல்லிவிட்ட பொருட்களையெல்லாம் பிரியன் தவறாமல் வாங்கி வருவானா என்ற ஏக்கம் அவளுக்கு ஒருபுறம் இருக்கவும் செய்தது...

சமையல் வேலையை முடித்துச் சாப்பாட்டை மேசையில் எடுத்துவைத்துவிட்டு நேரத்தைப் பார்த்தாள்...

"ஒரு மணி ஆகீற்றுது. என்னும் ரெண்டு மணித்தியாலத்தில பலகாரங்கள செய்து முடிக்கவேணும்... செய்திடலாம் எல்லாம் ஆயத்தமாய் இருக்குத்தானே..."

தனக்குத்தானே சொல்லிக்கொண்டு மீண்டும் குசினிக்குள் புகுந்தாள்...

"டும்..."

அண்மையில் உரத்துக் கேட்டது...

"கிட்டக் கேக்குதே!.. எந்தப்பாவிகள் எம்பிட்டுதுகளோ?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியே ஓடிச்சென்று வீதியைப் பார்த்தாள். வீதி வழமை போலவே காணப்பட்டது... வேலைப் பழுவை நினைத்து அங்கு நீண்டநேரம் நிற்க விரும்பாமல் திரும்பிவிட்டாள்...

ஒருவாறு பலகாரங்களை முடித்து, அவற்றை அந்தந்த இடங்களில் எடுத்துவைத்தாள்.. நேரம் மூன்று மணி ஆகியிருந்தது...

"இவன் போனவன இன்னும் காணன்.. இனிவந்து சாப்பிட்டு, எத்தின மணிக்கு வெளிக்கிடப்போறான்..."

வாசலைப் பார்த்துவிட்டு அவசர அவசரமாய் நெல்லிரசத்தை தேடியெடுத்துக்கொண்டுவந்து வாளியில் ஊற்றினாள்.

"அக்கா... அக்கா..."

வாசலிலிருந்து குரல் வந்தது... நிமிர்ந்து பார்த்தாள். அவளது சகோதரி நின்றாள்...

'அதுகளும் வந்திற்று இவன இன்னுங்காணனே...' மனதிற்குள் ஏசிக் கொண்டாள்.

"வாம்மா! இண்டைக்கெண்டாலும் நேரத்தோட வந்தியேடியாத்த, வா வா... இவன் ரவுனுக்குப் போனான் இன்னும் வரயில்ல... எனக்கு வேலையும் இன்னும் முடியல... இஞ்ச வா.. இந்த நெல்லிரசத்தக் கரை... நான் கேக்கை எடுத்துக்கொண்டு ஓடியாறன்... ஆக்கள் வரப்போகுதுகள்..."

படபடவென்று சொல்லி முடித்துவிட்டு முந்தானையால் முகத்தைத் துடைத்துக்கொண்டாள்...

"அக்கா..."

விம்மலுடன் வெளிவந்த சகோதரியின் குரல்கேட்டு சட்டென நிமிர்ந்து பார்த்தாள்... அவளுக்குப் பின்னால் உறவினர் பலர் நின்றனர்... பிரியனின் நண்பர்களில் சிலரும் நின்றனர்... அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது...

"என்னம்மா?... ஏன் அழுகிறாய்..."

சகோதரி விம்மியபடி ஓடிவந்து அவளைக் கட்டியணைத்துக் கதறினாள்..

"என்ன நடந்தது... எல்லாரும் வந்திருக்கிறீர்கள்... ஏதும் பிரச்சினையா? நான் பிறந்தநாளுக்கு வந்திருக்கிறீங்களென்டெல்லா நினைச்சன்... என்னெண்டு சொல்லுங்களன்..."

"அக்கா..."

"சொல்லம்மா. என்னெண்டாலும் தயங்காமச் சொல்லம்மா..."

"பிரியன்..."

"பிரியனா? பிரியனுக்கு என்ன?..."

"அவன் எங்களவிட்டுட்டுப் போயிட்டானக்கா..."

"நீ என்னடி சொல்லுறா?"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"உண்மையக்கா. இந்தா அவனட பொடிகள் நிக்கிறாங்க அவங்கட்ட கேட்டுப்பாருங்க..."

"ஓமுங்க அன்ரி... அப்போத ரவுணுக்க ஆரோ கிளைமோர் வைச்சிருக்கிறாங்க.. அது வெடிச்சு மூன்று பேர் அந்த இடத்திலேயே செத்திற்றாங்க. அதில நம்ம பிரியனும் ஒராளுங்க... சுரேஷ், பிரியனுக்குப் பின்னுக்குப் போனவன் அவனுக்குச் சின்னக் காயம். தப்பீற்றான். அவன் சொல்லித்தான் எங்களுக்குத் தெரியும். இப்ப ஆஸ்பத்திரியில வச்சிருக்கிறாங் களாம்..."

சரஸ்வதி உறைந்துபோய் நின்றாள்...

சற்று நேரம் அப்படியே நின்றவள் தனது இரண்டு கைகளையும் தலை உச்சியில் வைத்தவாறு தரையில் அமர்ந்தாள்...

அழுவதற்கு அவளால் முடியவில்லை...

பிரியன் அவள் இதயத்திலும் - கண்களிலும் நிறைந்து நின்றான்... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10 மருந்து

மூன்று பெண்களையும் இரண்டு ஆண்களையும் பிள்ளைகளாகக் கொண்ட பெரிய குடும்பமாய் - கலகலப்பாய் வாழ்ந்த மனோரமா, இப்போது தானும் மகனுமென சிறிய குடும்பமாகி விட்டாள்.

கணவனின் இறப்பு அவளுக்குப் பெரும் சுமையாக இருந்தபோதும் அவர் தேடிவைத்திருந்த பணம் பெரும் ஆறுதலைக் கொடுத்தது. எவற்றுக்காகவும் எவரையும் கையேந்தவோ, பிள்ளைகளை எதிர்பார்த்திருக்கவோ வேண்டியதில்லை என்ற நிலையில் தேவையான சொத்துக்களைக் கணவன் தேடிவைத்திருந்தார்.

மூன்று பெண்களும் திருமணம் முடித்து அவர்களுக்கென சீதனமாகக் கொடுக்கப்பட்ட காணிகளில் வசித்து வருகிறார்கள். மூத்த மகனும் வசதிபடைத்த பெண்ணைத் திருமணம் செய்து தனிக் குடித்தனமாய் வாழ்கிறான். எஞ்சியிருப்பது கடைசி மகன் றஞ்சித்...

தாய்கூடவே வசித்து வரும் அவன், படித்துப் பல்கலைக்கழகம் புகமுடியாமல் வேலை தேடும் படலத்தில் இறங்கியிருக்கிறான். தாய்க்கு எல்லாமே அவன்தான். காலையில் எழுந்ததும் அவளுக்குச் செய்யவேண்டிய உதவிகளனைத்தையுஞ் செய்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விட்டுத்தான் எங்கேனும் புறப்படுவான்...

கறி வாங்கச் செல்வது, உணவு சமைப்பது எல்லாம் தாய்தான்... சாப்பாட்டு நேரத்திற்கு மாத்திரம் தவறாது சமூகமளித்திடுவான்.

மனோரமாவின் ஏனைய பிள்ளைகள் மாதத்தில் ஒன்றிரண்டு தடவைகள் வந்துபோவது அவர்களுக்கு ஆறுதலாக இருந்தது.

* * *

ஏற்கெனவே குருதி அழுத்தநோயினால் பாதிக்கப்பட்டுள்ள மனோரமா, ஒரு வருடத்திற்கு மேலாக வைத்தியம் செய்துவருகிறாள்... தினமும் மருந்து பாவிக்கவேண்டுமென்பது வைத்தியரின் கட்டளை. ஆனால், அவளுக்கு இடைக்கிடையே சுகமாக இருப்பதுபோலத் தோன்றும். அப்போது மருந்தை மறந்துவிடுவாள்... திரும்பவும் உடலில் மாற்றம் தென்படும்போது மருந்தைத் தொடர்வாள்...

இது பிழையென றஞ்சித் பலதடவைகள் எடுத்துக்கூறியும் மனோரமா கேட்பதாயில்லை. சிரிப்புடன் மழுப்பிவிடுவாள்...

* * *

றஞ்சித் வெளியே புறப்படத் தயாராகி வழமைபோல் தாயைத் தேடியபோது அவள் படுக்கையில் கிடந்தாள். வழமையாக இந்த நேரத்தில் சமயலுக்கான ஏற்பாடுகளைச் செய்துகொண்டிருக்கும் தாய், படுத்துக் கிடப்பது அவனுக்கு ஆச்சரியத்தைக் கொடுத்தது.

"என்னம்மா செய்யுது?..."

"சும்மா தலையச் சுத்துமாப்போல இருக்குது... தலைய நிமித்த ஏலயில..."

"வாம்மா டொக்டரட்ட போவோம்."

"வேணாம் தம்பி... அந்த மருந்த எடு..."

தாய் வழமையாக மருந்துகள் வைக்கும் அலுமாரியைத் திறந்தான்...

"எங்கயம்மா? இஞ்ச ஒண்டையும் காணயில்ல..."

ஏதோ நினைவு வந்தவளாக;

"ஓமடா தம்பி... போன கிழம மருந்தெடுக்க மறந்து போயிட்டன்... இப்ப ஒருக்கா போயிற்று வாறியா?"

"நான் போறனம்மா... இப்ப வாங்க முதல்ல டொக்டரட்டப் போவம்..."

"அது ஒண்டும் வேணாம் தம்பி. டொக்டரட்ட போய் காவல் நிக்கிறத்துக்கிடயில நீ மருந்து வாங்கிக்கொண்டு வந்திடுவாய்... அவரும் என்ன இந்த மருந்தைத்தானே தாறவர்..."

தலையை நிமித்தாமலே களைப்புடன் மூச்சிழுக்கக் கூறினாள்... அவளது இயலாமை பேச்சில் தெரிந்தது.. தாயையே பார்த்துக்கொண்டு நின்றவன் மேற்கொண்டு பேசிப் பிரயோசனமில்லையென்றுணர்ந்து கதவைச் சாத்திவிட்டு மோட்டார்சைக்கிளில் காற்றாய்ப் பறந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* * *

போகும்போது துரையப்பா ஸ்ரேடிய 'செக்பொயின்ற்'றில் கூட்டமில்லாதபடியால் விரைவாகச் சென்று மருந்தை வாங்கிக்கொண்டு, வழமையாக வரும் வைத்தியசாலை வீதியால் திரும்பி வந்தான்... இராணுவத் தொடரணிக்காக பாதை பூட்டப்பட்டுள்ளதால் கூட்டம் அதிகமாக இருந்தது... நின்றவர்களிடம் விசாரித்தபோது, அவர்கள் அரை மணித்தியாலமாய் நிற்பது தெரியவந்தது...

வழமையாக இடைக்கிடையே பயணம் செய்ய அனுமதிப் பார்கள். அதனால் கால்மணி நேரம் தாமதித்துப் பார்த்தான்... பயனில்லை. தாய்க்கு விரைவாக மருந்து கொண்டுபோய்க் கொடுக்க வேண்டுமென்பதற்காக தனது வண்டியைத் திருப்பிக்கொண்டு நாவலர் வீதிக்குச் சென்றான்...

நாவலர் வீதியில்; பலாலி வீதியிலிருந்து பெருமாள் கோவில் வீதிச் சந்திவரை வாகனங்கள் தரித்து நின்றன... வாகனங்களுக்கிடையில் புகுந்து பாதி தூரம் சென்றுவிட்டான். அப்பால் செல்ல முடியவில்லை. பின்னோக்கித் திரும்பிச் செல்லவும் முடியவில்லை. இடையில் சிக்குண்டு கொண்டான்...

மணிக்கூட்டைப் பார்ப்பதும் வீதியைப் பார்ப்பதுமே அவன் வேலையாக இருந்தது.. தாயின் நினைவுகள் இதயத்தை நிறைத்து இருந்தன...

* * *

அவன் புறப்பட்டு வந்து இரண்டு மணித்தியாலத்திற்கு மேலாகிவிட்டது... அப்போதுதான் விசில் சத்தங்கள் கேட்டன... எல்லோரும் புறப்படுவதற்காகத் தம்மைச் சுதாரித்துக்கொண்டு ஆயத்தம் செய்தார்கள்... நெரிசல் குறையவே இல்லை... ஆமை வேகத்தில் நகர்ந்தது...

எப்படியோ நஞ்சித் கூட்டத்திலிருந்து விடுபட்டு வெளியே வந்துவிட்டான்... நேரம் மூன்று மணித்தியாலத்தைத் தாண்டிவிட்டது... உச்ச வேகத்தில் வண்டியைச் செலுத்தி வீட்டை அடைந்த அவன், கதவைத் திறந்து உள் நுழைந்தான்... தாய் அதே இடத்திலே கிடந்தாள்... உள்ளம் குளிர்ந்தது அவனுக்கு...

"அம்மா! எழும்பி மருந்தக் குடியுங்க..."

சத்தம் வராமையால் கிட்டே நெருங்கி உடலைத் தொட்ட சைத்தான்... தாய் எழவேயில்லை...

கையிலிருந்த மருந்துகள் நிலத்தில் விழுந்து சிதறின...

"அம்மா..."

அவனது அலறல் சத்தம் வெளிவாசலால் வெளியேறி அயலவரை திடுக்கிடவைத்தது... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாளம்

நிறுவனம் ஒன்றில் லிகிதராகக் கடமை யாற்றியவர் ஆனந்தன். நாட்டில் ஏற்பட்ட இடப்பெயர் வினால் வேலையிழந்து குடும்பத்தைக் காப்பாற்ற வேண்டிய கட்டாயத்தினால், வேறு மார்க்கமெதுவு மின்றி மேசன் வேலையைத் தெரிவுசெய்துகொண்டார். லிகிதராக வேலைசெய்துவிட்டு மேசன்வேலை செய்வதால் ஏற்படுகின்ற உடல் உபாதையை ஒரு தடவையேனும் மனைவியிடம் எடுத்துக்கூறியதே கிடையாது. தனக்குள்ளே ஜீரணித்துக்கொள்வார்.

மனைவி சந்திரா ஜீ.சி.ஈ. சாதாரண பரீட்சையில் திறமைச் சித்தியடைந்து, படிப்பதில் ஆர்வமிருந்தும் தொடர்வதற்கு வசதியின்மையால் இடைநிறுத்திக் கொண்டவள். அதனால் அவள் பிள்ளைகளின் படிப்பில் மிகவும் அக்கறை செலுத்திவந்தாள்.

பிறந்தது மூன்றும் பெண்கள். பிரியா, பிரியவதனி, பிரிந்தா. ஆண் பிள்ளைக்காகத் தவங் கிடந்து கிடைக்காமையால், மீண்டும் ஒரு பெண்ணைப்பெற விரும்பாமல் குடும்பக் கட்டுப்பாடு செய்து கொண்டாள்.

எதிர்காலத்திற்கான தேடல் எதுவுமின்றி அன்றாட உழைப்பிலே இவர்களது வாழ்வு நகர்ந்தது. அடிக்கடி சிறுசிறு சண்டைகள் போதிய வருமான



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மின்மையால். மற்றப்படி வீட்டில் குதூகலம்தான்.

* * *

சந்திரா அம்மியில் மிளகாய் அரைத்துக்கொண்டிருக்கையில், ஆனந்தன் விறாந்தையில் நடந்துகொண்டிருந்தார்.

"என்னங்க கடுமையான யோசனை?"

"லெபனானுக்கு வேலைக்குப் பெண்கள் தேவையாம்..."

"அதுக்கு நீங்க என்னசெய்யப் போறீங்க?"

......

"பிரியாவை... அனுப்புவோமா...?"

தயங்கியபடி ஆனந்தன சொல்லி முடிக்கவும், அரைப்பதை விட்டுவிட்டு சந்திரா பதறியடித்தபடி எழவும் சரியாக இருந்தது.

"என்ன சொல்லுறீங்க. பிரியாவை அனுப்புறதா?"

"அனுப்பினா என்னெண்டு கேக்கிறன்?... கொஞ்சப் பொம்பிள களா போகுதுகள்?... நான் நீயெண்டு அடிபட்டுக் கொண் டெல்லவா போகுதுகள்."

"அதுக்காக, படிச்சுக்கொண்டிருக்கிற அவளையா அனுப்புறது"

"கண்டறியாத படிப்பு... படிச்சு அவ என்னத்தக் கிழிக்கப் போறா?... ஒரு நாலு வருஷம் நிண்டிட்டு வந்திற்றாளென்றா எங்கட கஷ்ரமும் தீரும். அதுகளின்ர எதிர்காலமும் நல்லா இருக்குமெல்லா."

சந்திரா சற்று அமைதியானாள். 'கஷ்ரம் தீரும்' என்ற வார்த்தை சந்திராவை சிந்திக்க வைத்திருக்கவேண்டும்.

"அவளை அனுப்பிப்போட்டு நாங்க யோசிச்சுக்கொண்டி ருக்கிறதாங்க?"

"நாலு வருஷம் தானேயப்பா. நெடுக அங்கையா நிக்கப் போறாள்... இஞ்ச பார். நீ எதையும் சொல்லி அவளைக் குழப்பிடாத. நான் முடிவு எடுத்திட்டன். அதுக்கேற்ற ஆயத்தங்களும் செய்திட்டன். அவளைக் கூப்பிட்டு நல்லாப் புத்திமதியைச் சொல்லி சம்மதிக்கவை... தெரியுதா?..."

ஆனந்தனின் வார்த்தைகள் சற்று கடுமையாக வெளிவந்தன...

"என்ன பேசுறீங்க. அவள் பிஞ்சுக் குழந்தையெல்லா?"

"சொல்லுறதைச் செய்... ஏஜன்சி நல்ல மனுஷன். அவரை எனக்கு முன்னமே தெரியும். எங்கட கஸ்ரத்தைத் தெரிஞ்சதால, அனுப்புறத்துக்கு வாங்கிற காசில அரவாசியைத்தான் முதலில கேக்கிறார். மிச்சத்தை மாசாமாசம் தரச்சொல்லுறாரெண்டா பாரேன்... இப்படி ஆரப்பா இந்தநாளில சம்மதிப்பாங்க? இந்தச் சந்தர்ப்பத்த விட ஏலுமா?"

ஆனந்தன் சொன்னது சொன்னதுதான். யாருக்காகவும், எதற்காகவும் தனது முடிவை மாற்றப்போவதில்லை என்பதை சந்திரா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவாள். அவருடைய இந்தப் பிடிவாதத்தினால் அடைந்த நட்டங்கள் பல. இருப்பினும் ஆனந்தன் தனது போக்கை மாற்றவேயில்லை... சந்திரா வழியின்றி அடங்கிவிட்டாள்.

* * *

லெபனான் பயணம் பற்றி பிரியாவிடம் சந்திரா சொல்லிக் கொண்டிருக்கையில் செருமலுடன் நுழைந்தார் ஆனந்தன்...

பிரியாவின் இதயம் படபடத்தது.

சில நிடிட அமைதி...

"என்னப்பா நான் படிச்சுக்கொண்டெல்லா இருக்கிறன்."

"படிச்சாப்போல வேலை கிடைக்கப்போகுதாக்கும்."

"உங்க எல்லாரையும் விட்டுட்டு..."

"அதுக்கென்ன நன்மைக்குத்தானே!... பிரியா, நீ குடும்பத்தில மூத்தபிள்ள. உனக்கு அக்கறை இருக்கா? இல்லையா?... அக்கறை இருக்கெண்டா நீ லெபனானுக்குப் போகத்தான்வேணும்."

ஆனந்தனிடமிருந்து வெளிவந்த ஆணித்தரமான வார்த்தைகளிலிருந்து எந்த மாற்றத்திற்கும் இடமில்லை என்பதை உணர்ந்த இருவரும் ஒருவரையொருவர் பார்த்துவிட்டு கவிழ்ந்த தலையுடன் அறையை நோக்கிச் சென்றனர்...

* * *

"ஆனந்தனண்ணே... ஆனந்தனண்ணே..."

சிரித்த முகத்துடன் ஏஜன்சி நின்றார்... ஆனந்தனும் பதிலுக்குச் சிரித்தபடி உள்ளே அழைத்து வந்தார். பிரியாவும், சந்திராவும் கதிரையைவிட்டு எழுந்து வரவேற்றனர்.

"அண்ணே! இவர் பிள்ளைய லெபனானுக்கு அனுப்பிறதெண்ட பிடிவாதத்தில் இருக்கிறார். பயமொண்டும் இல்லையாண்ணே?"

"ஏனம்மா அப்பிடிக் கேக்கிறீங்க? எத்தின பொம்பிளகள் போயிருக்குதுகள். இப்பவும் போய்க்கொண்டுதான் இருக்குதுகள். அவங்களப் போலத்தானே உங்க மகளும்... எதுக்கும் பயப்பிடத் தேவையில்லை."

"ஏஜன்சிமார் இடையில விட்டுட்டு போயிடுறதாக சொல்லுறாங்களே."

"யூறோப் நாடுகளுக்குப் போறவங்களுக்குத்தான் அப்பிடி நடக்கிறது. மிடிலீசுக்கு அப்பிடியில்ல... அரசாங்கத்தின்ர அனுமதியோடத்தான் நாங்க ஆக்கள அனுப்புறோம். அதால பயப்படத் தேவையில்லை... அம்மா பிள்ளைக்கு எத்தின வயது?"

"பதினாறு"

"ஓகோ... பதினெட்டு வயதெல்லா வேணும்... சரி, அதொண்டும் பிரச்சினயில்ல... அண்ணே, லெபனானுக்கு முஸ்லீம் பெண்களத்தான் வேலைக்கு எடுப்பாங்க. அதனால முஸ்லீம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரிலதான் பிள்ளைக்கு பாஸ்போட் செய்வேணும். அதோட வயசையும் கூட்டிப் போட்டு எடுத்திடலாம்."

"என்ன சொல்லுறீங்க. இப்பிடிச் சுத்துமாத்துச் செய்தா பிரச்சின வராதா?"

சந்திராவின் வாயிலிருந்து இந்தக் கேள்வியை எவரும் எதிர்பார்க்கவில்லை... சில வினாடிகள் மௌனம்...

"ஏனம்மா பயப்பிடுறீங்க? இப்பிடி எத்தினபேருக்கு பேரையும், வயசையும் மாத்தி பாஸ்போட் எடுத்து அனுப்பியிருக்கிறம். செற்பண்ணித்தானாம்மா செய்கிறது... இதுவர ஒருத்தருக்கும் ஒரு பிரச்சினையும் வந்ததில்லயே... இதுகளெல்லாம் உங்களுக்குச் சொல்லக்கூடாது. சொன்னா இப்பிடித்தான் ஆயிரத்தெட்டு கேள்விகள்."

ஏஜன்சி சொல்லி முடித்ததும் சந்திரா மௌனமானாள்...

பிரியாவை லெபனானுக்கு அனுப்புகிற செலவில் அரைவாசியை முற்பணமாகவும், மிகுதியை மாதாமாதம் சம்பளம் வந்தபின்னர் பெறுவதாகவும் ஏற்றுக்கொண்டார். அரைவாசிப் பணமும் ஆனந்தனிடம் இல்லையென்பது ஏஜன்சிக்குத் தெரியும். அதனால் வீட்டை உரிய தொகைக்கு ஈடுவைக்க ஏற்பாடு செய்வதாகவும் கூறிச்சென்றார். ஆனந்தனின் சந்தோஷத்திற்கு அளவேயில்லை...

* * *

வினோதா பிரியாவின் உயிர்த்தோழி. பிரியா அவளிடம் எதையும் மறைத்ததேயில்லை...

வினோதாவின் மடியில் தலையைச் சாய்த்தபடி தன் ஆதங்கங் களைச் சொல்லிச்சொல்லிக் குழந்தையைப்போல் அழுவதை வினோதா வால் தாங்கிக்கொள்ள முடியவில்லை. பிரியாவின் தலையைத் தடவியபடி ஆறுதல் கூறிக்கொண்டிருந்தாள்... அவள் கண்கள் நீரேந்தி நின்றன...

பதினாறு வயதில் படிப்பைத் தொடராமல் அந்நிய நாட்டுக்கு வேலைக்குச் செல்லும் வேதனையை பிரியாவால் ஜீரணிக்க முடியவில்லை. ஆங்கிலம் சரளமாகப் பேசக்கூடியவளுமல்ல. அது பெரும் சங்கடத்தை ஏற்படுத்தியது.

புரியாத புதிரான எதிர்காலம் என்றே அவள் எண்ணினாள். தன் உளச்சுமையை இறக்கி வைக்க வினோதாவைத்தவிர வேறெவரேனும் இருப்பதாக அவள் கருதவில்லை. அதனால் எல்லாவற்றையுமே கொட்டித் தீர்த்தாள்...

குடும்பத்தைப் பிரிந்துசெல்லும் கொடுமையை நினைத்ததும் தந்தைமீது, அவரது பிடிவாத குணத்தின்மீது அவளுக்கு இனம்புரியாத வெறுப்புத்தான் ஏற்பட்டது.

* * *

தாய், சகோதரிகள், வினோதா, மற்றும் நெருங்கிய உறவினர்களின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்ணீருக்கு மத்தியில் புறப்பட ஆயத்தமானாள் பிரியா.

வாசலைத் தாண்டும்முன் விம்மிவிம்மி அழுத அவளை யாரும் தடுக்கவில்லை...

சில நிமிடங்களில் அமைதியாகி கண்ணீருடன் விடைபெற்றாள்... ஆனந்தனும் ஏஜன்சியும் கூடவே கொழும்புக்குச் சென்றனர்.

'நஜீமா', வயது 19 என பதியப்பட்டிருந்த கடவுச்சீட்டுடன் பிரியா விமானத்தில் ஏறினாள்...

* * *

பிரியா லெபனான் சென்று ஒருவாரமாகியும் சந்திராவின் அழுகை நின்றபாடாக இல்லை. வேலைகளற்று இருக்கும் நேரங்களில் வீட்டு மூலையில் கால்களை மடக்கிப் பிடித்தபடி அழுதுகொண்டே இருந்தாள். எவரது சமாதானமும் அவள் அழுகையைக் கட்டுப்படுத்தவில்லை.

இரண்டு வாரங்களின் பின்னர் பிரியாவிடமிருந்து கடிதம் வந்தது. 'தான் ஒரு வீட்டில் வேலை செய்வதாகவும், அந்த வீட்டுக்கார அம்மா தன்னோடு அன்பாகப் பழகுவதாகவும், எந்தக் குறையுமின்றிச் சந்தோஷமாக இருப்பதாகவும்' எழுதியிருந்தாள். அப்போதுதான் சந்திராவிடம் அழுகையுடன்கூடிய புன்னகை தோன்றியது.

* * *

முதல் மாதச் சம்பளம் வங்கிக்கு வந்ததும் எல்லையில்லா மகிழ்ச்சி ஆனந்தனுக்கு. செலவுக்கு எடுத்ததுபோக மிகுதியை ஏஜன்சியின் கடனுக்கு கொடுத்தார்...

ஒரு வருடத்தில் ஏஜன்சியின் கடன் முற்றாகத் தீர்க்கப்பட்டு, வீடும் மீட்கப்பட்டது. முன்னைய வாழ்க்கை நிலையிலிருந்து முற்றிலும் மாற்றம் பெற்றது ஆனந்தனின் குடும்பம்...

ஆனந்தன் இப்போது மேசன் வேலைக்குப் போவதேயில்லை. ஓரிரு கிழமைக்கு ஒருதடவை மட்டும் சாராயம் குடிக்கும் அவர், தினமும் குடிக்கும் நிலைக்கு உயர்ந்துவிட்டார்.

பிள்ளைகள் ஆடம்பரமான வாழ்க்கை வாழத் தலைப்பட்டு விட்டார்கள்... சந்திராவிடம் மாற்றம் காணப்பட்டாலும் அவள் இதயத்தை ஏதோ உறுத்திக்கொண்டிருப்பது போன்ற பிரமையிலேயே இருந்தாள்.

சுற்றாடலில் தனது குடும்பம் உயர்ந்த நிலைக்கு வளர்ந்துள்ளமை கண்டு ஆனந்தன் தனக்குள்ளே பெருமிதம் கொண்டார். 'தனது முயற்சியினால், மகளை லெபனானுக்கு அனுப்பியதால்த்தான் இந்த உயர்நிலையைப் பெறமுடிந்தது' என மார்தட்டிச் சொல்லுவார். தன்னுடைய வழியைக் கடைப்பிடிக்கும்படி தனக்குத் தெரிந்தவர்களுக்குச் சொல்லத் தவறுவதில்லை.

* * *

ஒன்றரை வருடங்கள் நிறைவுபெற்ற நிலையில் பிரியா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விடமிருந்து வழமையாக வரவேண்டிய சம்பளமோ, கடிதங்களோ வரவில்லை. 'போக்குவரத்து தடங்கலாக இருக்கலாம்' என ஆனந்தன் சமாதானம் கூறினார்.

இரண்டு மாதங்களாகியும் அதேநிலைதான்...

சந்திராவின் இதயத்தில் சோகம் புகுந்துகொண்டது. குடும்பத்தில் சிறுசிறு சச்சரவுகள் தலைதூக்கத் தொடங்கின...

மூன்றாம் மாதம். முன்னரைவிட பல மடங்கு பணம் வங்கிக்கு வந்ததும் ஆனந்தன் சந்தோஷத்தில் துள்ளிக் குதித்தார்...

கடிதங்கள் வரவில்லை. அதனால் சந்திரா அமைதியிழந்தவளாகச் சோர்வுடன் காணப்பட்டாள்...

தொடர்ந்த மாதங்களில் கடிதமோ, பணமோ வரவில்லை.

நாட்கள் செல்லச் செல்ல குடும்பத்தில் பிரச்சினைகளும் பெருகத்தொடங்கின. கண்ணீரும் கம்பலையுமாக சந்திரா அலைந்தாள். பிரியாவைப்பற்றிப் பலரிடமும் விசாரித்துப் பார்த்தும் அவளுக்கு நல்ல பதில் கிடைக்கவில்லை. ஏஜன்சியும் 'கொழும்பில் விசாரித்து வருவதாக' சொல்லிக்கொண்டேயிருந்தார்.

ஒரு வருடத்திற்கு மேலாக இந்த நிலையே நீடித்தது...

அயலவர், தெரிந்தவர்களிடமெல்லாம் கண்ணீர் மல்கக் கூறிக்கொண்டேயிருப்பாள் சந்திரா ... அவள் வெகுவாக மாறிவிட்டாள். உடல் மெலிந்து கன்னங்களும், கண்களும் குழி விழுந்து காணப்பட்டன...

"அம்மா... அம்மா..."

அழைத்தபடி வினோதா நுழைந்தாள். வினோதாவைக் கண்டதும் சந்திரா கட்டுப்பாடின்றி உரத்து அழத்தொடங்கினாள்...

'பிரியாவின் உயிர்த் தோழியான வினோதா, இந்தச் சந்தர்ப்பத்தில் வந்தது ஏதேனும் தகவல் சொல்வதற்காக இருக்கலாம்' என ஊகித்தவர்களாக எல்லோரும் அவளைச் சூழ்ந்துகொண்டனர்.

... ...

"வினோதா! பிரியாவிடமிருந்து ஏதும்...?"

அழுகையினூடே கேட்ட சந்திராவின் கேள்விக்கு 'ஆம்' என்பதைப்போல் தலையசைத்தாள். வினோதாவின் முகத்திலிருந்த சலனத்தை மற்றவர்கள் அவதானித்ததாகத் தெரியவில்லை. அளவுக்கு மீறிய ஆவலில் அவர்கள் இருந்தார்கள். வினோதா தனது கைப்பையைத் திறந்து கடிதமொன்றை எடுத்தாள்.

"பிரியாவிடமிருந்து எனக்கு வந்த கடிதமம்மா... இந்தாங்க, வாசியுங்க..."

"நீயே படியம்மா. எல்லாரும் கேப்போம்..."

சந்திராவின் கோரிக்கையை ஏற்று கடிதத்தைப் பிரித்தாள்.

"எனது இனிய நண்பி வினோதா! நீண்ட இடைவெளிக்குப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பின்னர் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன்... நான் லெபனாலிலிருந்து இலங்கை வருவதற்கு ஏற்பாடு செய்துள்ளேன். சிலவேளை இந்தக் கடிதம் உனக்குக் கிடைப்பதற்கு முன்னர் நான் அங்கே வந்தாலும் வந்திடுவேன். இருந்தாலும் என் மனதில் புதைந்துகிடக்கும் உண்மைகளை நேரில் சொல்ல எனக்குத் தைரியமில்லை. அவற்றை முழுமையாய் உனக்கு எழுதுவதன் மூலம் எனக்கு ஆத்மதிருப்தி கிடைக்கும் என்பதால் இந்தக் கடிதத்தை எழுதுகின்றேன்..."

வினோதா பெருமூச்சுடன் ஒவ்வொருதராய்ப் பார்த்தாள். அவர்கள் விழி மூடாமல் வினோதாவைப் பார்த்தவண்ணமே இருந்தனர்.

"வினோதா நான் இங்கே நிம்மதியாக இருக்கிறேன் என்று எண்ணாதே. புயலில் சிக்கிய துரும்பின் நிலைதான் என்நிலை. கண்ணீரே என் வாழ்க்கையானது. ஆறாத வடுவுடன் ஆதரவிழந்து நிற்கிறேன். ஏன் எனக்கு இந்த நிலை?... பெண்ணாய் பிறந்ததனாலா? அன்றேல், பெண்ணியத்திற்கான கொடுப்பனவா?... நன்றாகப் படித்து சமூகத்தில் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். அனைவரும் மெச்சிட பண்பாட்டு விழுமியங்கள் வழி நடக்கவேண்டும்... சே! எப்படியெப்படி எல்லாமோ வாழவேண்டு மென எண்ணியிருந்தேன். ஆனால், இன்று அனைத்தையும் இழந்தவளாக நிற்கிறேன்."

வினோதா நிமிர்ந்தாள். தலை கவிழ்ந்தவண்ணம் ஆனந்தன்... கண்கள் குளமாக சந்திரா... ஏக்கத்துடன் சகோதரிகள்...

"வினோதா நான் கெடுக்கப்பட்டேன்... சிதைக்கப்பட்டேன்... ஒருவராரல்ல இருவரால்... ஒரு தடவையல்ல பலதடவைகள்..."

"பிரியா..."

சந்திராவின் அலறல் சுவரில் பட்டு பல ஒலியலைகளாகத் திரும்பின. வாய்விட்டுக் கதறியபடி தரையிலும், மார்பிலும் கைகளை மாறிமாறி அடித்தாள். பிரியவதனியும், பிரிந்தாவும் அவளை அணைத்துக் கொண்டனர்.

"ஒரு வருடம் எந்தக் குறையுமின்றி வைத்துக் காப்பாற்றிய வீட்டு எஜமான், தன் மனைவி விடுமுறைக்கு வெளிநாடு சென்றதும் தனது வக்கிரப் புத்தியை என்னிடம் காட்டினான்.

அப்போது நான் தனிமை. தெரிந்த மொழியில் கெஞ்சினேன், கதறினேன், கும்பிட்டேன், தப்பிக்க வழிதேடி ஓடினேன்... விடவில்லையவன். என் கெஞ்சலும், கதறலும் பலனற்றுப்போயின. என் எதிர்ப்புகள் வலுவிழந்துவிட்டன... ஓநாயிடம் சிக்கிய கோழிக் குஞ்சின் நிலையில் நான் தப்பிக்க முடியாமல் அவன் கைக்குள் சிக்கிக்கொண்டேன்.

என் பலமெல்லாம் செயலிழந்தது. நிறுத்தாத போராட்டத்துடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டிலில் அவனுக்கு நான் மெத்தையானேன். வெறி, ஆவேசம், வக்கிரம் அனைத்தும் இணைந்த கொடூர மிருகம் என்னைக் கடித்துக் குதறுவதை என்னால் தடுக்க முடியவில்லை...

கண் விழித்தபோது அலங்கோலமாகக் கட்டிலில் கிடந்தேன்...

உடலெல்லாம் வலித்தது...

தேகம் நெருப்பாய்ச் சுட்டது...

கண்கள் ஒளி மங்கிக் காணப்பட்டன...

என் கற்பு சூறையாடப்பட்டு விட்டதை உணர்ந்து துடியாய்த் துடித்தேன்... சுதாரித்துக்கொண்டு எழமுயன்றேன் முடியவில்லை... உடலெல்லாம் தாங்கமுடியாத வலி...

எழமுடியாமல் எழுந்து, நடக்க முடியமால் நடந்து என் அறைக்குச் சென்று படுத்துவிட்டேன். உடம்பு புண்ணாய் நொந்தது. வாய்விட்டுக் கதற முடியவில்லை. கண்ணீரைமட்டும் கட்டுப்பாடின்றி வெளியேற்ற முடிந்தது..."

வினோதாவின் கண்களில் நீர் நிரம்பி வழிந்தது... கைகளால் அழுத்தித் துடைத்துக்கொண்டாள். ஏனையோர்களும் அப்படித்தான்... சந்திரா விம்மிக்கொண்டிருந்தாள்...

"எதுவும் நடக்காததுபோலவே எஜமான் காணப்பட்டான். கூண்டுக்கிளியாக நிற்கும் என்னால் என்னதான் செய்யமுடியும்? கண்ணீரின் மத்தியில் என் வழமையான பணிகள் தொடர்ந்தன.

இரண்டாவது நாள் எஜமானியின் சகோதரன் வீட்டிற்கு வந்திருந்தான். அவனைக் கவனிக்கும் வேலை என்னுடையது. அவன் வந்தது முதல் அவனது பார்வை என்னை அச்சுறுத்தத் தவறவில்லை.

மறுநாள் தனக்கு சுடுநீர் எடுத்துவருமாறு கூறிவிட்டுச் சென்றான். அதை ஏற்று நானும் சுடுநீர் எடுத்துச் சென்றேன். எஜமானைப்போலவே வக்கிரப் புத்தியில் என்னை அழைத்திருக்கிறான் என்பதை அங்கு போனபின்னர்தான் உணரமுடிந்தது. சுடுநீரை வைத்துவிட்டு ஓட முனைந்தேன். எட்டிக் கையில் பிடித்தான். பிடித்த பிடி விடவேயில்லை.

அவனை எதிர்ப்பதற்கோ, தடுப்பதற்கோ எந்த சக்தியும் என்னிடத்திலில்லை. இருப்பினும் முடிந்தவரை எதிர்த்தேன். புண்ணாண உடல் வலி எடுத்தது. உடல் சோர்வுகண்டது. என் பலமிழந்த எதிர்ப்பையும் மீறி பலமான அந்த மிருகம், புண்ணாகிவிட்ட உடலை மீண்டும் புண்ணாக்கியது...

அவனாலும் கெடுக்கப்பட்டேன்..."

"மகளே!..."

ஆனந்தன் முதற்தடவையாக வாய்திறந்து அழுதார். கேவிக் கேவி அழுதார். அதைப்பார்த்து மற்றவர்களும் அழுதனர். மரணவீட்டின் நிலை... சில நிமிடத்தில் அமைதி...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"ஒரு வாரத்தில் ஓரளவு தேறியிருந்தேன். உடலின் வலி தேறினாலும், உள்ளத்தின் வடுவைத் தேற்றமுடியுமா?... உழைப்புத்தேடி வந்த இடத்தில் என்னையே இழந்து நிக்கிறேன்... தட்டிக்கேட்க எவருமில்லையென்ற துணிவே இதற்குக்காரணம்...

எஜமான் மீண்டுமொரு தடவை எதிர்ப்பின் மத்தியில் என்னை பலாத்காரம் செய்தான். 'மறுத்தால் திருடியதாக குற்றம்சாட்டி துரத்தி விடப்போவதாக' எச்சரித்து என் எதிப்பை குழிதோண்டிப் புதைத்து விட்டான். நாளடைவில் அவன் என்னை விட்டபாடாயில்லை. என் சம்மதமின்றியே அவன் தனது பசிக்கு என்னை இரையாக்கிக் கொண்டிருந்தான்... கடவுளே எனக்கேன் இந்தச் சோதனை... யாரிடம் யாரைப்பற்றி முறையிடுவது..."

பிரியவதனியின் விம்மல் கேட்டு வினோதா நிறுத்தினாள்... வினோதாவுக்கும் விம்மல் முந்திக்கொண்டுவந்தது. மற்றவர்கள் கண்ணீர் நிறைந்த விழிகளுடன் காணப்பட்டனர். சந்திராவைப் பார்க்கப் பரிதாபமாக இருந்தது...

"இரண்டு மாதங்கள் கழித்து எஜமானி விடுமுறையால் வந்தாள். அவளது அன்பான உபசரிப்பை என்னால் மறக்கவே முடியாது. அவளைக் கண்டதும் ஓவென்று அழுதேன். அதைத் தவிர வேறென்ன செய்ய முடியும்... அவள் என்னை அணைத்து, கண்ணீரைத் துடைத்து பழங்களும், சில உடைகளும் பரிசாகத் தந்தாள். இந்த மிருகங்களின் இருப்பிடத்தில் இப்படியும் ஓர் எஜமானியா?...

எஜமான் என்னை அழைத்தார். வீட்டிற்கு அனுப்பும்படி பணங்கள் தந்தார். நடந்தது எதையும் அம்மாவுக்குச் சொல்லக் கூடாதென்று கட்டளையும் போட்டார். அவர்கள் தயவிலிருக்கும் நான் மறுக்க முடியுமா? அம்மாவுக்குச் சொல்லியென்ன. எல்லாம் முடிந்து விட்டது... எஜமானி இரண்டுமாதச் சம்பளம் தந்தார். எல்லாவற்றையும் வீட்டுக்கே அனுப்பி வைத்தேன்."

ஆனந்தன் குழந்தையைப்போல் விம்மி விம்மி அழுதார்.

"மூன்றாம் மாதம் என் உடலில் மாற்றம், குமட்டல், பசியின்மை. ஏனென்று புரியவில்லை... எஜமானி என்னை ஒரு டாக்டரிடம் அழைத்துச் சென்றாள். நான் கர்ப்பமாய் இருப்பதாக டாக்டர் கூறினார். எஜமானி அதிர்ச்சியடைந்தாள். நானும்கூடத்தான். என்னிடம் எதுவுமே கேட்காத எஜமானி வீட்டுக்கு வந்ததும் மூன்றுமாதச் சம்பளத்தைக் கையில் கொடுத்தாள். எனது உடைகளை எடுத்துக்கொண்டு வெளியேறும்படி கூறினாள். நான் பதறிப்போய் நின்றேன்.

'கர்ப்பவதிக்கு இங்கு வேலையில்லை' என்றாள். 'கர்ப்பத்திற்கு காரணம் உங்கள் குடும்பத்தினர்தானென' என்னால் சொல்லமுடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. சொன்னாலும் ஏற்றுக்கொள்ளப்போவதில்லை. என் தலைவிதியை நொந்தபடி அவள் ஆணைக்குக் கீழ்படிந்து புறப்பட்டேன். எங்கே போவது?... யோசித்துக்கொண்டு நிற்கையில் எஜமானியே என்னை அழைத்துச் சென்று புனர்வாழ்வு மையத்தில் ஒப்படைத்தாள். செலவுக்குப் பணமும் தந்தாள். அவளுக்கு எவ்வளவு கருணை உள்ளம்...

புனர்வாழ்வு மையத்தில், எனது பதினெட்டாவது வயதில், ஆண் குழந்தை ஒன்றைப் பெற்றெடுத்தேன்... என்னைப் பலியெடுத்த இருவரில் எவர் பெயரை குழந்தையின் தகப்பன் பெயரெனக் கொடுப்பது?... 'தெரியாது' என்றேன்... நான் சுமந்த வடுவின் 'அடையாளமாக' என் குழந்தை இந்த உலகத்தில் வாழப்போகின்றது.

வினோதா! என் தாய் எனக்கு ஊட்டி ஊட்டி வளர்த்த எமது பண்பாடு, ஒழுக்கம், கலாசாரத்தின்படி வாழவேண்டும் என்ற வைராக்கியத்தில் வாழ்ந்தேன்... ஆனால், நடந்ததோ வேறொன்று...

பெண்களின் உயிராக மதிக்கப்படுகிற கற்பு காமுகர்களால் துவசம் செய்யப்பட்டிருக்கிறது... இப்படி எத்தனை பேர், சம்மதமின்றியே சகதிக்குள் புதைந்திருக்கிறார்கள்? அவர்களில் எத்தனைபேர் அதனை வெளிக்குக் கொண்டுவந்திருக்கிறார்கள்?...

பண்பாட்டை, கலாசாரத்தை எடுத்துரைக்க விழா தேவையில்லை... பெண்ணியம் பற்றி பெரிதாய் எழுதிக்கிழிக்கத் தேவையில்லை... என்போன்ற பெண்களைக் காப்பாற்ற முன்வந்தாலே போதும்... பணத்தாசையால் படிக்கிற வயதிலும் பணம் சம்பாதிக்க அந்நிய நாட்டுக்கு பெண்களை அனுப்பும் பெரிய மனிதர்களுக்கு என் வாழ்வு ஒரு எடுத்துக்காட்டாக இருக்கட்டும்...

குழந்தையுடன் மீண்டும் நேரில்.
இப்படிக்கு
பிரியமான பிரியா."

வினோதா விம்மல் எல்லோரையும் ஓவென்றழச் செய்தது.

"பணத்தாசையால் என் மகளை நானே..."

ஆனந்தன் தலையில் கைகளால் அடித்தடித்து அழுதார். அவரை வெறுப்புடன் பார்த்துவிட்டு தாயின் மடியில் முகத்தைப் புதைத்தவாறு அழுதாள் பிரிந்தா... நிலைகுலைந்து சோர்ந்து அழுவதற்கும் பலமின்றி அழுதுகொண்டிருந்த தாயைத் தாங்கிப்பிடித்தவாறு பிரியவதனியும் அழுதாள். இவர்களைப் பார்த்த வினோதாவும் அழுதாள்...

வாசலில் ஆட்டோ நிற்கும் ஓசை ...

எல்லோர் கண்களும் வாசலை நோக்கின.

வெபனான் வாழ்வில் வஞ்சிக்கப்பட்டதன் அடையாளமான குழந்தையுடன் பிரியா இறங்கினாள்... ■

*2000களில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 12 மீன்கள்

கலகலப்பாகக் காணப்பட்டது ஊர்...

ஒவ்வொரு குடும்பத்தினரும் அளவிட முடியாத குதூகலத்துடன் இருந்தனர்.

விதிக்கப்பட்ட மீன்பிடித் தடையால் தொழில் வளமழிந்து, தொழிலாளர் தம் வருவாயிழந்து வாழ்வதற்கு கையேந்தி நிற்கும் இந்தநேரம் மீன்பிடித் தடை தளர்த்தப்பட்டமையே இதற்குக் காரணம்.

தாமதமின்றி தொழிலுக்குச் செல்வதற்கு வசதியாய் தொழிலாளர்கள் தத்தமது தொழில் உபகரணங்களைச் சீர்செய்து கொண்டிருந்தனர். இதனால் சந்திகளில் பொழுதுபோக்காளர் கூட்டம் குறைவாகவே இருந்தது.

தாம் வழமையாக செய்துவந்த தொழில்களைச் செய்வதற்கு வழங்கப்பட்ட நேரமும், கொடுக்கப்பட்ட தூரமும் தடையாக இருந்ததால் சிலர் அவற்றுக்கு இசைவான விதத்தில் தொழிலில் மாற்றத்தை ஏற்படுத்தியும், சிலர் தமக்குப் பரீச்சயமான இலகு தொழில்களை செய்வதற்கான ஆயத்தங்களை மேற்கொண்டுமிருந்தனர்.

சில மாதங்கள் தொழிலாளர்களது சலசலப்புக ளின்றிக் கிடந்த கடலில் மீண்டும் தொழில்செய்யும் ஆவலில் காலை எட்டு மணிக்குப் புறப்பட்டுச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சென்றான் டானியல். நிர்ணயிக்கப்பட்ட தூரத்திற்குள், கருமையாய்த் தெரிந்த கடலில் வள்ளத்தை நிறுத்தி, மரக்கோலை கடலடி மண்ணில் ஊன்றி அதனில் வள்ளத்தைக் கட்டினான்.

தூண்டிலில் இரையைக் குத்தி, கடவுளை நினைத்துக்கொண்டு முதற் தூண்டிலைப் போட்டபோது, அதற்கெனக் காத்திருந்ததைப்போல அடுத்த கணமே கௌவிக்கொண்டது மீன். அளவிடமுடியாத ஆனந்தத்தில் விரைவாகத் தூண்டிலை இழுத்து அதிலிருந்த மீனைக் கழற்றி வள்ளத்திற்குள் போட்டுவிட்டு சற்றும் தாமதியாமல் இரையைக் குத்தி தூண்டிலை மீண்டும் போட்டான். போடப்போட மீன்கள் கௌவிக் கொண்டேயிருந்தன.

இது அவன் செய்யும் வழமையான தொழிலாக இல்லாதுவிடினும் சூழ்நிலைக்கேற்ப தேர்வுசெய்துகொண்ட இந்தத் தொழிலில் எப்போதுமில்லாத வகையில் குறித்த இடத்திலே குறைவற்ற மீன்களைத் தந்து, குன்றிப்போன வாழ்வையும் - வறுமையையும் நீக்க வழிகாட்டி நிற்கும் கடவுளுக்கு விழி மூடி, உளமுருக நன்றி கூறினான்.

குறித்த நேரத்திற்குள் திரும்ப வேண்டிய கட்டுப்பாட்டிலும் திரும்ப மனமின்றிப் போட்ட இறுதித் தூண்டிலை இழுக்க முடியாமல் இழுத்தபோது அவன் இதயம் இன்பத்தில் மிதந்தது. எல்லைமீறிய மகிழ்வுடன், கட்டுப்பாடற்ற எண்ண அலைகளுடன் இழுத்த வேகத்தில் மேலெழுந்துவந்தது 'உரப்பை' மூட்டை. அதனைச் சிரமப்பட்டுத் தூக்கி வள்ளத்திற்குள் வைத்தான். அந்தக் கணத்தில் அவனது கற்பனை எங்கெங்கெல்லாமோ சென்றது. மிதமிஞ்சிய ஆவலினால் உருவான பதட்டத்துடன் உரப்பையின் மேற்கட்டை அவிழ்த்தான்...

மனித எலும்புகள்... முகம் சுளிக்கும் புலால் நாற்றம்...

அவன் இதயம் அதிர்ந்தது... உடல் நடுங்கியது... செய்வதறியாது தடுமாறினான்... வழிதெரியாது வள்ளத்தில் குவிந்து கிடந்த மீன்களையே வெறித்துப் பார்த்தபடி நின்றான்...

மனித சதைகளை வயிறாற உண்டு, கொழுத்து, இப்போ பிடிபட்டு, இன்னமும் உயிரோடு கிடந்த மீன்களில் சில வள்ளத்திற்குள் துள்ளிக் குதித்தன.

"என்ர மகனைக் கண்டீங்களா?..."

ஒரு தாயின் அலறல் காற்றில் கேட்பதுபோல் டானியலின் காதுக்குள் ரீங்காரமிட்டது...

அவன் நிலைகுலைந்தான்... தாங்க முடியாத இதயத்தின் வலியால் வெளியேறிய கண்ணீர்த்துளிகள் 'உரப்பை'யில் விழுந்து தெறித்தன...■

**கலைமுகம்**

ஜனவரி - ஜூன் 2007

(உண்டு கொழுத்த மீன்கள்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 13 தவிப்பு

அடர்ந்த - உயர்ந்த காடும் இடையிடையே பற்றைத் தொகுதிகளையும், கரையோரம் பளபளக்கும் வெள்ளை மணலையும் கொண்டமைந்த 'பாலாவி' யின் கடற்கரையில் வள்ளத்தைக் கட்டிவிட்டு வேகமாக நடந்துவந்தார் சின்னத்தம்பி. மணலில் நடப்பதற்குப் பழக்கப்பட்டதனாலோ என்னவோ அவரது வேகத்தில் சற்றேனும் குறைவு இருக்கவில்லை.

முகத்திலே பூரிப்புடன் விரைந்துவரும் சின்னத்தம்பியை குட்டி எதிர்கொண்டான்.

"என்னண்ணே வலை பாக்கப்போனனீங்க டக்கண வந்திற்றீங்க?"

"குட்டி, நம்மட மூண்டு பட்டியிலும் மீன் நிக்குது தம்பி... நாலு பணம் சேரும் போலயிருக்கு... அதுதான் உழக்கு இல்லாமப் பாத்திட்டு கெதியா வந்திட்டன்..."

"அப்ப அண்ணே நாளைக்கு நேரத்தோட பட்டிய இழுத்துட்டு மீன நம்மட ஊருக்குக் கொண்டு போவோமா?"

"வாடைக்காத்து இப்பிடியே நிண்டா வெள்ளாப்பு வடுவுக்கும் மீன் படும் தம்பி..."

"அதப் பாத்தா துறைக்கு நேரத்தோட போய் வரேலாதண்ணே! அதப் பிறகு வந்து இழுத்துக் கருவாட்டுக்குக் குடுப்போம்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

* * *

சின்னத்தம்பி இயந்திரம் மாதிரியே இயங்கிக்கொண்டிருந்தார். நீண்ட நாட்களுக்குப் பின்னர் வட்டியும் முதலுமாகக் கிடைத்ததுபோல தொகையாக மீன்கள் பிடிபட்டிருந்தன. சூரிய உதயத்துக்கு முன்னமே இரண்டு பட்டிகளிலும்* நின்ற மீன்கள் சேகரிக்கப்பட்டுவிட்டதால் குருநகர் நோக்கிப் புறப்படத் தயாராகினர்.

குலேந்திரனைக் கடற்கரையில் இறக்கிவிட்டு, வள்ளத்தில் வெளியிணை இயந்திரத்தைப் பொருத்திக்கொண்டு மூவரும் வள்ளத்தி லேறிப் புறப்பட்டனர்... புறப்படும்போது சின்னத்தம்பி வள்ளத்தை ஒருதடவை பார்த்தார். வள்ளத்தின் முக்கால் பகுதி 'ஓரா' மற்றும் 'தாளஞ்சீலா' மீன்களால் நிறைந்து கிடந்தன. அவருக்கு தலை கால் புரியாத சந்தோஷம்.

வள்ளத்திற்குள் கால் வைக்கமுடியாதிருந்ததால் வள்ளத்தின் ஒட்டத்தில் இருவர் இருக்க ஒருவர் கடையாலிலிருந்து இயந்திரத்தை இயக்கி உரிய திசைநோக்கிச் செலுத்திக்கொண்டிருந்தார்...

சூரிய ஒளி மெல்ல மெல்லப் பரவத் தொடங்கியது...

* * *

காலை பதினொரு மணிக்கிடையில் திரும்பி வந்திருக்கவேண்டிய வள்ளம் மூன்று மணிக்கு மேலாகியும் வந்தடையாமை குலேந்திரனுக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது. பட்டிக்குள் நிற்கும் மீன்களை இரண்டாந்தரம் இழுக்கவேண்டுமென்ற திட்டத்திலிருந்தவனுக்கு பெரும் ஏமாற்றமே மிஞ்சியது.

கடலையே பார்த்துக்கொண்டு நின்றான்...

காலையில் குருநகருக்குச் சென்ற வேறு தொழிலாளரின் வள்ளம் ஏற்கெனவே திரும்பிவந்ததை அவன் அறிந்திருந்ததால் அவர்களைத் தேடிச்சென்று விசாரித்துப் பார்த்தான்.

"குலேந்திரன் அண்ணே! நாங்க வெள்ளாப்புக்கு முதலிலே வெளிக்கிட்டிற்றோம். பிறகுதான் உங்கட ஆக்களட வள்ளம் வெளிக்கிட்டிருக்கவேணும்... நேவி போட் வந்ததைக் கண்டிற்று நாங்க கரையைப் பிடிச்சு ஓடிப்போயிற்றோம். அதுதான் உங்கட வள்ளத்தச் சந்திக்கயில்ல..."

"மீன்வாடியிலயும் காணயில்ல அண்ணே!..."

இருவரினதும் பதிலால் குலேந்திரனின் இதயம் திக்கென்றது... திடமான அவன் உடல்கூட ஆட்டம்கண்டது... சிறிது நேரம் சிந்தித்தான்...

மூவரும் மீன் வாடியில் காணப்படவில்லை...

கடற்படை படகும் இடையில் ரோந்து வந்துள்ளது...

முடிச்சுப் போட்டுப் பார்த்தான்... இதயம் வழமையைவிட அதிகமாகத் துடித்தது... குருநகர் சென்று பார்க்கும்படி அவனது உள்ளுணர்வு தூண்டியது. முடிவெடுத்தவனாக சக தொழிலாளியிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வெளியிணை இயந்திரத்தைப் பெற்று தனது மற்றைய வள்ளத்தில் பொருத்திக்கொண்டு குருநகர் நோக்கிப் புறப்பட்டான்.

நேரம் நாலு மணிக்கு மேலாகிவிட்டது.

அவர்கள் சென்றிருக்கக்கூடிய கடல் பாதை அவனுக்கு தெரியு மென்பதால் அப்பாதை வழியே கடலை வெறித்துப் பார்த்தபடி வேகமாகச் செலுத்திக்கொண்டிருந்தான். இனம்புரியாத தவிப்பு அவனுள் குடிகொண்டிருந்தது.

பாதி தூரம்வரை சென்றிருப்பான் 'புல்'லுகளும், கடற் காகங்களும், கொக்குகளும் செறிவாகக் காணப்பட்டன. அவை கத்தியபடி போட்டிபோட்டவாறு கடலில் பதிந்து எழுவதுமாக இருந்தன. அவற்றை நோக்கி வள்ளத்தைச் செலுத்தினான். வள்ளத்தைக் கண்டதும் அவைகள் அகன்று சற்று உயரப் சென்றன...

நீரின்மேல் தேங்காய்ப்பூ மிதப்பதைப்போல் பெருந் தொகையான மீன்கள் மிதந்து கிடப்பதைக் கண்டான்...

நெஞ்சுக்குள் கொழுக்கி இழுத்ததுபோல் இருமல் வெளிவந்தது.

சட்டென இயந்திரத்தின் இயக்கத்தை நிறுத்தியதும் வள்ளம் வந்த வேகத்தில், மிதக்கும் மீன்களை ஊடறுத்து சிறிது தூரம் சென்று தரித்துச் சுழன்றது.

கடலில் மிதப்பவை ஓரா, தாளஞ்சீலா மீன்களாக இருந்தமை யால் தமது வள்ளத்திலிருந்த மீன்கள்தான் என்பது அவனது முடிவாக இருந்தது...

கடலை வெறித்துப் பார்த்தபடியே உறைந்துபோய் இருந்தான் குலேந்திரன்...

அவனின் கண்கள் இருளாகக் காணப்பட்டன...

தலை சுற்றியதால் தடுமாறிய அவன், வள்ளத்தின் ஒட்டத்தில் அமர்ந்துகொண்டான்...

விம்மலுடன், கண்களிலிருந்து நீர் பெருகியோடுவதை அவனால் கட்டுப்படுத்த முடியவில்லை...

முகத்தைக் கைகளால் பொத்தியவாறு அழுதான்...

கடலடி நிலத்தில் இறந்து கிடக்கும் மீன்கள் பழுதடைந்து அதன் வயிற்றுப் பாகம் ஊதிப் பெரிதாகும்போதுதான் மிதக்கத் தொடங்கும்...

காலையில் பட்டியிழுத்துப் புறப்பட்ட நேரத்தை ஒப்பிட்டுப் பார்த்தால் வள்ளத்தில் கிடந்த மீன்கள் பழுதடைந்து, மிதப்பதற்கு நேரம் சரியாக இருக்கும்...

எனவே மூவரும் வந்த வள்ளம் இந்தச் சுற்றாடலிலேதான் அமிழ்ந்து கிடக்கவேண்டும்.

தனது ஊகத்தை உறுதிப்படுத்திக்கொள்ள கடல்நீரை ஊடறுத்து கடலடியை நோக்கினான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கரும் பச்சை நிறமாகத் தெரிந்தது கடல்.

ஆழமான இந்த இடத்தில்,

இருள் மங்கும் நேரத்தில் அமிழ்ந்து கிடக்கலாம் எனக் கருதும் வள்ளத்தை கண்டுகொள்வது இலகுவான காரியமல்ல...

கடல் நீரில் சுழியோடித்தான் தேடவேண்டும். அதற்கு உகந்த சமயமோ தொடர்ந்து தேடுவதற்கேற்ற சாத்தியமான சூழ்நிலையுமோ இல்லை...

கடல் நீரோட்டத்திற்கு இசைவாக வள்ளம் மெல்ல மெல்ல அசைந்து வளிந்துசென்றுகொண்டிருந்தது.

மிதக்கும் மீன்கள் வள்ளத்துடன் மோதிக் கொண்டிருந்தன... மீளமுடியாத யோசனையில் மூழ்கியிருந்த குலேந்திரனின் கண்கள் அவனை அறியாமலே நீரை வெளியேற்றின...

"நான் மூண்டுபேற்ற வீட்டையும்போய் என்னத்தச் சொல்ல...?"

கடல் நீரை வெறித்துப்பார்த்தபடியே கேள்வியெழுப்பினான்.

உணர்வு மேலிட அவன் அலறிய சத்தம் கேட்பாரின்றி காற்றோடு கலந்தது... ■

*1990 களில்*

---

* கிட்டத்தட்ட நூறு ஆண்டுகளுக்குமேல் பயன்படுத்தப்பட்டு வரும் தொழில் முறையே 'சிறகுவலை'. 17 முளம் வரையிலான உயர்ந்த காட்டுக் கம்புகளையும் வலைகளையும்கொண்டு வீடு கட்டுவதைப் போன்று வலைச்சுவராக கடலடி நிலத்தில் பாயப்படும் இது, ஒரு பொறி அமைப்பாகும். இதனைப் 'பட்டி' என்பர். பொறியினது வாயின் மையத்திலிருந்து நீண்ட வலைச்சுவர் கரையைநோக்கி நீண்டதாக இருக்கும். மீன்களைப் பட்டிக்குள் திசைதிருப்புவது இந்த வலையேதான். பட்டிக்குள் அகப்பட்ட மீன்கள் 'கடிப்புவலை' கொண்டு சேகரிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 14 அதீதம்

தனது தோட்டக் காணியில் புகையிலைச் செடிகள் செழித்து வளர்வதுகண்டு மிதமிஞ்சிய களிப்பில், அந்தரத்தில் மிதப்பதுபோல் நின்றார் தணிகாசலம். காலையில் எழுந்தவுடன் தோட்டத்திற்குச் சென்று அதன் செழிப்பைக் கண்குளிரப் பார்ப்பதே அவரது முதல் வேலையாக இருந்தது. மார்பளவு உயரத்திற்குப் பச்சைப் பசேலென வளர்ந்திருக்கும் புகையிலைச் செடிகளை கைகளால் அணைத்து இலைகளில் முத்தமிட்டு மகிழ்வார். அதீத வளர்ச்சி கண்டுள்ள செடிகளுக்குத் தவறாது நீர் பாய்ச்சுவதிலும், நோய்க் கிருமிகள் தொற்றி விடாமல் மருந்து அடிப்பதிலும் கண்ணும் கருத்துமாகவே இருந்தார்.

தன்னுடைய கண்ணே பட்டுவிடுமென அடிக்கடி கூறும் அவர், மற்றவர்களால் கண்ணூறு ஏற்பட்டுவிடாமல் தோட்டத்தின் நடுவில் உயரமான தடியில் 'வெருளி' ஒன்றைக் கட்டிவைத்தார். ஒரு மனிதன் தூக்கில் தொங்குவதுபோல அமைந்துள்ள வெருளியின் வினோதமான அமைப்பு நிச்சயம் மனிதர்களின் பார்வையைத் தன்பக்கம் இழுக்கவே செய்யும்.

* * *

இடப்பெயர்வு, உயர் பாதுகாப்புப் பகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

போன்ற காரணிகளால் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாகத் தோட்டம் எதுவும் செய்யாமல் கட்டாந் தரையாய்க் கிடந்த தோட்டக் காணியில் புல் பூண்டுகளைச் செருக்கிவிட்டு புகையிலைக் கன்றுகளை நட்டு, பாத்திகட்டி, நீரிறைக்கத் தொடங்கினார்.

காணியை உழுது செப்பனிட்ட பின்னரே நடுதல் வழமையாக இருந்தபோதிலும் வசதியீனங்கள், தொடங்கி விட்ட பருவமழை, போதிய கால அவகாசமின்மை போன்றவற்றால் உழுதலைத் தவிர்த்து புகையிலைக் கன்றுகளை நட்டுவிட்டுக் காத்திருந்தார் தணிகாசலம்...

முறைமாறிச் செய்யப்பட்ட தோட்டமென்பதால் பெரும் வருவாயை எதிர்பார்த்திருக்கவில்லை. நட்டமில்லாமல் இருந்தாலே போதும் என்ற நிலையில், ஏதாவதொரு தொழில் செய்யவேண்டுமென்ற ஆவலில் தணிகாசலம் அந்த விஷப் பரீட்சையில் இறங்கியிருந்தார். ஆனால், அவர் எதிர்பார்த்ததைவிட பல மடங்கு பயனைத் தருவதைப் போல் செடிகள் வளர்ச்சி கண்டமை அவரை அதிர்ச்சியடையச் செய்தது. 'கடவுள் கொடுத்த வரம்' என்றே நம்பினார். அதனால், தினமும் கோவிலுக்குச் சென்று நன்றி செலுத்திடத் தவறுவதில்லை.

* * *

குறித்த காலத்தில் செடிகள் அடைந்த முதிர்ச்சியினால் மூவரைக் கூலிக்கு அமர்த்தி பக்குவமாய் இலைகளை வெட்டுவித்தார் தணிகாசலம். ஏற்கெனவே பலமுறை புகையிலைச் செய்கையில் ஈடுபட்டிருந்ததால், அதில் அனுபவம் பெற்றவராக இருந்ததுடன், இலைகளை அடுக்கி உலரவைக்கும் முறையில் முறையான நுட்பம் பயன்படுத்தவேண்டும் என்பதையும் அறிந்திருந்தார்.

தமது அனுபவத்தைப் பயன்படுத்தி கூலிக்கு அமர்த்தியவர்களை நெறிப்படுத்திக் கொண்டிருந்தார்.

தோட்டத்தில் நின்ற புகையிலைச் செடிகளின் முதிர்ந்த இலைகள் அகற்றப்பட்ட பின்னர் காணியில் சிறிய இலைகளுடன் கூடிய தண்டுகளே காணப்பட்டன.

பச்சைப் பசேலெனக் காணப்பட்ட காணியை இப்போது பார்ப்பதற்கு தணிகாசலத்திற்குச் சங்கடமாக இருந்தது. தனித்து விடப் பட்டதுபோலக் காணப்பட்ட வெருளியைப் பார்த்து தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டார்.

* * *

செடிகளிலிருந்து பெற்றுகொள்ளக்கூடிய அதிஉச்சப் பயன் பெறப்பட்ட பின்னர், காணி வெறிச்சோடிக் காணப்பட்டது. சிறு தண்டுகளும், அதன் உயிர்ப்பை வெளிப்படுத்தும் இளந்துளிர்களுமே புகையிலைச் செடிகளின் எச்சங்களாக காட்சியளித்தன...

ஏற்கெனவே பதப்படுத்தப்பட்டு இருப்பில் வைக்கப்பட்டுள்ள



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புகையிலைகளால் கிடைக்கக்கூடிய வருவாயை எண்ணியபோது தணிகாசலத்தின் உடலும், உள்ளமும் துள்ளியது. அனுதினமும் அவற்றைக் கண்காணிப்பதும், சந்தைப்படுத்துவதுமே அவரின் வேலையாக இருந்தது.

கிடைத்த நிறைவான வருவாயினால் அடுத்த செய்கையை ஆரம்பிப்பதற்கு காலம் தாழ்த்த விரும்பாமல் ஆயத்தங்களில் ஈடுபடலானார். காணியை உழாமலே கன்றுகளை நட்டபோது அவரது வாழ்வில் சந்தித்திராத வருவாயைத் கொடுத்ததென்றால் முறையாக உழுது செப்பனிட்டுக் கன்றுகளை நட்டால் மேலும் பயனைத் தருமென நம்பினார்.

* * *

முழுமையாக வெயில் பூமியை ஆட்கொண்டிருந்தபோது தணிகாசலத்தினது தோட்டக்காணியில் முளைத்திருந்த புற்களும், சிறு செடிகளும், எச்சமாய் நின்ற தண்டுகளும் காய்ந்து, கருகிக் காணப்பட்டன.

இதுவே நல்ல தருணமென காணியை உழுதிட முடிவெடுத்து, ஒரு உழவு இயந்திரத்தை வாடகைக்கு அமர்த்தி வேலையைத் தொடங்கிவிட்டார்.

உழவு இயந்திரம் காணியின் உட்பகுதியால் வட்டமடிக்க, அதில் இணைத்திருந்த கலப்பை மண்ணை ஆழமாகத் தோண்டியவாறு இழுத்துச் செல்ல, மணல் புரண்டு புரண்டு மேலெழுந்து கொண்டிருந்தது. கலப்பை மண்ணை அழுத்தித் தோண்டும்போது எழுந்த ஓசைகளையோ, வீசிய அருவருப்பான மணத்தையோ சாரதி கவனித்ததாகத் தெரியவில்லை. வியர்க்க வியர்க்கச் சுற்றிச் சுழன்று உழுது தனது வேலையை முடித்து வெளியேறினான்.

உழவு இயந்திரம் சென்ற பின்னர், தனது எதிர்கால கனவுகளுடன் உழுத நிலத்தைப் பார்வையிட்டவாறு வரம்பு வழியாக சென்றுகொண்டிருந்த தணிகாசலம் சிறிது தூரம் சென்றதும் அரவத்தை மிதித்தவர்போல தடுமாறி நின்றார்...

அவரது கண்கள் அகல விரிந்திருந்தன...

பயத்தால் உடல் நடுங்கியது...

நெற்றியிலிருந்து வழிந்த வியர்வையை கைகளால் வழித்துத் துடைத்துக்கொண்டு பதட்டத்துடன் சுற்றுமுற்றும் பார்த்தார்...

சிறிது நேரத்திற்குள் பலநூறு எண்ணங்கள் நெழிந்து, புரண்டு மேலெழுந்துகொண்டிருந்தன. தனது உணர்வுகளை அடக்கித் தன்னைச் சுதாகரித்துக் கொண்டவராய் வரம்பிலிருந்து இறங்கி மண்ணில் கால் வைத்தார்... உடல் சிலிர்த்தது...

உழுததால் புரண்டு கிடந்த மண்ணில் உடைந்த மனித



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலும்புகள் கண்சிமிட்டிக்கொண்டிருந்தன...

காற்றோடு கலந்து வந்த புலால் நாற்றம் வெறுப்பையும் மீறி மூக்கினுள் நுழைந்தது...

அவரால் நிலத்தைப் பார்க்கவோ, மணத்தை முகரவோ, மேற்கொண்டு நடக்கவோ முடியவில்லை...

இதயத் துடிப்பு அதிகமாக இருந்ததால் அவரையறியாமலே பயம் அவருடன் ஒட்டிக் கொண்டது. சிந்தனையில் பல எண்ணங்கள் மாறி மாறி எழுந்தன...

தன்னிலை மறந்தவராக நிலத்தை பார்த்துக் கொண்டே நின்றார்...

'என்றோ ஒருநாள் இந்த மண்ணில் புதைக்கப்பட்ட மனித உடல்களின் எச்சங்கள்...'

நினைத்தபோது அவர் உடல் சிலிர்த்தது...

அதீத வளர்ச்சி கண்டு வெட்டப்பட்ட புகையிலைச் செடிகளின் உரமாக மனித சதைகளே இருந்துள்ளன...

தணிகாசலத்தின் கண்கள் வழியாக இரத்தம் கசிவதுபோல் எரிந்தன... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 15 பெல்லை

"நான் பிள்ளையைக் கொண்டுபோய் பள்ளிக் கூடத்தில விட்டுட்டு வாறன்."

"உங்களுக்கு நேரம்போகுதல்லா..."

"ஒன்பது மணிக்குத்தான் ஜெற்றியில இருந்து போகலாம் அதுக்கிடையில் விட்டுட்டு வந்திடுவன்"

சின்ராசா, இயந்திரம் மாதிரிச் சுழன்று மகளை ஈருருளியில் ஏற்றிச் செல்வதை வாசலில் புன்னகையுடன் பார்த்துக்கொண்டு நின்றாள் பரிமளம்.

இருவரும் பெற்றோரின் விருப்பமின்றி காதல் மணம் புரிந்தவர்கள். அதனால் பெற்றோருடன் உறவில்லாமல் தனிக் குடித்தனமாக வாழ்கிறார்கள். ஒரேயொரு மகள். அவள்மீது சின்ராசாவுக்கு அளவுகடந்த பிரியம். வீட்டில் நிற்கும் நேரங்களில் எப்போதும் தன்கூடவே வைத்திருப்பான். அவளுக்கும் ஐந்து வயதுக்கு மேலாகிவிட்டது. இரண்டாவது குழந்தை கிடைக்க இன்னமும் நாலு மாதம் காத்திருக்க வேண்டியிருந்தது.

சின்ராசா கடற்றொழிலையே ஜீவனோபாயத் தொழிலாகச் செய்துவருகின்றான். நாட்டில் இயல்புநிலை நிலவிய காலத்தில் தொழில் வருவாய் நிறைவாய்க் கிடைத்தன. அவர்கள் வாழ்வும் செழிப்பாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. இயல்புநிலை பாதிக்கப்பட்ட பின்னர் கொண்டுவரப்பட்ட கடல் வலையத் தடைச் சட்டத்தால் தொழில் வருவாயில் பெரும் பாதிப்பே ஏற்பட்டது. பல நாட்களில் வீட்டில் நெருப்பு எரிந்திருக்காது. இடைக்கிடையே கிடைக்கும் வருவாய் அவர்களுக்குப் போதியதாக இருக்கவில்லை.

கடற்தொழிலில் வருவாய் கிடைக்காத காரணத்தால் தொழில் செய்த பலர் தமக்கு முன் அனுபவம் எதுவுமில்லாத மேசன் வேலைக்கும், கப்பலிலிருந்து பொருட்களை இறக்குவதற்கும், கூட்டுறவுச் சங்கங்களுக்குப் பொருள் விநியோகத்திற்கும் கூலிகளாகச் செல்லத் தொடங்கினார்கள். இந்த வேலைகளைச் செய்வதற்கு சின்னராசாவுக்கு விருப்பமின்மை காரணமாக கடற்றொழிலையே தொடர்கின்றான்.

சின்ராசாவும் அவனது சக தொழிலாளரும் தொழில் செய்கையில் பல முயற்சிகளை மேற்கொண்டும் குறித்த நேரத்திற்குள், நிர்ணயிக்கப் பட்ட எல்லைகளுக்குள் போதிய வருவாயைப் பெருக்க முடியவில்லை.

ஆழ்கடலுடனும், அலைகளுடனும், காற்றுடனும், இயற்கையுட னும் போராடி தொழில் செய்யும் இவர்களுக்கு கடல்நீர் ஏரியில் கட்டுப்படுத்தப்பட்ட எல்லைகளுக்குள் எவ்வாறு தொழில் செய்ய முடியும்?... இவற்றிலும் வெற்றிகொண்டு வாழ்வைத் தொடர எடுக்கப்படும் முயற்சியே தற்போதைய கடற்றொழிலாகும்.

* * *

சின்ராசா பாடசாலையில் மகளை இறக்கிவிட்டு வந்ததும் தாமதியாது உடைமாற்றி தொழிலுக்குப் புறப்பட ஆயத்தமானான்.

"என்னங்க! வரேக்க கறிக்கேதும் கொண்டுவாங்க..."

"நேற்றைக்கு ஒரு புது இடத்தில வல படுத்திட்டு வந்தனாங்க... எப்பிடியும் மீன் கிடக்கும். பிள்ள பள்ளிக்கூடத்தால வாறதுக் கிடையில உனக்குக் கறிகொண்டுவந்திடுவன். நீ சோத்தக் காச்சு..."

"சின்ராசா... சின்ராசா..."

"ஓமண்ணே..."

சக தொழிலாளி பாக்கியத்தின் அழைப்பைக் கேட்டு வெளியே வந்தான்.

"நேரம் போகுதாண்ணே... இந்தா டக்கண வாறன்."

"நீ ஆறுதலா வெளிக்கிட்டு வா. நாங்க வலை போட்ட இடத்துக்குப் பிந்திப் போனாத்தான் நல்லம். மற்ற வள்ளங்களுக் குப் பின்னால போய் அங்கால ஓடலாம்."

தலையசைத்தவாறு உள்ளே சென்று பரிமளத்தின் கையிலிருந்த தேநீரைப் பெற்று அருந்திவிட்டு புறப்பட்டான்...

மீன் நிறையக் கிடைக்கும் என்ற எதிர்பார்ப்பில் எழுந்த சந்தோஷத்திலோ என்னவோ பரிமளத்தைத் திரும்பித் திரும்பிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பார்த்தவாறே சென்றான்... பாச உணர்வால் பரிமளத்தின் கண்கள் கலங்கியிருந்தன...

* * *

ஊரிலே பரபரப்பு... ஏதுமே அறியாததுபோல் பரிமளம் இருந்தாள். பொதுவாக அவள் வெளியில் செல்வதில்லை. பக்கத்து வீட்டிலிருப்பவர்களிடம் சொல்லித்தான் பொருட்களை வாங்குவாள். அதனால் ஊர்ப் புதினங்களை அவள் அறிய வாய்ப்பிருப்பதில்லை.

ஐந்து வருடங்களுக்கு மேலாக வீட்டு வாசலை அறியாத சின்ராசாவின் தகப்பன் இன்று வாசலில் நிற்பதைக் கண்டதும் பரிமளத்தின் கண்கள் ஆச்சரியத்தால் அகல விரிந்தன. ஓடிச்சென்று அன்பொழுக உள்ளே வரும்படி அழைத்தாள்...

அவர் கண்கள் கலங்க உள்ளே நுழைந்தார்...

மாமாவின் கண்கள் சந்தோஷத்தில் கலங்குவதாக எண்ணிய பரிமளத்தின் கண்களும் கலங்கின...

* * *

பரக்கப் பரக்க ஓடிவந்த பாக்கியம், சின்ராசாவின் வீட்டுக்குள் நுழைந்தான்.

"ஐயோ தங்கச்சி...."

பரிமளத்திற்குத் தூக்கிவாரிப்போட்டது... எதுவுமே புரியாமல் பாக்கியத்தையும் மாமனையும் மாறிமாறிப் பார்த்தாள்...

"பரிமளம்... பரிமளம்..."

"சொல்லுங்கண்ணே!..."

"நாங்க கொடிக்கு வெளியால தூரப்போய் வல படுத்தனாங்க... போயிற்றுத் திரும்பி வரேக்க நேவி கண்டுட்டான். எங்களால ஒண்டும் செய்ய ஏலயில்ல அவன் சுட்டதில சின்ராசா..."

"என்னண்ணே அவருக்கு?... சொல்லுங்க..."

"கழுத்தில சூடு பட்டுட்டு... உடனேயே முடிஞ்சிற்றம்மா..."

பாக்கியம் சொல்லி முடிக்கும் முன்னரே பரிமளம் மாமனார் மடியில் மயங்கி விழுந்தாள்... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 16 வாழ்க்கை

இராசம்மாவுக்கு உள்ளூர மகிழ்ச்சியாகவே இருந்தது... எப்போதும் புன்னகையுடனே காணப் பட்டாள்...

கணவனை இழந்த அவள் தனது இரு பிள்ளைகளுடனே வாழ்ந்து வருகிறாள்... பிள்ளைகள் இருவரும் திருமண வயதைக் கடந்தபோதும் திருமண வாய்ப்புக் கிடைக்காமலிருப்பது அவளுக்கு வேதனைதான். மூத்தவன் பையன் அவனுக்கு பெண்கேட்டு பலர் வந்தபோதும் 'சகோதரிக்கு திருமணம் நடக்காமல் தனக்கு வேண்டாம்' என்ற பிடிவாதத்தில் இருக்கிறான். இவர்களின் எதிர்காலத்தை யோசித்து யோசித்து இராசம்மாவின் இதயம் பலமிழந்து நோயாளியாகவே ஆகிவிட்டாள்.

தனது சகோதரியும், பிள்ளைகளும் - பேரப்பிள் ளைகளும் ஒருவாரமாக வீட்டில் தங்கியிருப்பதே இராசம்மாவின் மகிழ்வுக்குக் காரணம். தான் - மகள் - மகன் என மூவரும் மனச்சுமைகளோடு நடமாடும் போது நிலவிய நிசப்தம் புதியவர்களின் வருகையால் மாற்றமடைந்து காணப்பட்டது.

இது இராசம்மாவுக்கு பெரும் ஆறுதலைக் கொடுத்தது. புதியதொரு உற்சாகத்தைக் கொடுத்தது. நோயிலிருந்து சற்றுத் தேறிக் காணப்பட்டாள். இந்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூட்டு வாழ்க்கை எத்தனை நாளைக்குத்குதான் நீடிக்கப்போகிறது? என்ற ஏக்கம் அவளுள் இல்லாமலில்லை.

* * *

*2006 ஆவணி 11* அன்று திடீரென யாழ்ப்பாணத்தில் ஏற்பட்ட அசாதாரண நிலை காரணமாக கடற்கரையை அண்டிய பகுதிகளில் வாழும் மக்களை, உடனடியாக அங்கிருந்து புறப்படுமாறு அறிவித்தல் பல தடவைகள் விடுக்கப்பட்டன. இதனால் அங்கிருந்த மக்கள் அமுலிலிருந்த ஊரடங்கு நிலையையும் புறந்தள்ளி பல திசைகளாகப் பாதுகாப்புத் தேடி ஓடினர். ஆலயங்கள், பள்ளிக்கூடங்களெனத் தஞ்சம் புகுந்தனர். சிலர் பிரதான வீதிக்கு வடக்குப் பக்கத்தால் இருக்கும் உறவினர் தெரிந்தவர்களின் வீடுகளிலும் குடிபுகுந்தனர். அவ்வாறு குடிபுகுந்தவர் கள்தான் இராசம்மாவின் சகோதரி குடும்பதினராவர்.

இராசம்மாவின் வீட்டில் முன்னரைவிடப் பெரும் சமையல், பலரின் நடமாட்டம், சிறுவர்களின் சல்லாபங்கள், ஓய்வில்லாத உரையாடல்கள் போன்றவற்றால் இராசம்மாவில் மட்டுமல்ல அவரின் பிள்ளைகளிலும் பூரிப்புக் காணப்பட்டது.

காலையில் ஊரடங்கு நேரம் முடிந்ததும் ஆண்கள் ஆளுக்கொரு பக்கமாக உணவு மற்றும் பொருட்களைத் தேடி அலைவதும், கிடைக்கக் கூடிய இடங்களில் கூடுதல் விலையென்றாலும் பெற்றுக் கொள்வதும், குடும்ப அட்டையுடன் பிரதேச செயலகத்தால் அறிவிக்கப்படும் பதிவிடங்களைத் தேடி ஓடுவதுமெனத் தினமும் பெரும் களேபரம்தான்.

அரச அதிகாரிகளின் ஒழுங்கான திட்டமிடலற்ற செயற்பாடுகளி னால், வர்த்தகர்களின் நெறிதவறிய முறைகேடுகளினால் மக்கள் இடப்பெயர்விலும் பல இடர்களை எதிர்கொண்டனர், பல சுமைகளைச் சுமந்தனர், மோசமாக நடத்தப்பட்டனர் என்பது மக்கள் மனங்களில் மறுக்கமுடியாத உண்மையாக பதிவாகியுள்ளன.

* * *

இரவு ஊரடங்கு நேரமென்பதால், பகல் பூராவும் பலவகை வேலைகளில் ஈடுபட்டு ஓய்ந்திருப்பவர்கள், இரவில் வீட்டின் முன்னாலுள்ள சிறிய முற்றத்தில் கூட்டமாகக் கூடி அரட்டையடிப்பதும் - தாயம் விளையாடுவதும் - அன்று கிடைக்கப்பெற்ற தகவல்களை ஒவ்வொருவரும் மாறிமாறிச் சொல்லும்போது, வாய்பிழந்தபடி மற்றவர் கேட்டுக்கொண்டிருப்பதும் - வருவாயற்ற நிலையில் மறுநாள் தேவையை நிறைவுசெய்யும் வழிகளைச் சிந்திப்பதுமாக இராசம்மாவின் வீட்டிலுள் ளோரின் பொழுதுகள் போய்கொண்டே இருந்தன.

* * *

வானில், பாதி சந்திரன் தன்னாலியன்ற ஒளியைப் பூமிக்குக் கொடுத்துக்கொண்டிருந்தான். மின்சாரம் தடைப்பட்டிருந்ததால் சந்திரனின் ஒளிக்குப் பெரும் வரவேற்பு இருந்தது. அந்த ஒளியில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராசம்மா வழமைபோல் கதிரையில் இருக்க, ஏனையவர்கள் இராசம்மாவிற்கு முன்னால் நிலத்திலிருந்தவாறு வழமையான பல்லவியைத் தொடர, சிறுவர்கள் லாந்தர் ஒளியில் தாயம் விளையாடிக் கொண்டிருந்தனர்.

"டுடும்... டுடும்... டுடும்..."

திடீரென மிக அண்மையிலிருந்து எறிகணைச் சத்தங்கள் தொடராகக் கேட்டன... இருந்தவர்கள் திடுக்கிட்டு சத்தம் வந்த திசையைப் பார்த்தனர். ஒளிப்பிழம்புகள் ஒன்றன்பின் ஒன்றாய் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கிப் பறந்துகொண்டிருந்தன. கணநேரத்தில் இராசம்மாவைத் தவிர எவரும் அங்கு இல்லை. இடறியடித்துக்கொண்டு வீட்டிற்குள் புகுந்து விட்டார்கள். இடறலில் விழுந்தவர்களும் உளர்.

இவர்கள் ஏற்கெனவே பல கட்டங்களில் பலவகைப்பட்ட எறிகணைச் சத்தங்களைக் கேட்டிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சத்தம் அவர்களுக்கு புதுமையாக இருந்தது.

என்றுமில்லாதவாறு தொடராக முப்பதுக்கும் மேற்பட்ட எறிகணைகள் ஓசையெழுப்பித் தீப்பிழம்பாய்ப் பறந்ததும், மிக அண்மையிலிருந்து சத்தம் கேட்டதினாலுமோ என்னவோ எல்லோரையும் அதிர்ச்சியடையச் செய்தது...

இதயம் வேகமாக துடிக்க முதன்முதல் உலகத்தைப் பார்ப்பவர்போல் வெறித்துப் பார்த்தபடியே மறைந்து நின்றார்கள் இராசம்மாவின் வீட்டிலிருந்தவர்கள்...

அங்கே முழுமையான அமைதி நிலவியமையால் இதயத் துடிப்பின் ஒலியை ஒவ்வொருவரும் நன்றாகவே உணர்ந்தனர்...

சில வினாடிகளில் தொடரான சத்தங்கள் தூரத்தே கேட்டன. இங்கிருந்து ஏவப்பட்ட எறிகணைகள் எங்கோ விழுகின்றன என ஊகித்துக்கொண்டாலும் அவர்களது இதயத்தின் படபடப்பு நின்றபாடாயில்லை...

சத்தங்கள் முற்றாக அடங்கி அமைதி நிலவியது...

மறைந்து நின்றவர்களுக்கு இப்போதுதான் இராசம்மாவின் நினைவு தோன்றியிருக்கவேண்டும்.

பதைபதைப்புடன் வெளியே ஓடி வந்தனர்... இராசம்மா கதிரையிலேயே இருந்தார்....

"என்னம்மா பயமில்லாம இருந்தனியா?..."

மகள் கூறியவாறு தாயின் தோளைத் தொட்டசைத்தாள். அவளின் உடல் முன்னோக்கிச் சரிந்தது....

"அம்மா..."

மகளினது அலறல் அமைதியைக் கிழித்துக்கொண்டு பல வீடுகளுக்குக் கேட்டிருக்கவேண்டும்... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 17 தூக்கம்

வீட்டுக்கு வர்ணம் அடிப்பதிலிருந்து திருமணத்திற்கான அனைத்து முன்னேற்பாட்டு வேலைகளும் தடல்புடலாய் நடந்து கொண்டிருந்தன... திருமணத்திற்கு இன்னமும் ஒரு மாதம் இருக்கும் நிலையில் அதற்குள்ளே செய்யவேண்டிய வேலைகள், வாங்கவேண்டிய பொருட்கள் எனப் பெரும் பட்டிய லையே போட்டு வைத்திருந்தார் பெஞ்சமின்.

விதுஷா, அவரது ஓரேயொரு பெண் வாரிசு. அதனால் ஊரார் மெச்ச, அவளது திருமணத்தைச் சிறப்பாகச் செய்யவேண்டுமென்பது அவரது நெடுநாள் ஆசை. 'தற்போதைய நிலையில் இது அவசியமற்றது' என மனைவி சந்திரா பல தடவைகள் சொல்லிப் பார்த்தாள்...

நாட்டில் ஏற்பட்டுள்ள அசாதாரண சூழலால் தடைப்பட்ட ஏ9 பாதை - ஏற்பட்ட பணவீக்கம் - அரசின் சதுரங்க விளையாட்டுகளால் யாழ்ப்பாணத்தில் ஏற்பட்டுள்ள பொருட்களின் விலையேற்றம், பொருட்களின் தட்டுப்பாடு, பலவகை கெடுபிடிகள் போன்றவற்றின் மத்தியிலும் ஊரார் வியக்கத் திருமண விழா கொண்டாடவேண்டுமென்ற பெஞ்சமினின் பிடிவாதத்தில் மாற்றமே இல்லை. சந்திரா அவரின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணத்திற்கே விட்டுவிட்டாள்.

பிள்ளைகள் இருவர் பிரான்ஸில் இருக்கின்றனர். அவர்கள் அங்கு போய் சில மாதங்கள்தான். ஒழுங்கான வேலை இல்லை. இடைக்கிடையே வேலைசெய்வதும் வேலை தேடுவதுமாக இருக்கிறார்கள். இந்த விபரங்கள் பெற்றோருக்குத் தெரியக்கூடாதென்பதற்காக நண்பர்களிடம் பணத்தைக் கடனாகப் பெற்று, சகோதரியின் திருமணத்தை சிறப்பாகச் செய்வதற் கேற்றவகையில் அனுப்பிவைத்திருந்தனர். இதனால் கணவன் மனைவியிடையே எவ்விதச் சங்கடமோ, சிறப்பான கொண்டாட்டத் திற்கு எந்தவித தடையுமோ இருக்கவில்லை.

* * *

காலையில் நகைக் கடையில் கொள்வனவுசெய்த நகைகளை விதுஷா, திறந்த வாய் மூடாமல் தனக்குத்தானே போட்டுப்போட்டு அழகு பார்க்க, சந்திரா 'உண்டியல்' மூலம் வந்த பணத்தை எண்ணிக்கொண்டி ருந்தாள். இருவரும் அடைந்த மனநிறைவை அவர்களின் புன்னகை வெளிப்படுத்தி நின்றது...

வேலையாட்களுக்கும், கடைக்கும் கொடுக்கவேண்டிய பணத்தைப் பிரித்தெடுத்து வைத்துக்கொண்டு ஏனைய பணத்தையும், நகைகளையும் கைப்பையினுள் இட்டு அலுமாரிக்குள் பாதுகாப்பாக வைத்துப் பூட்டினாள்... திறப்பை கழற்றி தான் வழமையாக வைக்குமிடத்தில் வைத்துவிட்டு மீண்டுமொருமுறை அலுமாரிக் கதவின் பிடியைப் பிடித்து இழுத்துப் பார்த்தாள். அது பூட்டப்பட்டிருந்ததில் ஒரு திருப்தி...

* * *

பகல் பூராவும் ஓடியாடித் திரிந்ததால் எற்பட்ட உடல் அலுப்புத் தீர அரைப் போத்தல் சாராயத்தை முழுமையாய் விழுங்கிவிட்ட பெஞ்சமின், இரவு உணவு உண்ணாமலே ஓர் அறையில் படுத்துவிட்டார். மனைவியும் மகளும் எவ்வளவோ முயன்றும் அவரை எழுப்புவதில் தோல்விகண்டவர்களாய் தாமும் படுக்கைக்குச் சென்றுவிட்டனர்.

இரவு எட்டு மணி முதல் பரவலாகக் கேட்டுக்கொண்டிருந்த எறிகணைச் சத்தங்களால் பெஞ்சமினின் நித்திரைக்கு எவ்வித பாதிப்புமில்லை. ஆனால் சந்திராவும் விதுஷாவும் நித்திரையின்றித் தமது அறையில் புரண்டுகொண்டு கிடந்தார்கள். அயர்வதும் ஷெல் சத்தம்கேட்டு விழிப்பதுமாக அவர்கள் நிலை இருந்தது. கண்கள் எரிய தமக்குள்ளே ஏசிக்கொண்டு மெல்லமெல்ல உறக்கத்தை அணைத்துக் கொண்டனர்.

* * *

திடுக்கிட்டு விழித்தாள் விதுஷா...

"அம்மா... அம்மா... பின்னால கண்ணாடி உடைஞ்சு சத்தம் கேட்டதம்மா..".



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"அது ஒண்டுமில்லை நீ படு... இப்ப கேவியூவெல்லா? ரெண்டு பக்கமும் ஆமிச் சென்றி பொயின்ற் இருக்கு இஞ்ச ஆர் வாறது...? கனவு கண்டிருப்பாய் பேசாமப் படு..."

மறு பக்கம் திரும்பி படுத்துக்கொண்டாள். சிறிது நேரம் காதுகளை கூர்மையாக வைத்திருந்த விதுஷாவும் ஆற்றாமையால் அயர்ந்துபோனாள்...

* * *

"டக்... டக்..., டக்... டக்..."

அறைக் கதவில் யாரோ தட்டும் சத்தம் கேட்டு சந்திரா சினத்துடன் விழித்தாள்...

"இந்த மனுஷனோட பெரிய கரைச்சல். மூக்குமுட்ட குடிச்சுப்போட்டுப் படுத்தவருக்கு இப்பத்தான் முறிஞ்சிருக்கு தாக்கும்."

கூறியபடி எழுந்தவள், எரிந்துகொண்டிருக்கும் கண்களைத் திறவாமலே கதவைத் திறந்தாள்... திடீரென இரண்டு கரங்கள் அவள் மூக்கோடு சேர்த்து முகத்தையும் - பிறடியையும் அமுத்தின... அவள் தடுமாறி குரல் எழுப்புவதற்குள் மயக்கம் அவளை முந்திக்கொண்டது...

விதுஷாவும் விழித்துக்கொண்டாள். தாய் சோர்ந்து விழுவதையும் யாரோ மூவர் நிற்பதையும் கண்ட அவள் இதயம் பயத்தால் பதறியது... வார்த்தைகள் வெளிவராமல் சிக்கிக்கொண்டன... எழ முயன்றாள்.

சட்டென ஒருவன் ரிவால்வரை நீட்டியவாறு விதுஷாவை நெருங்கினான்...

"எழும்ப வேணாம்... வாய் திறக்க வேணாம்... மீறினா எல்லாரையும் சுட்டுப்போடுவன்."

கூறியவன் அவளது மூக்கில் துணியை வைத்து அமுத்தினான்... சில வினாடிகளில் விதுஷாவின் கண்கள் சொருகின...

* * *

பக்கத்துவீட்டில் அழுகுரல் கேட்டு சந்திரா சிரமப்பட்டுக் கண்களைத் திறந்தாள். சூரிய ஒளிக் கதிர்கள் அறைக்கு ஒளியூட்டியது.

கண்கள் நெருப்பாய் எரிந்ததால் மூடி மூடி விழித்தாள்.

அவளுடல் பலத்தை இழந்ததுபோன்ற நிலையில் சோர்வாக இருந்தது.

வயிற்றைக் குமட்டியது... நெஞ்சு எரிந்தது...

நெஞ்சைத் தடவிக்கொண்டாள்..

தலை பாரமாக இருந்ததால் தூக்கச் சிரமப்பட்டு படுத்தபடியே தலையைச் சரித்துப்பார்த்தாள்...

தான் படுத்த இடத்தில் தற்போது இல்லை...

தேள் கொட்டியதுபோல் துடித்து சட்டென உடலை நிமிர்த்திப் பார்த்தாள்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதுஷா உறக்கத்தில் கிடந்தாள். கிட்டே சென்று தட்டி எழுப்பினாள். அவள் எழவில்லை... சிரமப்பட்டு போத்தலில் இருந்த தண்ணீரை எடுத்து முகத்தில் தெளித்தாள். முகம் அசைந்தது - கண் திறக்கவில்லை...

இரவு நடந்த நிகழ்வுகள் யாவும் சந்திராவுக்கு கனவில் நடந்ததுபோல ஒவ்வொன்றாய் தோன்றிக்கொண்டிருந்தன... கதவு தட்டப்பட்டது, தான் எழுந்தது கதவைத் திறந்தது, இரண்டு முரட்டுக்கரங்கள் தன் முகத்தை அழுத்தியது எல்லாம் தொடர்புகளற்று நினைவுகளில் புரண்டு வந்தன...

நிதானமான சிந்திக்க முடியவில்லை.

பக்கத்து வீட்டிலிருந்து அழுகுரல் கேட்டுகொண்டேயிருந்தது...

தன் நினைவுகளைக் கூர்மையாக்கி யோசித்தாள்...

ஏதோ புரிந்துகொண்டவள் போல தலையை அசைத்தவாறு எழுந்தாள்...

உடல் நடுங்கித் தள்ளாடியது...

பயம் அவளை ஆக்கிரமித்துக்கொண்டது...

இதயத்தின் அதிவேகத் துடிப்பை அப்போதுதான் அவளால் உணர முடிந்தது...

தயங்கித் தயங்கி கணவன் படுத்திருந்த அறையைத் திறந்தாள்.

மருந்து வாடை மூக்கை அரித்தது.

ஏற்கெனவே அவளால் உணரப்பட்ட அதே மணம்...

கணவன் இன்னமும் உறக்கத்தில்... இல்லை இல்லை மயக்கத்தில் கிடந்தார்...

அடுத்த கணமே, தனது தொடர்புகளற்ற நினைவுகளுக்கு ஒரு ஆதாரம் கிடைத்துவிட்டதை உணர்ந்தாள். உடல் சிலிர்த்தது.

இரவு நிகழ்வுகள் யாவும் மனத்திரையில் இப்போது தெளிவாக ஓடிக்கொண்டிருந்தன...

சட்டெனத் திரும்பி, தான் படுத்திருந்த அறைக்குச் சென்று அலுமாரிக் கதவைத் தொட்டுப் பார்த்தாள்...

கதவுகள் திறந்து கிடந்தன....

அவள் போட்ட கூக்குரல், பக்கத்து வீட்டிலிருந்துவந்த அழுகுரலோடு இணைந்து கொண்டது...

"ஒரே இரவில் பல வீடுகளில் துணிகரத் திருட்டு..."

வானொலியில் விசேட செய்தியாக ஒலிபரப்பாகியது... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 18 காத்திருப்பு

பல்கலைக்கழகத்தில் இறுதியாண்டு மாணவனாகக் கல்வியைத் தொடரும் வினோதன் பலராலும் பேசப்படும் ஒருவனாகவே இருந்தான்.

எதையும் அறிந்துகொள்ளவேண்டுமென்ற ஆர்வம், நிறைய வாசிக்கவேண்டுமென்ற துடிப்பு, கணினித் தொழில்நுட்பத்தைக் கையாளுவதிலுள்ள திறமை, தேவையற்ற பொழுதுபோக்குகளின்றி படிப்பதிலுள்ள நாட்டம் போன்றவற்றால் மற்றவர்களைவிட உயர்நிலையில் காணப்பட்டான். அவனது அதீத திறமைகள் பலரையும் அவன்பால் ஈர்க்கவைத்தது.

* * *

வினோதன் குடும்பம் சாதாரண ஒரு குடும்பம்தான். அவனுக்கு மூன்று தங்கைகள். அவர்களும் படிப்பில் சளைத்தவர்களல்லர். மூத்தவள் வினோதினி க.பொ.த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி பரீட்சை முடிவுக்காகக் காத்திருக்கிறாள். மேசன் வேலைக்குச் செல்லும் தந்தை துரைச்சாமியின் வருவாயில்தான் அவர்களது சீவியம்.

வீடே கதியென்றிருக்கும் தாய் சரோஜா, 'நாங்க படிக்கயில்ல நீங்களாவது படிச்சு முன்னுக்கு வரவேண்டும்.' என்ற தாரக மந்திரத்தை அடிக்கடி பிள்ளைகளுக்குச் சொல்லிக்கொள்வாள். பிள்ளைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீது அளவுகடந்த பாசம் அவளுக்கு. அவர்களின் முகம் வாடுவதை அவளால் தாங்கமுடியாது. வழமையாக வரும்நேரத்தைவிட சற்றுத் தாமதித்து வந்தால் அவள் நெருப்பின்மேல் நிற்பவள் போலவே தவிப்புடன் இருப்பாள்.

* * *

சரோஜா இன்று அறிந்த தகவலால் அதிர்ச்சி மேல் அதிர்ச்சி அவளுக்கு... விறாந்தை மூலையில் இருந்தவாறு யோசனையில் மூழ்கியிருந்தாள்... கண்கள் கலங்கியிருந்தன...

துரைச்சாமி வேலையால் வந்ததும் ஓடியோடி காரியமாற்றும் சரோஜா இன்று அவர் குளித்துமுடித்து விறாந்தைக்கு வந்தும் அவள் அசையாமல் இருப்பது ஆச்சரியமாக இருந்தது... திடீரென சரோஜாவிடமிருந்து எழுந்த விம்மலைக் கண்டு துடித்துப்போனார் துரைச்சாமி... சரோஜாவின் அருகிலிருந்து அமைதியாய் விசாரித்தார்...

"எங்கட செல்வரெட்டினம் மாஸ்ரர் அப்போத வந்தவர். தம்பிய எனிமேல் இஞ்ச வச்சிருக்க வேணாமெண்டு அவர் போகப் போகச் சொல்லிக்கொண்டு போறார்..."

துரைச்சாமிக்கு விபரம் சட்டெனப் புரிந்தது. யாழ்ப்பாணத்தில் இருப்பவர்களுக்கு இந்த விடயம் பற்றி விபரமாகக் கூறவேண்டிய அவசியமே இல்லை.

யார் எவரென்றில்லாமல் தினமும் இருவருக்கு மேல் கொல்லப்படுவதும், உயிர் அச்சுறுத்தலுக்காகப் பலர் சரணடைவதும் தொடர்கதையாகவே நீண்டுசெல்கின்றது. தடுப்பதற்கு எவரும் எந்த நடவடிக்கையும் எடுத்ததாக இல்லை.

மௌனம் சம்மதம் என்ற நிலைதான்...

"நானும் சொல்லுவோமெண்டுதானம்மா இருந்தனான்..."

வினோதினி குறுக்கிட்டுக் கூறினாள்...

"நாங்க இப்ப என்ன செய்யிறது? கையில காசு பணமா இருக்கு. எங்கையெண்டாலும் அனுப்புறதுக்கு...? எங்களுக்கு ஆற்ற உதவி இருக்கு புள்ள? இந்த மனுசன் கையக் கால அடிச்சுத்தான் எங்க எல்லாரட சீவியமும் போகுது... இதுக்குள்ள..."

சரோஜா குழந்தைபோல் விக்கி விக்கி அழுதாள். வினோதினி சமாதானப்படுத்தினாள்.

"கொழும்பிலயும் பயம்தானே!... இந்தியா அல்லாட்டி வேற நாட்டுக்குத்தான் அனுப்பவேணும். அதுக்கெண்டா கொஞ்சக் காசா வேணும்...?"

துரைச்சாமி கூறிவிட்டு யோசித்தார்... நேரத்தைப் பார்த்தார்... ஐந்து மணி. ஊரடங்கு சட்ட நேரத்திற்கு இன்னமும் இரண்டு மணித்தியாலம் உண்டு...

அறைக்குள் சென்று சேட்டை அணிந்தவாறு திரும்பினார்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வினோதனுக்கு ஒண்டும் தெரியவேணாம். நான் காணி ஈடு வைக்கிறதுக்கு கேட்டுப்பாத்திட்டு வாறன். இந்தியாவுக்கு அனுப்பினாத்தான் அவன்ர கெட்டித்தனத்துக்குப் படிச்சு நல்லா வருவான்... நான் வாறன்..."

துரைச்சாமி செல்வதையே பார்த்துக்கொண்டு நின்றனர்... வீடு அமைதியை இழந்தது...

* * *

துரைச்சாமி சென்ற விடயம் சரியாக அமைந்ததால் சரோஜா வினோதனைக் கூப்பிட்டு பக்குவமாய் எடுத்துக் கூறினாள்.

அவன் மறுப்பே தெரிவிக்காமல் ஏற்றுக்கொண்டது அவளுக்கு பெரும் ஆச்சரியம். உயிர் அச்சுறுத்தலுக்கு முகங்கொடுக்க யார்தான் துணிவார்?

மறுநாள் கிராமசேவகருக்குக் கடிதம் எழுதி, அதனைப் பிரதேச செயலகத்தில் ஒப்படைத்து விண்ணப்பப் படிவத்தைப் பெற்று, பூரணப்படுத்தி கிராமசேவகரிடம் ஒப்பம் பெற்று, இராணுவத்தின் சிவில் அலுவலகத்தில் ஒப்படைத்து முடிந்த பின்னர்தான் துரைச்சாமி நிம்மதிப் பெருமுச்சு விட்டார்...

இரண்டு நாட்கள் வேலைக்கும் செல்லவில்லை. பயண அனுமதி கிடைக்க ஒரு வாரத்திற்கு மேலாகுமென்பதால் வேலைக்குச் செல்ல முடிவெடுத்தார்.

* * *

அனைவரும் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தனர்...

நடுச் சாமம்.

தொடராக கதவு தட்டப்படும் சத்தம்...

எல்லோருமே விழித்துக்கொண்டாலும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தவாறு அதிர்ச்சியில் இருந்தனர்.

கதவில் தட்டுதல் அடியாக மாறி அதன் சத்தம் வரவர அதிகமாகக் கேட்டது...

கதவு உடைந்துவிடும்போலிருந்தது...

கதவின் அடியைவிட எல்லோர் இதயமும் வேகமாகத் அடித்தது...

சரோஜா தடுத்தும் கேட்காமல் துரைச்சாமி கதவைத் திறந்தார்... யாரோ இருவர் சட்டென உள் நுழைந்தனர்.

"வினோதனை ஒரு விசாரணைக்காக கூட்டிக்கொண்டு போக வந்தனாங்க. சத்தம் போடாம எங்களோட விட்டா விசாரித்திட்டு விட்டுடுவோம். குழம்பினா நீங்கதான் கஸ்ரப்படுவீங்க..."

கூறியவாறு வினோதனின் கையைப் பிடித்து இழுத்தார்கள்... அவன் பெற்றோரையும் சகோதரர்களையும் கனிவாகப் பார்த்தான்... அவர்களுக்கு வாய்விட்டுக் கதறவேண்டும் போல இருந்தது...

**கலையார்வன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய சகோதரி சேட் கொண்டுவந்து கொடுத்தாள்...

சேட் அணியும்வரை காத்திருந்த அவர்கள் கையைப் பிடித்துக் கூட்டிச் சென்றனர்.

நின்றவர்கள் மறுப்புக்கூறத் திராணியற்று பேயறைந்தவர்கள் போலானார்கள்... மறுத்தால் அவர்களும் உயிரோடு இருக்கமுடியாது என்பதை வேறு பல சம்பவங்கள் நிரூபித்திருக்கின்றன.

விடியும்வரை அவர்களின் அழுகை நிற்கவேயில்லை.

விடிந்தும் விடியாததுமாய் துரைச்சாமி புறப்பட்டுவிட்டார்...

மனித உரிமைகள் ஆணைக்குழு, இராணுவ முகாம்கள், அமைப்புகளின் அலுவலகங்கள், சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என முக்கியமான இடங்களுக்கெல்லாம் அலைந்தும் பயனின்றி சோர்ந்துபோய் வந்தார்.

* * *

'நெல்லியடிப் பகுதியில் இனந்தெரியாத சடலம் கண்டுபிடிக்கப்பட்டு வைத்தியசாலையில் ஒப்படைக்கப் பட்டிருப்பதாக' இரண்டு நாட்களின் பின்னர் பத்திரிகையில் செய்தி வெளியாகியது.

துரைச்சாமி தாமதியாது வைத்தியசாலைக்குப் புறப்பட்டு விட்டார்.

அவர் சென்று பார்வையிட்டு உறுதிப் படுத்தும்வரை தன் மகனின் வரவிற்காய் வாசலில் கண்ணீருடன் காத்திருந்தாள் சரோஜா...

நீண்ட நேரத்தின் பின்னர் துரைச்சாமி வந்தார்...

எல்லோரும் அவரையே பார்த்துக்கொண்டிருந்தனர்...

வீட்டிற்குள் புகும்வரை அமைதியாய் இருந்தவர், தம்மைக் கட்டுப்படுத்தமுடியாமல் கதறிய கதறலும் வெளியேற்றிய கண்ணீரும் வினோதனின் முடிபை தெளிவுபடுத்தின... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 19 முரண்பாடு

வெங்காயச் செய்கையால் கைமேல் பலனை எப்போதும் தந்துகொண்டிருந்த தோட்டக் காணிகளையும், வாழைத் தோட்டத்தையும் விட்டுச் செல்ல கந்தையாவுக்கு விருப்பமேயில்லை. மனைவி செல்வதியின் ஓயாத புலம்பலும், நிற்காத அழுகையும் அவரை முடிவெடுக்கவேண்டிய நிலைக்குத் தள்ளி விட்டது. இதில் செல்வதிக்கு பூரண திருப்தி.

செல்வதி சொல்வதிலும் உண்மை இருந்தது. மூத்தவன் நிர்மலன் பல்கலைக்கழகப் படிப்பை நிறைவுசெய்து வேலைக்காகக் காத்திருக்கிறான். எப்போதும் வீடும் பல்கலைக்கழகமும் என்றிருந்தவனின் கல்லூரி நண்பர்கள் சிலர் நாயைச் சுடுவதுபோல் நடுவீதியில் சுட்டுக்கொல்லப்பட்டதிலிருந்து அவன் பயத்துடனே நடமாடுகிறான். வேலை தேடுவதிலிருந்த ஆர்வம் குன்றியே காணப்பட்டான். இதனை செல்வதியால் ஜீரணிக்க முடியவில்லை. அவனை நினைத்தே அவளது கண்களில் நீர்...

கந்தையா - செல்வதி தம்பதியினருக்கு பத்து வயதுச் சிறுமி உட்பட இரண்டு பெண்களும் இரண்டு ஆண்களுமாக நான்கு பிள்ளைகள். நிர்மலனுக்காக மட்டுமல்ல, ஏனைய இருவரினதும் வயதையும் தோற்றத்தையும் கருத்தில்கொண்டே அவளது புலம்பல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமைந்திருந்தது.

இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் பாதுகாப்பு இல்லை என்பது அவளது உறுதியான முடிவாகும். தினம்தினம் கடத்தப்படுவதும், கண்ட இடங்களில் சுட்டுக்கொல்லப்படுவதும் வழமையான நிகழ்வாகவே அமைந்துவிட்டது.

இதுபற்றி கதைப்பதற்கோ, தட்டிக்கேட்பதற்கோ, தடுத்து நிறுத்துவதற்கோ எவரும் முன்வராமையினால் மக்கள் உச்சவேதனையின் மத்தியிலே வாழ்கிறார்கள். கடவுளே கதியென மௌனியாய் இருக்கிறார்கள். அவர்களுள் ஒருத்தியாகவே செல்வதி காணப்படுகிறாள்.

சுற்றாடலிலிருந்த பல குடும்பங்கள் பாதுகாப்புக் கருதி இடம்பெயர்ந்து செல்லச்செல்லச் செல்வதியின் நச்சரிப்பும் அதிகரித்துக் கொண்டேயிருந்தது. செல்வதியின் இடைவிடாத நச்சரிப்போ, புலம்பலோ மட்டுமல்ல அனுதினமும் கேட்கும் செய்திகள், அயலவர்களின் இடப்பெயர்வுகளும் கந்தையாவின் உள்ளத்தை உரசத்தொடங்கியது.

நடைமுறைகளை பின்பற்றி ஒரு வாரத்தில் கிளிநொச்சிப் பகுதியிலுள்ள செல்வதியின் சகோதரி வீட்டைச் சென்றடைந்தனர். அவர்களது வளவு பெரிதாக இருந்தபோதும் வீடு போதிய வசதியுள்ளதாக இருக்கவில்லை. இதனால் வளவில் ஒரு பகுதியில் கொட்டில்போட்டு தமது வாழ்வைத் தொடர்ந்தனர். தனித்தனிக் குடும்பமாக இருப்பதையே செல்வதியும் விரும்பினாள்.

நிர்மலனின் கல்வி அவனுக்குப் பெரிதும் துணைசெய்ததால், வெகு விரைவாகவே நிறுவனமொன்றில் வேலை பெற்றுக்கொண்டான். கந்தையா கூலி வேலைக்குச் செல்லலானார். இருவரினதும் வருவாய் அவர்களின் சீவியத்திற்குப் போதியதாகவே இருந்தது.

* * *

யாழ் குடாநாட்டைவிட்டு வன்னி பெருநிலப்பரப்பில் குடியேறி, செல்வதியின் புலம்பல் - அழுகைகளின்றி ஒருமாதம் விரைவாகவே கடந்து விட்டது. ஆரம்பத்தில் எதிர்கொண்ட வாழ்வியல் இடையூறுகள் தீர்க்கப்பட்ட நிலையில் நகர வாழ்விலிருந்து மாற்றம்பெற்று கிராம வாழ்வுக்கு பழக்கப்படுத்திகொண்டார்கள்...

அவர்களது இடர்களற்ற சுமூக வாழ்வு, தேடிய நிம்மதியைக் கொடுத்த வாழ்வு ஒரு மாதத்திலே சின்னாபின்னமாகிடுமென, குடியேறியபோதோ அன்றேல் இன்றுவரையோ நினைத்துக்கூடப் பார்த்திருந்ததில்லை...

* * *

இரவு, கொட்டும் பனியின் மத்தியில், அடர்ந்த மரங்களின் இலைகளை ஊடறுத்து, இளமஞ்சள் நிற ஒளியை பூமிக்குப் பூரணமாகக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுத்துக்கொண்டிருந்தது சந்திரன்...

காற்று சற்று அதிகமாக வீசியதால் மரங்கள் அசைந்தாடும்போது ஏற்படும் ஒலிகளுடன் இணைந்தாற்போல் காணப்பட்ட ஒளி அசைவு பார்ப்பதற்கு அழகாக இருந்தது.

கொட்டும் பனியில் வெளியே நிற்க எவருக்குந் துணிவில்லையாகையால். அந்த அழகை இரசிப்பதற்கு ஏற்ற தருணமாக இன்றைய இரவு அமையவில்லை.

பனியைத் தடுத்து, குளிரை உட்செலுத்திக்கொண்டிருக்கும் தமது வாசஸ்தலமான ஓலைக் கொட்டிலில், காற்றினாலெழும் இரைச்சலையும் பொருட்படுத்தாமல் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்தது கந்தையா குடும்பம். நிர்மலன் மட்டும் சிறிய தாயின் வீட்டில் வழமைபோல் படுக்கச் சென்றுவிட்டான்...

அதிகாலை ஐந்து மணி...

"டுடும்... டும்..."

திடீரென எழுந்த பாரிய வெடிச் சத்தங்கள் கேட்டு கிளிநொச்சி நகரமும், சுற்றாடலிலுள்ள கிராமங்களும் விழித்துக் கொண்டன...

சத்தங்கள் அடங்கிய பின்னர் தத்தமது இருப்பிடங்களிலிருந்து வெளிவந்த மக்களில் சிலர், குடிசைகள் எரிவதைக் கண்டனர். அவற்றின் ஒளியில் சின்னாபின்னமாகிவிட்ட சில குடிசைகளையும் கண்டனர்...

அவற்றில் ஒன்றுதான் கந்தையாவின் குடிசை...

கந்தையா படுகாயமடைந்து வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டார். செல்வதியும் மூன்று பிள்ளைகளும் உடல் சிதறிக் கிடந்தார்கள். நிர்மலன் போட்ட கூக்குரல் காற்றின் இரைச்சலையும் மீறி பலரது செவிகளைச் சென்றடைந்தது...

* * *

"இனங்காணப்பட்ட இடத்தில் இலக்குத் தவறாமல் விமானப் படையினர் வீசிய குண்டால் பயங்கரவாதத் தலைவர்கள் கூடுமிடத்தில் பல பயங்கரவாதிகள் கொல்லப்பட்டனர்..."

மறுநாள் காலை வெளியான பத்திரிகைகளில் தலைப்புச் செய்தியாக இருந்தது.

அதே பத்திரிகைகளில் கிபீர் விமானக் குண்டுத் தாக்குதல் காரணமாக;

சிதறிய வீடுகள்,

கொல்லப்பட்ட ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் பற்றிய விபரங்கள் படங்களுடன் பிரசுரமாகியிருந்தன...

எது உண்மை?...

மக்கள் கேட்கும் கேள்வியிது... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 20 எதிர்பார்ப்பு

எனது பெயர் சுலெக்ஷனா... கொழும்பு வருவதில் பல கட்டுப்பாடுகள் இருந்ததால் நானும் அம்மாவும், ஏஜன்சியின் அழைப்பையேற்று கொழும்பு வந்தோம். எனக்கு சுவிஸில் திருமணம் பேசப்பட்டது முதல் முயற்சியெடுத்து ஆறு மாதங்களின் பின்னர்தான் கொழும்பு வரமுடிந்தது. நானும் சாந்தனும் நீண்டநாள் காதலர்கள். சாந்தன் வீட்டாரின் சம்மதத்திற்காகக் காத்திருந்து அவர்களின் விருப்பத்துடனேயே நான் சுவிஸிற்குச் செல்கிறேன். அதற்குரிய ஏற்பாடுகளனைத்தையும் அவரே மேற்கொண்டிருந்ததால் எமக்கு ஏதும் சிரமமிருக்கவில்லை.

ஏஜன்சி நாங்கள் தங்கியிருந்த லொட்ஜில் வந்து சந்தித்தார். தனது பெயர் 'இரகுநாதன்' என்றும் 'ரகு' என அழைக்கப்படுவதாகவும் தன்னை அறிமுகம் செய்தார். பாஸ்போட் செய்வதற்காக எனது படத்தை மட்டுமே பெற்றுச்சென்ற அவர் இரண்டாம் நாள் 'திருமதி றஞ்சிதம் இரகுநாதன்' என்ற பெயரில் எனது படத்துடன் கூடிய பாஸ்போட் ஒன்றைத் தந்தார். பிறந்த திகதியும் வேறாக இருந்தது. நாங்கள் புரியாமல் விழித்தோம்.

"நீங்க ஒண்டுக்கும் யோசிக்கத் தேவையில்ல...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்படித்தான் நாங்க செய்கிறனாங்க... உங்கள தனியே அனுப்பாமல் நான் உங்களுடன் கூடவே வருவதற்காகத்தான் எனது மனைவியின் பெயரில் உங்களுக்குப் பாஸ்போட் எடுத்தனான். இதுதான் இப்போதைக்கு பிரச்சினையில்லாதது. உங்களுக்கு நம்பிக்கையில்லையெண்டா சாந்தனிடம் கேட்டுப் பாருங்க... கேட்ட பிறகு நீங்க இந்தப் பேரையும் பிறந்த திகதியையும் நன்றாக மனப்பாடம் செய்யுங்க... இதேமாதிரி கையெழுத்தும் போடப் பழகிக்கொள்ளுங்க. அதுக்காகத்தான் இப்ப உங்கட்ட தந்தனான்."

உபதேசம் செய்வதைப்போல ஏஜன்சி சொல்லி முடித்தார்... நாங்கள் அமைதியாக கேட்டுக்கொண்டிருந்தோம்... புன்னகையுடன் விடைபெற்றார்...

நான்காம் நாள் காலையில் மீண்டும் ஏஜன்சி வந்தார்...

"என்ன விசாரிச்சீங்களா?"

"ஓமுங்க அவரும் அப்படித்தான் சொல்லுறார்."

"இப்ப சந்தேகம் தீர்ந்திட்டுத்தானே! இண்டைக்கு இரவு உங்களுக்கு பிளைற். இரவு பதினொரு மணிக்கு வருவேன் வெளிக்கிட்டு நில்லுங்க. அம்மா நீங்களும் ஏயாப்போட்டுக்கு வாறீங்கள்தானே?"

"நானும் வரத்தானே வேணும்."

"நாங்க போற வானிலேயே திரும்பி வரலாம். அப்ப வெளிக்கிட்டு நில்லுங்க என்ன."

ஏஜன்சி விடைபெற்று சென்று நீண்ட நேரமாகியும் எங்களின் பதட்டம் நீங்கவில்லை. பயணத்தை நினைத்தால் பயமாக இருந்தது. சிலவேளை பிடிபட்டிற்றா? என்று நினைத்தபோது இதயம் படபடத்தது.

வழமையில் நிறையவே கதைக்கும் அம்மா இன்று எதுவுமே பேசாமல் இருந்தாள். ஏதேனும் சொல்லி என்னைக் குழப்பக்கூடாதென முடிவெடுத்திருக்கவேணும்.

* * *

எனது உடுப்புகள் மற்றும், சாந்தனுக்கென வாங்கிய பொருட்கள் அடங்கிய சிறிய 'பாக்' உடன் ஏயாப்போட்டிற்கு வந்தேன். அங்கே பல புத்திமதிகளைச் சொல்லி அனுப்பிவைத்தார் அம்மா.

எந்தவொரு இடையூறுமின்றி விமானத்தில் ஏறிவிட்டோம். விமானம் புறப்பட்ட பின்னர்தான் எனக்கு உயிர் மீண்டமாதிரி இருந்தது.

விமானப் பயணத்தில் முன் அனுபவம் எதுவும் இல்லாத எனக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரகு அருகிலிருந்து தகவல்களைச் சொல்லிக்கொண்டிருந்ததால் எந்த இடையூறும் இருக்கவில்லை. சொகுசான இருக்கை, விமானத்தில் கிடைத்த நிறைவான உணவு, நேரம் இரவு இரண்டு மணி... அயர்ந்து தூங்கிவிட்டேன்.

விமானத்தில் மின்னொளி ஏற்றப்பட்டு ஒலிபெருக்கி அறிவித்தல் விடப்பட்டபோது விழித்துக்கொண்டேன்... இன்னமும் ஒரு மணித்தியாலத்தில் விமானம் தரையிறங்கிவிடும் என்று ரகு சொன்னார். விமானத்தில் சிற்றுண்டி, கோப்பி பரிமாறப்பட்டது.

ரகு சொன்னதைப்போல விமானம் இறங்குவதற்கான முன்னறிவிப்புடன் இடுப்புப் பட்டியை அணியும்படி அறிவிப்பு விடப்பட்டது. எல்லோரும் இடுப்புப்பட்டி அணிந்துகொண்டார்கள். விமானத்தின் வேகம் குறைந்து பதிவதைப்போன்ற உணர்வு தென்பட்டது.

சில நிமிடங்களில் விமானநிலைய இறங்குபாதையில் வேகமாக ஓடி விமானம், பின்னர் மெதுவாக ஊர்ந்துசென்று தரித்து நின்றது.

பயணிகள் இறங்க ஆயத்தமானார்கள். எனக்கு உள்ளூர ஆனந்தம். ஐந்து வருடங்களின் பின்னர் சாந்தனைப் பார்க்கப்போகின்றோமேயென்ற சந்தோஷம்...

அவர் ஏயாப்போட்டிற்கு வந்திருப்பார் என்னைக் கண்டதும்... எனக்குள்ளே சிரித்தக் கொண்டேன்.

ரகுவைப் பின்தொடர்ந்து நானும் வெளியேறினேன்... சாந்தன் லக்கேஜில் போட்ட பெரிய 'பாக்' வரும்வரை காத்திருக்கவேண்டியிருந்தது. நான் பொறுமையிழந்தவளாகத் தவித்தேன். சீக்கிரம் பாக் வந்தால் சாந்தனைச் சீக்கிரமே சந்திக்கலாமென்ற அவா... என்வேகம் லக்கேஜிற்குத் தெரியவில்லை...

இமிக்கிறேஷன், கஸ்ரமிஸ் எல்லாம் முடிந்து வெளியே வந்தோம். நான் எதிர்பார்த்திருந்த சாந்தனைக் காணவில்லை... சாந்தன் வராமை பற்றி ரகுவிடம் கேட்டபோதுதான் நாங்கள் இறங்கிய இடம் சுவிஸ் இல்லை என்று தெரியவந்தது.

"சுவிஸில் நேரடியாக இறங்க ஏலாது. இது சுவிசுக்கு கிட்ட இருக்கிற நாடுதான். இங்க இருந்து காரில் போடர் கடந்து போகவேணும். போடர் சிற்றுவேஷனைப் பார்த்து அங்கிருந்து கார் வரும். அதிலதான் போகவேணும். நீங்க வாங்க..."

என் சந்தோஷமெல்லாம் காற்றுப்போன பலூன் போலாகியது... சிதறிய கற்பனைகளுடன் ரகுவைப் பின்தொடர்ந்தேன்... வாடகைக் காரில் ஓர் ஆடம்பரக் ஹொட்டலுக்குச் சென்று இரண்டு தனித்தனி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறைகளில் தங்கினோம். அறையிலிருந்த மணிக்கூடு மதியம் 1 மணியைக் காண்பித்தது. எனது மணிக்கூட்டில் பி.ப. 5 மணியாக இருந்தது.

ரகுவின் வேண்டுகோளின்படி ஹொட்டலுக்கு வெளியே சாப்பிடப் புறப்பட்டோம். வெளியே கடுங் குளிராக இருக்குமென்பதால் ரகு எனக்கு ஒரு ஜக்கெற்றைத் தந்து போட்டுவரும்படி கூறினார். ரகுவின் உபசரிப்பும் பண்பான பழக்கமும் என்னை மெய்மறக்கச் செய்தது.

றெஸ்ரோறன்ரில் முன்னரெப்போதும் நான் சாப்பிட்டிராத உணவு வகைகளாகவே காணப்பட்டன. அதனால் எதையும் தீர்மானிக்க முடியவில்லை. ரகுவின் தீர்மானத்திற்கே விட்டுவிட்டேன். அவர் சர்வரிடம் ஏதேதோவெல்லாம் சொன்னார். சற்றுநேரத்தால் எனக்கு கொக்காகோலா கொண்டுவரப்பட்டது. ரகுவுக்கு வேறு பானம் வைக்கப்பட்டது. அது மதுவாக இருக்கவேணும்.

ரகு எனக்கு முன்னாலிருந்து மது அருந்துவது எனக்கு சங்கடமாக இருந்தது. என்னால் எதுவும் சொல்ல முடியவில்லை... அங்கிருந்த எல்லா மேசைகளிலுமே இவ்வாறான காட்சிகளே காணப்பட்டன.

பொரித்த கோழியும், உருளைக்கிழங்குச் சீவல் பொரியலும் கொண்டுவரப்பட்டது. முதற்தடவை சாப்பிடுவதென்றாலும் தக்காளிப்பழ சோஸுடன் சாப்பிடும்போது நல்லாகத்தான் இருந்தது. கோழிப் பொரியல் பல தடவைகள் யாழ்ப்பாணத்தில் சாப்பிட்டிருந்தும் இத்தனை சுவையாக அது இருக்கவில்லை. முழுவதையுமே சாப்பிட்டு முடித்துவிட்டேன்...

ரகு மதுவருந்தி சாப்பிட்டு முடிய அரைமணித்தியாலத்திற்கு மேலாகிவிட்டது. தாமதத்திற்குப் பெருந்தன்மையோடு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். மீண்டும் ஹொட்டலுக்குச் சென்றோம். ரகு தனது அறைக்குச் செல்ல நான் எனது அறைக்குச் சென்றுவிட்டேன்...

அறைக்குள் கீற்றர் வேலை செய்ததால் சூடாக இருந்தது... வெளியே இருந்த குளிருக்கு அது இதமாகவும் இருந்தது... சொகுசான மெத்தை. படுத்தவுடன் தூங்கிவிட்டேன்.

"ட்றிங்... ட்றிங்..."

அழைப்பு மணி அடித்தபோதுதான் கண்விழித்தேன்... கதவைத் திறந்தேன். ரகு நின்றார்.

"ஐந்து மணி ஆயிற்று, இன்னும் தூக்கமா?"

ரகு முன் நாணிக் குறுகி நின்றேன்.

"அலுப்பாயிருந்தா படுத்துக்கொள்ளுங்க... இதில பிஸ்கட்டும் கொக்காகோலாவும் இருக்கு சாப்பிடுங்க... குளிரா இருக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரவுச் சாப்பாட்டை நான் எடுத்துவாறன்.”

பிளாஸ்ரிக் பாக்கை தந்துவிட்டு ரகு சென்றுவிட்டார். நித்திரை மயக்கம் தீர்ந்தபாடாய் இல்லை. திரும்பவும் படுத்து ஒரு குட்டித் தூக்கம் அடித்த பின்னர்தான் நன்றாக இருந்தது.

நேரம் ஏழு மணியைக் காண்பித்தது. வெளியே முற்றிலும் இருளாக இருந்தது.

எழுந்து குளித்துவிட்டு பிஸ்கட்டைச் சாப்பிட்டு கொக்கா கோலாவைக் குடித்தேன்... சுடுநீர்க் குளிப்பு உடம்புக்கு இதமாக இருந்தது...

சாந்தனின் சிந்தனையாகவே இருந்ததால் அவனுடன் கதைக்க வேண்டும்போல இருந்தது... வழிதான் தெரியவில்லை. ரகுவிடம் கேட்கவும் கூச்சமாக இருந்தது... வேறு வழியின்றி என் ஆவலை அடக்கிக்கொண்டேன்...

இரவு 8.30 மணி...

“ட்றிங்... ட்றிங்...”

கதவைத் திறந்தேன்... ரகு சாப்பாட்டுடன் உள் நுழைந்தார்... அவரிடமிருந்து மதுவின் வாடை வீசியது... விலகி நின்றேன்...

நுழைந்தவர் மேசையில் சாப்பாட்டுப் பார்சலை எடுத்து வைத்தார். கூடவே கோலா மற்றும் மதுப் போத்தலையும் எடுத்து வைத்தார்... எனக்குப் பிடிக்கவில்லையென அவர் ஊகித்திருக்கவேணும்.

“வெளியால பொலிஸ் கெடுபிடியாக இருந்தது அதுதான் நான் இஞ்ச வந்திட்டன்... அவங்களுக்குச் சந்தேகம் வரும்படி நடக்கக்கூடாது. எங்கட நிறம் அவங்களுக்குக் காட்டிக் கொடுத்திடும். நீங்க, ஆரும் கதவத் தட்டினா திறக்கக்கூடாது... என்ன?”

எனக்கு உள்ளூரப் பயம் தோன்றியது. ரகு எழுந்துசென்று கதவை பூட்டிவிட்டு வந்தார்.

“நீங்க வந்து சாப்பிடுங்க...”

எனக்குப் பசிக்கயில்ல... கொஞ்சம் பிந்திச் சாப்பிடுறன்.

“அப்ப இதில கொஞ்சம் குடியுங்க... செமிச்சிடும்..”

சட்டெனக் கேட்டுவிட்டு மதுப்போத்தலை உயர்த்திக் காட்டினார். எனக்குத் திக் என்றது...

“எனக்குப் பழக்கமில்ல...”

“பழக்கமில்லாட்டி என்ன பழகவேண்டியதுதானே!”

ரகுவுடைய கதை வழமைக்கு மாறாகக் காணப்பட்டது. அவர்மீது வைத்திருந்த நம்பிக்கை சிதறிய கண்ணாடியாகியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"நீங்க என்ன இப்படிப் பேசுறீங்க..."

"ஏன் தப்பா பேசீட்டனா?... ஏன் குடிச்சா என்ன?... இது ஒண்டும் புதுமையில்லையே!..."

பேச்சில் அதிகாரம் இருந்ததால் எனக்குப் பயம் வந்தது...

மதுவை ஒரு கிளாசில் ஊற்றி அதனை எடுத்து வந்தான்...

"இந்தா குடி..."

நான் எதிர்பார்க்காத அதிர்ச்சி... விலகிச் சென்றேன்... என் கையைப்பிடிச்சு இழுத்தான்.

"விடுங்க ... இல்லாட்டி கத்துவேன்..."

"கத்தி என்ன செய்யப்போறா... இங்க யாரும் வரமாட்டாங்க... வந்தாலும் பாஸ்போட்டில நீ என்ர மனைவிதானே!... பொலிசுட்டப் போகப்போறியா...? போ... போனா நீதான் உள்ள இருப்பாய்..."

எனக்குத் தூக்கிவாரிப்போட்டது...

பிடித்த கையை விடாமல் அதே கையால் எனது கழுத்தைச் சுற்றிப்பிடித்தான். நான் விடுபட்டுச் செல்ல முனைந்தேன். அதனால் இழுபட்டு சுவரோரம் சென்றுவிட்டோம். இப்போது மீள முடியாமல் சிக்குண்டுவிட்டேன். சுவரோடு சேர்த்து என்னை அழுத்தி, தலையை நிமிர்த்தி மறுகையில் இருந்த மதுக் கிளாசை என் வாயில் திணித்தான்... நான் திமிறினேன். அவனது கை இரும்புக்கரமாக இருந்தது... அசைக்கமுடியாத நிலையில் மதுவை வாயிற்குள் ஊற்றி விட்டான்... அதை விழுங்குவதைத் தவிர வேறு எந்த வழியும் இல்லை. இருமல் வந்தது. அவன் விடவில்லை... கிளாசில் இருந்த மது அனைத்தையும் பருக்கிய பின்னரே கையை விட்டான்... நான் ஓடிச்சென்று பேசனில் ஓங்காளித்தேன்... உள்ளே சென்ற மது வரவில்லை... வெறுப்புடன் திரும்பினேன். தொண்டை, வயிறு எரிந்தது... சற்றுநேரத்தால் தலைக்குள் ஏதோ செய்வதுபோல இருந்தது... அறையின் மூலையில் சென்று சாய்ந்து நின்றுகொண்டேன்.

ரகு சிரித்தவாறு மீண்டுமொரு மதுக் கிளாசுடன் என்னைத் தேடி வந்தான்... அவன் வருவது இரண்டு மூன்று பேர்களாகத் தெரிந்தது...

'வரவேண்டாம்' எனக் கையை அசைத்தேன்... நா தடுமாறியது... அந்த இடத்தைவிட்டு நகர முடியவில்லை...

என்னை நெருங்கிய அவன் முன்னரைப்போலவே கையைப் பிடித்து மடக்கி கழுத்தைச் சுற்றிப்பிடித்து வாயில் பருக்கினான். இப்போது நான் எதிர்க்கும் சக்தியை இழந்தவளாக இருந்தேன்... தலை சுற்றியது... தடுமாறினேன். அவன் என்னைத் தாங்கிப் பிடித்து கட்டிலில் கிடத்தினான்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வேணாம்... வேணாம்... என்னை ஒண்டும் செய்யாதே..."

மயங்கிச்செல்லும் நேரமும் என் வாயின் முணுமுணுப்பு எனக்கு கேட்டுக்கொண்டேயிருந்தது...

* * *

மண்டை வலியெடுத்தது... கண்விழித்துப் பார்த்தேன்... ரகுவின் கரங்களிற்குள் சிக்குண்டு நான் கிடந்தேன்... உடை அலங்கோலமாகக் கிடந்தது... ரகுவால் மடக்கிப்பிடிக்கப்பட்ட கை மிகவும் வலியைக் கொடுத்தது... உடலுறுப்புகளில் வலி இருந்தது... நான் கெடுக்கப்பட்டதை உணர அதிகநேரம் எடுக்கவில்லை... கனவில் நடந்தவைபோல சில நிகழ்வுகள் துளிர்விட்டெழுந்தன...

அவன் கைகளிலிருந்து விடுபட்டு உடையைச் சீர்செய்துவிட்டு கிடந்த நிலையிலேயே விம்மி விம்மி அழுதேன்... என் கடந்தகாலம் எதிர்காலம் எல்லாம் திரைப்படம்போல் மனத்திரையில் ஓடின... மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் தத்தளித்தேன்...

உடல் வலி... மது கொடுத்த மயக்கம் இவற்றால் கண் விழித்திருக்க முடியவில்லை... நித்திரை என்னை வலிந்து இழுத்தது.

* * *

மறுநாள் காலை, எழுந்ததுமுதல் நான் அழுதுகொண்டே இருந்தேன். ரகு எப்போது போனான் என்பது எனக்குத் தெரியாது. தலையிடி கடுமையாக இருந்ததால் நான் கொண்டுவந்த பனடோலில் இரண்டை எடுத்து போட்டுக்கொண்டேன்...

ரகு வந்தான் அவன் முகத்தை நான் பார்க்கவேயில்லை...

"பின்னேரம் கார் வரும் வெளிக்கிடவேணும்."

கூறிவிட்டுச் சென்றுவிட்டான்... 'ஏன் அங்கு போகவேணும்' என்ற எண்ணம் உள்ளத்தில் எழுந்து முடிவிற்காய் காத்திருந்தது... முடிந்தவரை என் எதிர்காலத்தைப்பற்றிச் சிந்தித்தேன்... கட்டிவைத்த கற்பனைக் கோட்டை பஞ்சாய்ப் பறந்துவிட்டது... அதிஉச்ச சீதனமாய் பெண்களால் கொடுக்கப்படும் கற்பு கறைபடிந்துவிட்டது...

இனிமேல்... இனிமேல்...

விம்மல்... கண்ணீர்... கலந்து வெளிவந்தன...

இடைவழியில் நின்றுகொண்டு எதையும் முடிவெடுக்க முடியாத நிலையில் இருந்தேன்... திரும்பிச் செல்வதா?... சாந்தனிடம் செல்வதா?... பதில் நீண்டுகொண்டே சென்றது....

நேரம் 12 மணி. காலை உணவு உண்ணவில்லை. இரவு கொண்டுவந்த உணவுப்பார்சல் அப்படியே கிடந்தது. இரண்டு பிஸ்கட்டைச் சாப்பிட்டுவிட்டு உடல் உபாதையைப் போக்க சுடுநீரில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குளித்துவிட்டு வந்தேன்...

ரகு உள் நுழைந்தான் அப்போதுதான் கதவு பூட்டப்படாமல் இருப்பதை உணர்ந்தேன்.

இரவு உணவு கொண்டுவரும்போது கொண்டுவந்த அனைத்துடனும் வந்தான்.

"என்னோட கோபமா?"

"..........."

மேற்கொண்டு எதையும் கேட்காமல் மதுப் போத்தலை திறந்து கிளாசில் உற்றி நீட்டினான் நான் தட்டிவிட்டேன். அது தரையில் விழுந்து சிதறியது... என்னைக் கோபமாகப் பார்த்துவிட்டு அதனை துப்பரவு செய்தான். எனக்கு உள்ளூர பயம் எழுந்தது. தன்னந்தனியாக அன்னிய நாட்டில் சிக்குண்டிருக்கும் என்னை அவன் என்னவேண்டுமானாலும் செய்யலாம்...

உடல் நடுங்கியது... கட்டிலின் மறுபக்கம் சென்று அமர்ந்து கண்களை மூடியவாறு என் நிலையை எண்ணிப்பார்த்தேன்...

ஆளரவம் கேட்டுக் கண்ணைத் திறந்தபோது மதுக் கிளாசுடன் ரகு நின்றான். சட்டெனை எழுந்தேன். அதற்குள் அவன் முந்திக் கொண்டான்.

இரவு செய்தவைபோலவே கையைப் பிடித்து சுழற்றி, கழுத்தைப் பிடித்து நிமிர்த்தி, என் வாயில் பருக்கினான். இரவு கையில் ஏற்பட்ட வலி இப்போது கடுமையாக இருந்தது... புண்ணாகிச் சோர்ந்த உடலால் எந்த எதிர்ப்பையும் காட்டமுடியலில்லை.

உடலின் மிகுதியான வேதனை... வெறும் வயிறு... அவன் பருக்கிய கிளாஸ் நிரம்பிய மது... என் உடலை தளர்வடையச் செய்ததுடன் மயக்கத்தையும் கொடுத்தது... சரிந்து படுத்துவிட்டேன்.

பிணம்போலாகிவிட்ட எனது எதிர்ப்பில்லாமலே அவன் நினைத்த காரியத்தை நிறைவேற்றி முடித்தான்...

சே! கேடுகெட்ட மனிசன்...

* * *

இருள் மூடியிருந்தது. ஹொட்டல் அறைத் திறப்புக்களைக் கொடுத்துவிட்டு வெளியே வந்தோம். கார் ஒன்று எம் வரவிற்காய் காத்து நின்றது. அதில் ஏறிக்கொண்டோம். சாரதியிடம் செல்போனை வாங்கி ஏதோ நம்பருக்கு டயல் செய்தான் ரகு...

மறு புறத்தில் தொடர்பு கிடைத்திருக்கவேண்டும்.

"ஆரு சாந்தனா பேசுறீங்க... நான் சொன்ன இடத்தில காசு குடுத்திற்றீங்களா... அப்பிடி ஒண்டுமில்ல. அவர் கிடைச்சதுபற்றிச் சொல்லயில்ல... நான் எடுத்துப் பாக்கிறன்... நாளைக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மத்தியானத்துக்கு முதல் 'சூறிச்' இற்குத்தான் வருவோம். நீங்க ஒண்டு செய்யுங்க 10 மணிபோல சூறிச் ஸ்ரேசனில வந்து நில்லுங்க அங்க வந்தவுடன உங்களோடு தொடர்பு கொள்ளுறன்."

கார் புறப்பட்டு வேகமாகச் சென்றது.

இரவு பூராவும் கார் பிரயாணம். எவருடனும் கதைக்க விருப்பமில்லை... நான் நித்திரையாகிவிட்டேன்.

விடிந்ததும் நீண்ட நேரப் பிரயாணத்தின் பின்னர் கார் ஒரு மாடி வீட்டின் முன் நின்றது... என்னை அந்த வீட்டிற்கு அழைத்துச் சென்றான் ரகு...

"ரோகினி! இவ இங்க இருக்கட்டும் என்னும் ஒரு மணித்தியாலத்தால இவயட புருசன் வந்து கூட்டிப்போவார்... அவங்களுக்கு எனித்தான் சொல்லவேணும் நான் போயிற்று வரட்டா?".

ரகு புறப்பட ஆயத்தமானான்.

"உனக்கு எப்ப வந்தாலும் அவசரம்தான்..."

உரிமையோடு கேட்ட ரோகினிக்கு பதிலெதுவும் சொல்லாமல் சிரித்தபடியே வெளியேறினான் ரகு. அவன் போவதையே கண்வெட்டாமல் பார்த்துக்கொண்டிருந்தேன்... எனது உள்ளத்தின் போராட்டம் வெளியே தெரிய நியாயமில்லை...

"என்ன தங்கச்சி யோசிக்கிறீங்க... புதுசா இங்க வாற எல்லாரும் இப்பிடித்தான் யோசிப்பாங்க... குடும்ப உறவுகளை விட்டு பிரிஞ்சுவந்தா ஆரம்பத்தில இப்படித்தான். எல்லாம் போகப்போகச் சரியாகிடும்... யோசினையை விட்டு கோப்பியக் குடியுங்க... குளிருக்கு நல்லாயிருக்கும்..."

ரோகினி நீட்டிய கோப்பியைப் பெற்றுக்கொண்டேன். என் மனம் யுத்தகளமாகவே இருந்தது... முடிவெடுக்க முடியாமல் தவித்தேன்...

நன்றாக யோசித்து ஒரு முடிவுக்கு வந்தேன்... கை லேஞ்சியால் முகத்தைத் துடைத்து தென்பை வரவழைத்துக்கொண்டு கோப்பியைக் குடித்து முடித்தேன்...

"அக்கா உங்கள ஆரெண்டு எனக்குத் தெரியாது. ஆனால் கூடப்பிறந்த அக்காவா நினைத்துக் கேக்கிறன் எனக்கொரு உதவி செய்வீங்களா?..."

தேகம் புல்லரிக்க கிட்டே வந்தாள் ரோகினி.

"என்னம்மா வேணும் சொல்லுங்க... என்ன உதவியெண்டாலுந் தயங்காம கேளுங்கம்மா..."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த ஆறுதல் வார்த்தையே எனக்கு உயிர் கொடுத்த மாதிரியிருக்குதுங்க... அக்கா ஒரு ரெலிபோன் எடுக்கட்டா?"

"இதுக்குத்தான இத்தனை பீடிகை?"

"இல்லையக்கா முதலில ரெலிபோன் கதைச்சுப்போட்டு பிறகு உங்கட்ட கேக்கிறன்."

"அந்தா ரெலிபோன் இருக்கம்மா எடுங்க..."

கைப்பையிலிருந்த சாந்தனின் தொலைபேசி இலக்கத்தைப் பார்த்து அதனைத் தொலைபேசியில் அழுத்தினேன்... புரியாத மொழியில் ஏதோ தகவலைச் சொல்லியது தொலைபேசி...

"அக்கா இந்த நம்பருக்கு ஒருக்கா எடுத்துத்தாறீங்களா?"

தொலைபேசி இலக்கத்தை வாங்கிப்பார்த்துவிட்டு;

"இந்த முன் நம்பர்கள விட்டுப்போட்டு அடியம்மா..."

நானும் அவ்வாறே செய்தேன். ரோகினி பக்கத்தில் பரிவோடு பார்த்துக்கொண்டு நின்றாள்...

"ஹலோ... சாந்தனா கதைக்கிறது... நான் சுலெக்ஷனா பேசிறன்..."

"நான் இந்தா வந்துகொண்டிருக்கிறன்..."

"அதுக்குத்தான் எடுத்தனான்... நீங்க இங்க வரவேணாம்... எனக்கு கலியாணம் செய்ய விருப்பமில்ல... மீறி வற்புறுத்தினா என்ன உயிரோட பாக்கமாட்டீங்க... காரணம் கேக்க வேணாம். உங்களுக்கு ஏற்பட்ட செலவை நான் எப்பிடியும் தந்து முடிப்பன்... என்னை மன்னித்துக்கொள்ளுங்க... பிளீஸ்..."

தொலைபேசியின் தொடர்பை துண்டித்துவிட்டு விம்மி விம்மி அழுதேன்... இதயத்தின் பாதி வெட்டப்பட்ட வேதனை... தாங்கிக் கொள்ள முடியவில்லை...

"இவ்வளவு தூரம் வந்துவிட்டு ஏனம்மா இந்த திடீர் முடிவு..."

என் கண்ணீரைத் துடைத்துவிட்டு பரிவுடன் அணைத்தவாறு இருக்கையில் அமர்ந்தாள் ரோகினி...

"அக்கா!... எங்கட தமிழ்ப் பண்பாடு தடுக்குதக்கா..."

ரோகினியின் மடியில் முகத்தைப் புதைத்தவாறு அழுவதைத் தவிர வேறு மார்க்கம் இப்போதைக்கு இல்லை... ■

*1990 களில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 21 இணைப்பு

புனித செபமாலை மாதா ஆலய வளவில் கண்ணைப் பறிக்கும் சரிகைகளுடன் கூடிய விதம் விதமான உடைகளில், பெண்கள் திரளாகக் காணப்பட்டனர். தம்மிடமுள்ள பலவகை வடிவங் களைக்கொண்ட நகைகளைக் காட்சிப்படுத்துபவர்களா கவும் காணப்பட்டனர்.

ஆண்களில் பெரும்பாலோர் நீண்ட காற்சட்டையுடன் பொருத்தமான சேட் அணிந்து உடைப்போட்டியில் பெண்களுக்குச் சளைத்தவர் களல்ல என்று கூறுவதைப்போலக் காணப்பட்டனர்.

அலங்கரிக்கப்பட்ட காரில் தோழியருடன் மணமகன் வந்திறங்க, அவனுடன் சேர்ந்து ஒரு கூட்டம் ஆலயத்திற்குள் சென்றது.

அரைமணி நேர இடைவெளியில் அதே காரில் மணமகளும் தோழியரும் வந்திறங்கினர் எஞ்சி நின்றவர் களும் மணமகளுடன் ஆலயத்திற்குள் நுழைந்தார்கள்.

குருவானவர் ஆலயத்தின் வாசல்வரை வந்து, மணமக்களுக்கு ஆசீர் நீர் தெளித்து, பீடத்தை நோக்கி அழைத்துச் சென்றார்.

அலங்கரிக்கப்பட்ட இருக்கையில் மணமக்கள் அமர்ந்திருக்க, தோழியர்கள் இரு பக்கங்களில் நிரையாக

இருந்தனர். மணமக்களின் பெற்றோரும் மிக நெருங்கிய உறவினரும் மணமக்களை அண்மித்த பகுதியில் இருக்க, ஏனையவர்கள் ஆலயத்தின் மத்திய பகுதியில் அமர்ந்திருந்தனர்.

இசைக்கருவிகள் இசை வழங்க, பாடகர் குழாமின் பாடலுடன் திருமணத் திருப்பலி ஆரம்பமானது. போட்டோ பிடிப்புகளின் ஒளி இடைக்கிடையே மின்னி மின்னிக்கொண்டிருக்க, வீடியோ படப்பிடிப் பாளரின் ஒளி பீடப்பகுதியை முற்றாக ஆக்கிரமித்திருந்தது.

திருப்பலியின் இடையில் திருமணத்தை நிறைவேற்றி வைக்கும் நேரம் மணமக்களின் முன்னால் வந்த குருவானவர், ஒவ்வொருவரிடமும் தனித்தனியே சம்மதத்தைக் கேட்டார். பின்னர் இருவரது வலது கரங்களையும் இணைத்துக்கொள்ளப் பணித்தார்.

தொடர்ந்து குருவானவர்;

"திருச்சபையின் முன்னிலையில் நீங்கள் தெரிவித்த இந்த சம்மதத்தை ஆண்டவர் கனிவுடன் உறுதிப்படுத்தி, தம் ஆசியை உங்கள்மீது நிறைவாய்ப் பொழிந்தருள்வாராக; இறைவன் இணைத்ததை மனிதன் பிரிக்காதிருக்கட்டும்."

இணைந்த கைகளின் மேல் குருவானவர் ஆசீர் நீர் தெளித்து, மாங்கல்யத்தையும் ஆசீர்வதித்து மணமகனிடம் கொடுத்தார். மணமகன் அதனை மணமகளின் கழுத்தில் அணிவித்தார். ஆலயத்தின் மணி தொடராக ஒலிக்க, மணமகனின் சகோதரி மாங்கல்யத்தின் பின் இணைப்பை தவறிடாமல் பொருந்தினார்.

குருவானவரின் முன்னிலையில் மணமக்கள் மாலையை மாற்றிக் கொண்டனர். திருப்பலி தொடர்ந்தது...

திருப்பலியின் நிறைவில், திருமணம் செய்துகொண்டதற்கு அடையாளமாக குருவானவர் முன்னிலையில் மணமக்கள் ஒப்பமிட்டுக் கொண்டனர்.

திருமணம் நிறைவேறியதற்குச் சாட்சிகளாக இரு பகுதியின ராலும் இருவர் ஒப்பமிட்டு உறுதிப்படுத்தினர்.

திருமணத்தை நிறைவேற்றி வைத்ததமையை உறுதிப்படுத்தி குருவானவர் ஒப்பமிட்டதுடன் நிகழ்வு முடிவுற்றது. மணமக்கள் குருவானவருடன் இணைந்து போட்டோ, வீடியோ எடுத்துக்கொண்டு ஆசிபெற்று வெளியேறினர்.

* * *

ஆலயத்திற்கு அருகாமையிலேயே மண்டபம் ஏற்பாடு செய்யப் பட்டிருந்தமையால் திருமணத்திற்கு வருகைதந்தோர் மண்டபத்திற்குச் சென்றுவிட, மணமக்கள் ஸ்ரூடியோவில் திருமண நினைவுப் படம் எடுப்பதற்காக அலங்கரிக்கப்பட்ட தமது காரில் ஏறிப் புறப்பட்டனர்...

தோழியர்களையும், உதவியாளர்களையும் ஏற்றிய 'வான்' சற்றுத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாமதித்துப் புறப்பட்டது.

இராணுவக் காவலரண் அண்மையிலிருப்பதனால், வாகனங்கள் மெதுவாகச் செல்வதற்காக வீதிக்குக் குறுக்கே போடப்பட்டிருந்த மண் அணையைக் கண்டதும் வேகமாக வந்துகொண்டிருந்த காரின் வேகத்தை சாரதி குறைக்க அது மெதுவாக மண் அணையின் மேலாக ஏறி இறங்கியது.

காவலரணில் சில இராணுவத்தினர் நிற்பதையும், மோட்டார் சைக்கிளொன்று வேகமாக வருவதையும் கண்ட சாரதி காரை வீதியின் ஓரமாகத் திருப்பி மிக மெதுவாகச் செலுத்தினான்...

"டும்... ..."

காவலரணில் திடீரெனக் கேட்ட கைக்குண்டுச் சத்தத்தால் கார் ஒருதடவை அசைந்ததை உள்ளிருந்தவர்கள் உணர்ந்தனர்...

எதிரே வேகமாக வந்துகொண்டிருந்த மோட்டார் சைக்கில் காரைச் சந்தித்துக் கடக்கும் கணம்,

"டுடும்... டுடும்... டுடும்..."

காவலரணிலிருந்து துப்பாக்கி வேட்டுகள் தீர்க்கப்பட்டன... சத்தங்கள் கேட்டுக் காரை நிறுத்துவதற்குள் தொடராக வந்த சன்னங்கள் காரைச் சல்லடைபோட்டன.

காரின் இயக்கம் நின்றது...

சுற்றாடலில் நின்ற மக்கள் சிதறி ஓடினர்.

படையினரின் கைகளில் சிக்குப்பட்டவர்கள் கடுமையாகத் தாக்கப்பட்டனர்.

சற்று நேரத்தின் பின்,

துப்பாக்கிச் சத்தங்கள் அடங்கிவிட்டன...

ஆட்கள் எவருமற்று வெறிச்சோடிக்கிடந்தது வீதி...

அலங்கரிக்கப்பட்ட கார் மட்டும் அநாதையாய் நின்றது...

அதற்குள் மூன்று உடல்கள் இரத்தம் தோய்ந்து கிடந்தன...

மணநாளே மரணநாளாகியது...

* * *

"காவலரணுக்கு கிரனெட் எறிந்துவிட்டு மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை நோக்கி இராணுவத்தினர் துப்பாக்கியால் சுட்டபோது மணமக்கள் பயணம்செய்த கார் சிக்கிக் கொண்டது..."

தகவல் பல திசைகளாலும் பறந்தது...

திருமண மண்டபத்திலிருந்தவர்களுக்கு எட்டியதும் அதிர்ந்து போனார்கள்.

சிலர் சுயநினைவிழந்து வீழ்ந்தனர்... ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 22 நகர்வு

குருநகர், குறிக்கப்பட்ட எல்லைகளுக்குள் பல்லாயிரக்கணக்கிலான மக்கள் நெருக்கமாக வாழும் ஊர்... கடற்றொழிலில் சிறப்புற்று இருந்ததுடன் கடலுணவு ஏற்றுமதியில் முதலாம் இடத்தையும் வகித்து வந்தது. இந்தச் சிறப்பை தொடர்ந்து நிலைநிறுத்திக் கொள்ள யுத்தம் அவர்களுக்குப் பெரும் தடையாக அமைந்தது.

யாழ்ப்பாணம் யுத்த பூமியாக மாறிய காலம்... அப்போது இடப்பெயர்வுகளும், உயிரிழப்புகளும் மக்களுக்குப் புதிதாகவும், வியப்பாகவுமே இருந்தது. தொடர்ந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட யுத்த முனைப்புகளால் அந்த நியதிக்குள் வாழ்ந்திடத் திணிக்கப்பட்டு விட்டார்கள்...

சில ஆண்டுகளாகச் சிறுகச் சிறுக ஆரம்பித்து சங்கிலித்தொடராக நீண்ட யுத்தமேகம் வடமராட்சியில் மழையாகக் கொட்டியபோது அதன் தூறல் குருநகரையும் அதிரவைத்தது...

கல்லெறி விழுந்ததும் பலதிசைகளாலும் கலைந்து செல்லும் பறவைக் கூட்டத்தைப்போல வடமராட்சியின் தூறல்களாய் விழுந்து வெடித்த எறிகணைகளால் குருநகரே சிதறியோடியது...

வடக்கிலுள்ள வடமராட்சியிலிருந்து மட்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மல்ல தெற்கிலுள்ள மண்டைதீவிலிருந்தும் எறிகணைகள் சீறிவந்தன... மேளத்தை ஒத்த நிலையாக குருநகர் அப்போதிருந்தது.

தொடரான எறிகணைத் தாக்குதல் புதிதாக இருந்ததால் சமைத்த உணவைக்கூட உண்டிடாமல் இலக்கின்றி ஓடிய மக்களில் சிலர், தாம் ஓடிய பாதையில் தென்பட்ட மாடி வீடுகளில் புகுந்துகொள்ள, ஏனையோர் ஆலயங்கள், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர்.

எறிகணைத் தாக்குதல்களின் இடைவெளிகளைப் பயன்படுத்தி வீட்டிலுள்ள உணவுப் பொருட்களை எடுத்துவந்து தங்கியிருந்த இடங்களில் தமது வாழ்வைத் தொடங்கினர்... தற்காலிக மறைவிடமாக மாடிவீடுகளில் புகுந்தவர்களும் அண்மையிலிருந்த ஆலயம், பாடசாலைகளில் தஞ்சம் புகுந்தனர்...

குருநகர் சென் ஜேம்ஸ் மகாவித்தியாலயம், குருநகர் மக்கள் தஞ்சம் புகுந்த கட்டடங்களில் ஒன்றாக இருந்தது... குடியிருப்புகளுக்கு மத்தியில் பாடசாலை அமைந்திருப்பதால் அங்கிருந்தவர்கள் சமயோசிதமாகத் தமது தேவைகளை நிறைவு செய்தவண்ணமிருந்தனர். சில நாட்கள் சிரமங்களின் மத்தியிலும் கிரமமாய் நகர்ந்தன...

குடும்பம் குடும்பமாக உணவு சமைத்தல், உணவு உண்டபின் பாடசாலை முன் மண்டபத்தில் குழுமங்களாக இணைந்து சல்லாபித்தல், பொழுதுபோக்கு விளையாட்டுகளில் ஈடுபடுதல் போன்றவற்றால் தமது துன்பத்தை மறந்திருந்தனர்...

வழமையான கலகலப்பு...
மாற்றமின்றிய நடைமுறை...

நேரம் இரண்டு மணி... உணவருந்தி முடித்து அனைவரும் ஒன்று கூடியிருந்த நேரம்...

மண்டைதீவிலிருந்து எறிகணைகள் பாய்ந்துகொண்டிருந்தன... இவற்றை எவரும் பொருட்படுத்தியதாக இல்லை... சில நாட்களில் வழமையாக மாறிவிட்ட எறிகணைச் சத்தங்கள், அவர்களது மனதில் ஆரம்பத்திலிருந்த பயத்தைத் துடைத்துவிட்டது...

பாடசாலையைக் கடந்து சீறிப் பறந்துகொண்டிருந்த பல எறிகணைகளின் மத்தியில் ஓர் எறிகணை தடம்புரண்டதை பாடசாலை முன் மண்டபத்தில் இருந்தவர்கள் அறியவில்லை...

தற்செயலாகத் தடம்புரண்ட எறிகணை சாதுரியமாக உள் நுழைந்து குழுமியிருந்தவர்களின் மத்தியில் வெடித்துச் சிதறியபோதுதான் விபரீதத்தை பலர் உணர்ந்தும், அறிந்தும் கொண்டனர்.

அந்தக் கண நேரத்திற்குள்,
நாலுபேர் துடிப்படங்கி உயிரிழந்து கிடந்தனர்...
பதினொரு பேர் படுகாயத்தால் துடித்துக்கொண்டு கிடந்தனர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருபது பேருக்கு மேல் சிறு காயங்களுடன் இரத்தம் பொசிய தவிப்புடன் நின்றனர்...

அவலக் குரல்கள்... அழுகுரல்கள்... கட்டுமீறி வானெங்கும் வியாபித்தது...

சிறிது இடைவெளியில் வைத்தியசாலை நோக்கி சில வாகனங்கள் விரைந்தன..

அதேநேரம் காயங்களின்றித் தப்பிய மக்கள் சுமைகளுடன், ஓட்டமும் நடையுமாய்ச் சென்றுகொண்டிருந்தனர்...

அவர்களின் நகர்வு புனித பத்திரிசியார் கல்லூரியை நோக்கியதாக இருந்தது... ■

*1990 களில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23 வழிமுறை

நாட்டிலேற்பட்ட சீரற்ற நிலைமையால் வேலை வாய்ப்புகளின்றி, போதிய பாதுகாப்பின்றி தவித்த இளைஞர்கள் புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்லும் நடைமுறை எண்பதுகளி லிருந்தே தொடர்கின்றது. காலப்போக்கில் இளைஞர் கள் மட்டுமல்ல போதிய வருவாயில்லாத, நிரந்தர வருமானமில்லாத பலரும் வயது வேறுபாடுகளின்றி ஐரோப்பிய நாடுகளுக்குப் படையெடுக்கத் தொடங் கினர் அகதி முத்திரையுடன்.

அவ்வாறு சென்றவர்களில் ஒருவன்தான் சந்திரன்... இரண்டு குழந்தைகளுக்குத் தந்தையான அவன், தனியார் நிறுவனமொன்றில் தான் செய்துவந்த காசாளர் வேலையில் நிறைவான வருவாயின்றி அல்லல்பட்டபோது சுவிஸில் வசிக்கும் நண்பன் பிரகாஷின் ஞாபகம் ஏற்பட்டது. அதுவும் மனைவி சாந்தமலரின் தொடரான அழுத்தமே காரணமாக அமைந்தது. பிரகாஷிற்கு தனது தற்போதைய நிலைமை யையும், தனது எண்ணத்தையும் விரிவாக எழுதினான்...

மூன்று வாரத்திற்குள் பிரகாஷிடமிருந்து கிடைத்த சாதகமான பதிலால் நெக்குருகிப்போனான்...

வீட்டில் சிரிப்புக்குப் பஞ்சமேயில்லை...

சாந்தமலரிடமிருந்த ஒரு சோடிக் காப்பையும்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சங்கிலியையும் விற்று வந்த பணத்தில் செலவுக்கு ஒருதொகையை மனைவியிடம் கொடுத்துவிட்டு மிகுதிப் பணத்துடன் கொழும்பு புறப்பட ஆயத்தமானான். பிரகாஷ், பணம் எதுவும் கொண்டுவர வேண்டாமென்று அன்புக் கட்டளையிட்டு கடிதத்தில் எழுதியிருந்தபோதும் வெறும் கையோடு செல்ல சந்திரனுக்கு விருப்பமில்லை...

* * *

விரைவாகவே சுவிஸ் சென்ற சந்திரன், பிரகாஷின் உதவியால் ஹொட்டலொன்றில் பாத்திரங்கள் கழுவும் வேலையில் சேர்ந்து கொண்டான். வேலைக்குச் சேர்ந்த புதிதில் அவன் பட்ட சிரமங்கள் பல... அடைந்த வேதனைகள் பல... புரியாத மொழி, பழக்கமில்லாததும் - கடினமானதுமானவேலை போன்றவற்றால் வேலையை விட்டுவிட வேண்டுமென எண்ணியதுமுண்டு. குடும்பத்தின் நலனைக் கருத்திற் கொண்டு மௌனமாய் அழுதவாறே வேலையைத் தொடர்ந்தான்...

புரியாத மொழியால் வேண்டிய ஏச்சுக்கள், பேச்சுக்களால் பிறந்த உத்வேகத்தால் காலப்போக்கில் புரியாத மொழி புரியும் மொழியாகியது... வேலைகளின் தரத்தை, சம்பள நிலையைப் பார்த்து பல வேலைகள் மாறிவிட வசதியாகியது. பல வசதிகளும், வாய்ப்புகளும் நிறைவாகக் கிடைத்தன.

* * *

இலங்கையில் மனைவி, பிள்ளைகள் சிறப்புடன் வாழ்வதை யெண்ணி தனக்குள்ளே மகிழ்வான். தான் இலங்கையில் இருந்தபோது கற்பனையில்கூட எண்ணியிராத உயர்வு இப்போது தனது குடும்பத்திற்குக் கிடைத்ததில் எல்லையில்லா சந்தோஷம் அவனுக்கு... வருவாயில் தனது குடும்பத்தினருக்கு மட்டுமல்ல தாய், சகோதரர்களுக்கும் பொசியச் செய்யச் செய்த ஏற்பாட்டினால் நிலவிய நல்லுறவால் தன்னையே மறந்திருந்தான்...

இந்த நினைவுகள் எப்போதும் அவன் மனத்திரையில் படமாக ஓடிக்கொண்டேயிருக்கும்... கிடைக்கக்கூடிய ஓய்வு நேரங்கள் வேலைக்குப் போகும் நேரங்களில் அவன் சிந்தனையில் மூழ்கிடத் தவறுவதில்லை.

தன்பாட்டில் சிரிப்பதைக் கண்டு பலர் கேலி செய்ததுமுண்டு..

அவன் வசிக்கும் வீட்டிற்கும் வேலைசெய்யும் இடத்திற்கும் ஐந்து நிமிட நடை தூரம்தான். இரண்டு சந்திகளிலுள்ள 'சிக்னல் விளக்கை' கடந்துவிட்டால் அவனது வேலை செய்யும் இடம் வந்துவிடும். அதனால் நடந்து செல்வதே அவனது வழமை. 'சிக்னல் விளக்கில்' பச்சை ஒளி வரும்வரை காத்திருக்கவேண்டியிருப்பதால் ஓரிரு நிமிடங்கள் முன்னராகவே புறப்படுவான்.

* * *

சாந்தமலரிடமிருந்து வந்த கடிதத்தை பாடம் படிப்பதைப்போல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பல தடவைகள் படித்துவிட்டு, கடிதத்தில் பிள்ளைகள் முத்தமிட்டு அடையாளப்படுத்திய இடத்தை கைகளால் தடவியபோது பாச உணர்வு அவனை முழுமையாக ஆட்கொண்டது. அவனையறியாமலே இரண்டு சொட்டு கண்ணீர் நிலத்தில் விழுந்தது.

இரவு நிறைவான உறக்கமில்லை.

கண் மூட, மூட கனவில் கடிதத்தின் வரிகள், பிள்ளைகளின் முகங்கள் வட்டமடித்தன... அதனால் நித்திரையின்றி புரண்டு புரண்டு கிடந்தான்.

அசதியில் தூங்கிவிட்ட அவன் மணிக்கூட்டில் அலாரம் அடித்தபோதுதான் திடுக்கிட்டு விழித்தான். அரைத் தூக்கத்தில் எழுந்து வேலைக்குப் புறப்பட ஆயத்தமானான்.

குளிர் அதிகமாக இருந்ததால் பனித்துகள்கள் வீதியில் படிந்து காணப்பட்டன. சந்திரன் தான் அணிந்திருந்த 'ஜக்கற்' றுக்குள் கைகளைத் திணித்தபடி, 'மவுளரா'ல் காதையும் வாயையும் சுற்றி மூடியவாறு வழமையான பாதையால் போய்க்கொண்டிருந்தான்.

அவன் நடையில் வேகமிருந்தது. ஆனால் அவன் நினைவுகள் அங்கு இல்லை...

பிள்ளைகளின் முத்தப் பதிவுகள், மனைவியின் எழுத்து வரிகள் அவன் சிந்தனையில் சுற்றிக்கொண்டிருந்தன...

அவன் கடக்கவேண்டிய முதலாவது 'சிக்னல் விளக்குச் சந்தி' வந்தது. விளக்கு பச்சை ஒளியைப் பாச்சும் வரை வீதி ஓரமாக நிற்கும் கூட்டம் இப்போதும் நின்றது. ஆனால், அதைச் சந்திரன் கவனித்ததாகத் தெரியவில்லை. சிந்தனையில் மூழ்கியிருந்த அவன் சிக்னல் விளக்கை மறந்தவனாய் வீதியில் இறங்கிவிட்டான்...

சிக்னலுக்காகக் காத்திருந்த ஏனையோர் போட்ட சத்தத்தால் திடுக்கிட்டு தன்னைச் சுதாரிக்கொள்வதற்குள் வேகமாக வந்த வாகனம் அவனை மோதிவிட்டது.

வாகனம் சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து இழுத்துச் செல்லப்பட்ட அதேநேரம் சந்திரன் பத்து மீற்றருக்கு அப்பால் தூக்கி யெறியப்பட்டான்...

சில நிமிட வித்தியாசத்தில் அம்புலன்ஸ் விரைந்து வந்தது. அதற்குள் அவன் உயிர் அடங்கிவிட்டது...

வீதி ஒழுங்கை மீறியதால்;
ஒரு தமிழ்ப் பெண் விதவையானாள்...
இரண்டு பிள்ளைகள் அநாதையானார்கள்...
உறவுகள் ஆதரவிழந்தன... ■

*1990 களில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 24 கரங்கள்

யுத்தங்களைப் பற்றி பத்திரிகைகளில் மட்டுமே படித்த மக்களுக்கு அதன் கனதியையும், தாக்கத்தையும் உணர்ந்துகொள்ள சில ஆண்டுகள் சென்றன... முற்றிலும் யுத்த அரக்கனின் ஆக்கிரமிப்பிற்குள் யாழ்ப்பாணம் மூழ்கிய பின்னர்தான் யுத்தத்தின் கொடுங்கரங்களைக் கண்டறிந்து கொண்டனர்...

நாட்டுக்கு நாடு நடக்கும் யுத்தமல்ல, வீட்டுக்கு வீடு நடக்கும் யுத்தமல்ல, இரண்டு சமூகங்களுக் கிடையில் நடக்கும் யுத்தமல்ல.

அரசியல்வாதிகளால் தொடராகக் கடைப் பிடிக்கப்பட்டுவந்த பிழையான நெறிமுறைகள், சுயநலத்திலெழுந்த அடக்குமுறைகள், அரசியல் சுகபோகங்களின் மீதுள்ள காதல் போன்றவற்றால் முகிழ்ந்தெழுந்து முற்றிவிட்ட இனவேறுபாட்டை முதன்மைப்படுத்தும் சிவில் யுத்தம்தான் இப்போது நடைபெறும் யுத்தம்...

அந்த யுத்தக் காற்றை சுவாசிப்பதைத் தவிர வேறு வழி சாதாரண மக்களுக்கு இருக்கவில்லை. இதன் காரணமாக தொழில் இழப்புகள், பொருள் இழப்புகள், உயிர் இழப்புகள், இடப்பெயர்வுகள் எனப்பட்டியல் நீண்டுகொண்டே சென்றது...

பட்டியலின் படிகளில் ஏறி பட்டறிந்து

கலையார்வன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வந்தவர்களாகவே புனித பத்திரிசியார் கல்லூரியில் தஞ்சம் புகுந்துள்ள குருநகர் மக்கள் காணப்படுகிறார்கள்...

அண்மைக்கால இடப்பெயர்வுகளின்போது குருநகர் மக்களின் முதற் தேர்வு புனித பத்திரிசியார் கல்லூரியாகவே இருந்துள்ளது.

அடிப்படைத் தேவைகள் பலவற்றை நிறைவுசெய்யக்கூடிய வசதிகள் ஒருங்கிணைக்கப்பட்டதாகக் கல்லூரி இருந்ததும், குருநகருக்கு அண்மையாக பல மாடிக் கட்டடங்களைக் கொண்டமைந்திருந்ததுமே இதற்குக் காரணம் எனலாம். பெரிய மைதானங்கள் உள்ளடக்கப் பட்டிருப்பதால் சுமைகளோடு இருப்பவர்கள் அவற்றை மறந்து விளையாட்டுகளில் ஈடுபட வாய்ப்பாகவும் இருந்தது.

எதிர்பார்க்காத நிலையில் சீறிவரும் எறிகணைகள், குறிபார்த்து போடப்படும் விமானக் குண்டுகள், துர்மணத்தையும் பேரழிவையும் உண்டாக்கும் விமானப் பீப்பாய்க் குண்டுகள், வாழ்வாதார நெருக்கடிகள், உளவியல் தாக்கங்கள் போன்றவற்றிற்கு முகங்கொடுத்தவாறு தமது அன்றாட நடவடிக்கைகளில் பலர் ஈடுபட்டுக்கொண்டிருக்க, சிறுவர்களும் வாலிபர்களும் சிறு சிறு குழுக்களாக இணைந்து தமது விருப்பத்திற்கேற்ற பல விளையாட்டுக்களை விளையாடிக்கொண்டிருந்தனர்...

திடீரென வானிலே இரைச்சல்...

விளையாடியவர்கள் நிமிர்ந்து பார்த்தனர்...

விமானம் பறந்துவருவது தெரிந்தது...

விளையாட்டை மறந்து பறந்துவரும் விமானத்தையே இமை மூடாது பார்த்துக்கொண்டு நின்றனர்.

எதையோ தேடுவதைப்போல வட்டமிட்ட விமானம் வானிலே சாகசம் செய்வதுபோல் சரிந்து, நிமிர்ந்து, புரண்டது... விளையாட்டை நிறுத்தி வேடிக்கை பார்த்துக்கொண்டு நின்ற சிறுவர்களின் உதடுகள் பயத்துடன் கூடிய சிரிப்பை வெளிப்படுத்தின...

விமானத்தின் வேகம் திடீரென அதிகரித்துக் காணப்பட்டது... நின்றவர்களின் இதயத் துடிப்பும் அதிகரித்தது...

"நல்லா உயரப்போறான் குண்டு போடப்போறான் போலிருக்கு... வாங்க உள்ள இருக்கிற ஆக்களுக்குச் சொல்லுவோம்..."

நின்றவர்களில் ஒருவன் கூறியதை ஏற்று சிலர் கட்டடத்தைத் தேடி ஓடத் தொடங்கினர்...

வட்டமிட்ட விமானம் தனது வயிற்றிலிருந்து குண்டை அவிழ்த்து விட்டதை நின்றவர்களும் பார்த்தனர்... ஓடியவர்களும் பார்த்தனர்...

ஓடியவர்கள் போட்ட கூக்குரலில் கட்டடத்திற்கு உள்ளே இருந்தவர்கள் பதறியவாறு வெளியேறத் தொடங்கினர்...

குழந்தைகளைத் தூக்கியவாறும், முதியவர்களை அணைத்த



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாறும் வெளியேறிக்கொண்டிருந்தனர். பெரும்பாலும் பெண்களாகவே இருந்ததால் வரவேண்டிய தழுது உறவுகளைத்தேடி சில ஆண்கள் கட்டடத்திற்குள்ளும் நுழைந்தனர்...

மைதானத்திற்கு வந்தவர்கள் நிலத்தைத் தேடிவரும் குண்டின் தாக்கத்திலிருந்து தம்மைப் பாதுகாக்க காதுகளைப் பொத்தியவாறு நிலத்தில் குப்புற படுத்துவிட்டனர்.

குண்டு கட்டடத்தை நெருங்க சொற்ப இடைவெளி இருந்த நேரத்திலுங்கூட கட்டடத்தின் உள்ளே இருந்து பலர் வந்து கொண்டிருந்தனர்...

இந்தக் காட்சியைப் பார்த்தவாறு நிலத்தில் படுத்துக் கிடந்தவர்கள் படபடக்கும் இதயத்துடன், திறந்தவாய் மூடாமல் உறைந்துபோய்க் கிடந்தனர்...

"டுடும்.... ..."

செவிப்பறை உடைந்திடும் அளவிற்குச் சத்தம்...

நிலம் அதிர்ந்தது...

படுத்துக்கிடந்த சிலர் தூக்கியெறியப்பட்டனர்...

வெடிமருந்தின் மணத்தால் சிலர் வாந்தி எடுத்தனர்...

குண்டு வெடிப்பின் சத்தத்தைத் தொடர்ந்து கட்டடத்தின் ஒரு பகுதி நொருங்கி விழும் சத்தம் கேட்டுக்கொண்டிருந்தன...

புழுதி வான்நோக்கி எழுந்து பரவியது...

படுத்துக்கிடந்தவர்களும் புழுதியில் மூழ்கினார்கள்...

பலரது செவிகள் அதிர்வால் மரத்துவிட்டன...

அழுகுரல்கள்...

புழுதிக்குள் மூழ்கிக்கிடந்தவர்கள் மெல்ல மெல்ல எழுந்தனர்.

குரல்வந்த இடம்தேடி பலரும் வரைந்தனர்.

அங்கே;

ஒரு இளம்பெண் கொல்லப்பட்டாள்...

பதினொரு பேர் படுகாயமடைந்தனர்...

சிலரது உடலுறுப்புக்கள் துண்டாடப்பட்டும் கிடந்தன... ■

*1990 களில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25 அழைப்பு

தானுண்டு தன் வேலையுண்டு என்ற நிலையிலேயே வாழ்ந்து வந்தார் யோண்பின்ரன். அவரது கடை சிறியதொரு பலசரக்குக் கடை என்றாலும் அந்தச் சுற்றாடலில் பலரது தேவைகளை நிறைவு செய்யும் கடையாக அது இருந்தது. எந்தவொரு பாவனைப் பொருள்களும் இல்லையென்று சொல்வதற்கில்லை. மூலிகை முதல் மக்களின் நாளாந்த பாவனைக்குத் தேவையான பொருட்கள் அனைத்தும் அந்தக் கடையில் கிடைக்கும். விலையும் நியாயமானதாகவே இருந்ததால் பலரும் அவரது கடையை தேடி வருவதில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. அதிகாலை முதல் இரவு ஏழு மணி வரை கடையைத் திறந்துவைத்து தானும் மனைவி அக்கினேஸூம் மாறி மாறி கடமையாற்றுவதால் சுற்றாடலில் உள்ளவர்களுக்கு மட்டுமல்ல பலருக்கும் பயன்படக்கூடியதாக இருந்தது.

யோண்பின்ரன் - அக்கினேஸ் தம்பதிகளுக்கு ஒரேயொரு பெண்தான். அவளும் திருமணம் முடித்து தனிக்குடித்தனமாக வாழ்கிறாள். கடையால் கிடைக்கும் வருவாய் அவர்களுக்குப் போதுமானதாக இருந்ததால் இருவரும் சந்தோஷமாக வாழ்ந்துவந்தனர்..

2006 இல் உருவான அசாதாரண சூழல் காரணமாக யோண்பின்ரனின் வருவாயில் பெரும் சரிவு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏற்பட்டது. தன்னிடமிருந்த பொருட்களை நியாய விலைக்கு விற்று முடித்துவிட்டார். பின்னர் பொருட்களுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு, கறுப்புச் சந்தையின் பெருக்கத்தால் ஏற்பட்ட விலையேற்றம் யோண்பின்ரனின் கடையை முடக்கிவிட்டது.

ஆறேழு மாதங்களின் பின்னர் கிடைக்கக்கூடிய பொருட்களைப் பெற்று மீண்டும் கடையைத் திறந்தார்.

இந்த இடைப்பட்ட காலத்தில் அக்கினேஸ் அடைந்த பாதிப்புகள் காரணமாக ஏற்கெனவே இருந்த இருதய நோய் அவளை வெகுவாகப் பாதித்தது. மருந்தும் கையுமாகவே இருந்தாள். அதனால் அவள் கடைக்குச் செல்வதில்லை.

பல சிரமங்களின் மத்தியில் யோண்பின்ரன் தனியாகவே வியாபாரம் செய்யவேண்டிய நிலை. முன்னைய சிறப்பை கடை பெறாதுவிடினும் பிறரது கண்படத்தான் செய்தது...

* * *

"ட்றிங்... ட்றிங்... ட்றிங்..."

"குளித்துவிட்டு துடைத்தவாறு வந்த யோண்பின்ரன் தொலைபேசியை எடுத்தார்...

"ஹலோ..."

"நான் புஸ்பம் பேசுறன்... என்னைத் தெரியுமா உங்களுக்கு?"

"... தெரியாது... என்ன விசயம் என்று சொல்லுங்க..."

"நான்.... ... ...."

தொலைபேசி உரையாடல் நீண்டுகொண்டே சென்றது. யோண்பின்ரன் உணர்ச்சிவசப்பட்டவராக மறுப்புக்கூறிக்கொண்டே நின்றார்.

"உங்களப்பற்றி நல்லா அறிஞ்சுதான் கேக்கிறோம். உங்களால செய்ய ஏலும்... நீங்க இப்படி மறுத்தீங்களென்றா உங்களுக்கு கஸ்ரகாலம் துவங்கீற்று எண்டுதான் கருத்து. மறுத்த ஆக்களுக்கு நடந்தவைகளைத் தெரியும்தானே... அதுபோல உங்களுக்கும் நடக்கக்கூடாதெண்டுதான் நினைக்கிறோம். என்னவோ நாளைக்கு காலையில எட்டு மணிக்கு திரும்ப எடுப்பேன் அதுக்குள்ள நல்ல முடிவா எடுத்திடுங்க... பார்த்துக் கொஞ்சம் குறைக்கலாம்... என்ன?"

தொலைபேசியின் மறுமுனை துண்டிக்கப்பட்டது. பேயறைந்தது போலக் காணப்பட்டார் யோண்பின்ரன்..

அமைதியாக கதிரையில் அமர்ந்தார்.

இவற்றைப் பார்த்துக்கொண்டிருந்த அக்கினேஸ் மெதுவாக கணவன் அருகில் சென்றாள்...

அக்கினேஸ் வந்து நிற்பதையே உணராமல் கடும் யோசனையில் ஆழ்ந்திருந்தார் அவர்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"என்னவுங்க கடுமையா யோசிக்கிறீங்க...?"

திடுக்கிட்டவராய்,

"ஒண்டுமில்லையம்மா..."

"உங்களப் பற்றி எனக்குத் தெரியாதா?... ஆருங்க ரெலிபோனில பேசினது?..."

"அது ஒருதரும் இல்ல... சும்மா இரு..."

"ஒருதரும் இல்லையெண்டா ஏனுங்க இப்படி உணர்ச்சி வசப்பட்டுப் பேசினீங்க?"

"அது... அது..."

"என்னண்டாலும் சொல்லுங்க..."

"... ஆரெண்டு தெரியாது, யாரோ பேசினாங்க... என்னக் காசு தரட்டாம்... ஐஞ்சு லெட்சம் நாளைக்கு வைக்கவேணுமாம்..."

"ஐஞ்சு லெட்சமா?... நீங்க என்னங்க சொன்னீங்க...?"

"என்னச் சொல்ல விட்டாத்தானே... அது நடக்கும் இது நடக்கும் என்று வெருட்டுறான். நானும் சொல்லிப்பாத்தன் கேக்கிறதா இல்ல... நாளைக்குக் காலயில எடுக்கிறானாம் முடிவைச் சொல்லட்டாம். அப்ப கொஞ்சம் குறைக்கிறாங்களாம்."

யோண்பின்ரனின் கண்கள் கலங்கியிருந்தன... அக்கினேஸின் கண்களும்தான்...

* * *

தொலைபேசி வந்த நேரம் முதல் மௌனமே வீட்டில் நிறைந்து காணப்பட்டது. இருவரும் தனித்தனியாக யோசிப்பதும் இடைக் கிடையே ஆலோசிப்பதுமாக இருந்தார்கள்..

இது பற்றி மகளுக்குத் சொல்லும்படி அக்கினேஸ் வற்புறுத்தி னாள். ஆனால், யாருக்கும் சொல்லவேண்டாமென்று எச்சரிக்கை விடப்பட்டதால் அதனை மறுத்துவிட்டார்.

இருவரும் இரவு உணவை சரியாக உண்ணவில்லை...

பேச்சுக்களும் பெரிதாக இல்லை...

இருவரது யோசனைகளும் மறுநாள் காலையைப் பற்றியதாக இருந்தன...

படுத்துவிட்டார்கள். உறக்கம் அவர்களைப் பற்றிக்கொள்ள வெகு நேரம் சென்றது...

* * *

அதிகாலை சூரியனின் கதிர்கள் ஜன்னல் வழியாக அறைக்குள் நுழைந்தபோதுதான் யோண்பின்ரன் கண்விழித்தார்... அக்கினேஸ் தூக்கத்திலேய கிடந்தாள்... அவளது தூக்கத்தைக் குழப்ப விரும்பாமல் தனது காலை வேலைகள் அனைத்தையும் முடித்துக்கொண்டு தேநீர் வைப்பிப்பதற்காக மனைவியை அழைத்தார்...

பதிலில்லை...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம் தரம் ...

பதிலில்லை.

உடை மாற்றிக்கொண்டு அக்கினேஸ் படுத்திருந்த அறைக்குள் சென்று கூப்பிட்டார்...

பதிலில்லை...

உடலைத் தொட்டசைத்துப் பார்த்தார்.

உடல் குளிராகவும், விறைத்தும் இருந்தது.

முகத்தை அசைத்துப் பார்த்தார்.

அவள் உயிர் அடங்கிவிட்டது...

"அம்மா... என்னைவிட்டுப் போயிட்டியா...?"

யோண்பின்ரனின் கதறல் அறைச் சுவர்களில் பட்டுத் திரும்பியது....

* * *

வீடும், முற்றமும் ஆட்களால் நிறைந்திருந்தது.

அக்கினேஸ் வெள்ளை உடையுடன் சவப்பேழையினுள் கிடத்தப்பட்டிருந்தாள்.

மகள் ஓய்வின்றி அழுதுகொண்டேயிருந்தாள்...

"ட்றிங்... ட்றிங்... ட்றிங்..."

தொலைபேசி மணி சத்தம் தொடர்ந்து கேட்டுக்கொண்டிருந்தது.

"தாத்தா அப்போதயும் கனக்க நேரம் மணி அடிச்சது. நீங்க இல்ல அதால நாங்க எடுக்கயில்ல."

"சரியம்மா நான் எடுக்கிறன்..."

"ஹலோ... யோண்பின்ரன் பேசுறன்..."

"நான்தான் புஸ்பம்... இவ்வளவு நேரமும் எங்க போனனீங்க... எட்டு மணிக்கு அடிக்கேக்க ஏன் எடுக்கயில்ல?... சரி அது கிடக்கட்டும்.. என்ன முடிவு எடுத்தீங்க..."

"முடிவா? முடிவு எடுத்திற்றன்... உனக்குப் பணம்தானே வேணும் வா... என்ர சொத்து பிணமாகக் கிடக்கிறாள் அதை எடுத்துக்கொண்டுபோ... வா..."

தொலைபேசி துண்டிக்கப்பட்டது...

யோண்பின்ரன் விம்மி விம்மி அழுதார்...

சூழ நின்றவர்கள் எதுவுமே புரியாமல் விழித்தார்கள்.

யோண்பின்ரன் அமைதியாகி இரவு நடந்த சம்பவத்தைக் கூறியபோதுதான் அக்கினேஸின் மரணத்திற்கான காரணம் அங்கிருந்தவர்களுக்குத் தெரியவந்தது. ■



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 26 வண்டில்

அன்னிய தேசத்தவரின் படையெடுப்புகளின் போது யாழ்ப்பாணம் கடலால் சூழப்பட்டு துண்டாடப்பட்ட தீவாகவே இருந்தது. ஒல்லாந்தரின் கைகளுக்கு யாழ்ப்பாணம் மாறியபின்னர் தமது கட்டுப்பாட்டிலுள்ள இலங்கையின் ஏனைய பகுதிகளுக்கு யாழ்ப்பாணத்திலிருந்து கடல்வழிப் போக்குவரத்துகளை, தமது நிர்வாக மற்றும், மக்கள் தேவைக்கேற்ப விரிவுபடுத்தத் திட்டமிட்டனர்.

அதன் ஓர் அங்கமாக, பாரம்பரிய கப்பலோட்டிகளாக இருந்த குருநகர் மக்களை இனங்கண்டு அவர்களூடாக யாழ் - கொழும்பு பிரயாண வத்தை சேவையையும், பொதிகள் வத்தை சேவையையும் நடத்த முன்வந்தனர். பின்நாளில் இவற்றிற்காக மட்டும் குருநகரில் முப்பதுக்கும் மேற்பட்ட வத்தைகள் பாவனையிலிருந்துள்ளன.

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்புக்குச் செல்வதற்கு ஏற்ற துறையாக தெரிவுசெய்யப்பட்ட இடத்தில் ஒரு துறைமுகத்தை அமைத்துக்கொண்டனர். அவ்வாறு துறைமுகம் அமைக்கப்பட்ட இடமே பின்னாளில் 'கொழும்புத்துறை' என அழைக்கப் படலாயிற்று. (கொழும்பு + துறை)

ஆங்கிலேயர் காலத்தில் 'பாஸ்' (அனுமதிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிட்டை) நடைமுறையை அறிமுகப்படுத்தி கொழும்பு செல்லும் பயணிகள் வசதி கருதி 'பாஸ் அலுவலகம்' ஒன்றை, குருநகருக்கும் கொழும்புத்துறைக்கும் இடையில் கடற்கரையோரமாக அமைத்துக் கொண்டனர். இந்த பாஸ் அலுவலகம் இருந்த இடத்தை அண்மியதாக உருவான குடியேற்றத்தை 'பாஸ் ஊர்' என அழைத்தனர். அதுவே பின்னாளில் 'பாஷையூர்' என மாற்றம்பெற்றதாக வாய்வழிவந்த கதை கூறுகிறது.

பாஷையூரின் சிறப்பிற்குக் கட்டியம் கூறுவதைப்போல் அங்கு பிரமாண்டாய் அமைந்துள்ளது புனித அந்தோனியார் ஆலயமாகும்.

ஆழ்கடல் தொழில் செய்கை இல்லையாயினும் பரவைக்கடலில் செய்யப்படும் தொழிலான 'சிறகுவலைத் தொழில்' இவர்களால் பெரிதும் பயன்படுத்தப்படுகின்றது. இந்தத் தொழில், புனித அந்தோனியார் ஆலயத்தில் பங்குத் தந்தையாக பணியாற்றிய குருவானவர் ஒருவரால் அறிமுகம் செய்யப்பட்டதாக அறியக்கூடியதாக இருக்கின்றது. ஆழ்கடல் சிறகுவலைத் தொழில்களும் பரவலாக நடைபெறுகின்றன.

மண்டைதீவு இராணுவ முகாமும், பலாலி மற்றும், வடமராட்சி இராணுவ முகாம்களும் அமைந்துள்ள நேர்க்கோட்டில் குருநகர் இருப்பதன் காரணமாக, வடக்கு மற்றும் தெற்குத் திசைகளினூடாக உயிர்குடிக்கப் பறந்துவரும் எறிகணைகளின் பாதிப்பு அதிகமாகவே இருந்தது... தம்மைப் பாதுகாத்துக் கொள்வதற்கென குருநகர் மக்கள் தஞ்சம் புகுந்த இடங்களிலெல்லாம், அவை அமைந்துள்ள நிலையம் காரணமாக பலவகைத் துன்பங்களையே சந்திக்க நேரிட்டது. அதன் காரணமாக அண்மையிலுள்ள இடங்களைத் தவிர்த்து முதற்தடவையாகச் சற்றுத் தூரத்திலுள்ள பாஷையூர் புனித அந்தோனியார் கோவிலில் தஞ்சம் புகுந்தனர்.

தஞ்சம் புகுந்தவர்களை ஆலயத்தின் உள்ளே தங்குவதற்கு ஆலய நிர்வாகம் தடைவிதித்ததால் முன் மண்டபம் மற்றும் ஒடுங்கிய வெளி விறாந்தைகளிலேயே தங்கவேண்டிய சூழல்...

அங்கே போதிய இடவசதி இல்லாத காரணத்தால் பாஷையூருக்கு அப்பாலுள்ள வளன்புரம், கொழும்புத்துறை போன்ற ஊர்களுக்குப் பலர் செல்ல எஞ்சியவர்கள் இங்கேயே தங்கியிருந்தனர்.

சிறகுவலைத் தொழில் கிரமமாக நடைபெற்றதால் அங்கு தங்கியிருந்தவர்கள் தமது தேவைக்கேற்ற மீன்களைக் கொள்வனவு செய்யவும், சிறகுவலைத் தொழில் செய்பவர்கள் அங்கிருந்தவாறே சென்றுவரக்கூடியதாகவும் இருந்தது.

சூழ்நிலையை அறிந்து ஆண்கள் இடையிடையே குருநகர் சென்று வீடுகளைக் கண்காணிப்பதும் தேவையான பொருட்களை எடுத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருவதுமாக இருந்தனர்...

இதனால், அங்கிருந்தவர்களுக்குத் தங்கியிருக்கும் இடம் மட்டும்தான் மாறியிருந்ததே தவிர செயற்பாடுகள் வழமைபோலவே அமைந்திருந்தன.

குருநகரில் இருந்தபோதும், குருநகருக்கு அண்மித்த இடங்களில் இருந்தபோதும் எறிகணைகளின் சத்தங்களை அதிகளவில் உள்வாங்கிக் கொண்ட செவிகள் இப்போது ஓய்வில் இருந்தன...

அதனால் எல்லோரும் மகிழ்வில் திளைத்திருந்தனர்...

“டுடும்...”

அவர்களின் மகிழ்ச்சியைக் கலைப்பதுபோல எவரும் எதிர்பார்த்திருக்காத தருணம், எங்கிருந்தோ சீறிவந்த எறிகணை மண்டபத் தூணில் உரசுவதுபோல் சென்று மண்டபத்தின் ஓரமாக விழுந்து, வெடித்துச் சிதறிய ஓசையால் புனித அந்தோனியார் ஆலயமே அதிர்ந்தது...

மக்கள் பரவலாக குழுமியிருந்த அந்த இடத்தை இலக்குத் தவறாமல் தாக்கியதுபோல் வெடித்துச் சிதறிய எறிகணையால்;

ஆறுபேர் உடல் சிதறி - உயிரிழந்து கிடந்தனர்...

பலர் படுகாயம் மற்றும், சிறுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்...

காயப்பட்டவர்களின் கதறல்...

உயிரிழந்த, காயப்பட்டவர்களது உறவினரின் அழுகுரல் ஒன்றிணைந்து அந்த இடத்தையே அதிரவைத்தது...

உடலுறுப்புகள் துண்டாடப்பட்டு,

உடல் வெட்டிக் கிழிக்கப்பட்டு,

உயிர் ஊசலாடக் கிடந்தவர்களை தள்ளு வண்டியில் கிடத்தி இரத்தம் சிந்தச் சிந்த, பாய்ந்து செல்லும் எறிகணைகளின் மத்தியில் யாழ்ப்பாண வைத்தியசாலைக்குக் கொண்டுசென்ற காட்சி பார்த்தவர்களின் மனதை நெகிழவே செய்தது... ■

*1990 களில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 27 இலவம்பஞ்சு

ஊரே கூடி நின்றதுபோல் வெகு விமரிசையாக நடந்தது திருமணம்...

மணமகன் சுதர்சன். யாழ்ப்பாணத்தில் சுயமாகத் தொழில் செய்பவர்.

மணமகள் நிஷாந்தினி. நோர்வே நாட்டில் பத்து வருடங்களாக வசித்துவரும் அவள், திருமணத்திற்காக யாழ்ப்பாணம் வந்துள்ளாள்.

நாட்டின் இயல்பற்ற நிலை காரணமாக வெளிநாடுகளில் வசித்து, இங்கு வந்து திருமணம் செய்பவர்களுக்காக யாழ்ப்பாண கத்தோலிக்க மேற்றிராசனம், நடைமுறையில் மாற்றத்தைக் கொண்டு வந்ததனால் திருமண நாளின் முதல் வாரத்தில், புதன்கிழமை, மத ரீதியிலான 'வார்த்தைப்பாடு' என்னும் பதிவுத் திருமணம் நடைபெற்றது.

அதைத் தொடர்ந்துவந்த ஞாயிற்றுக்கிழமை, திருமணம் செய்யப்போகும் இருவரிடையே இரத்த உறவு தொடர்பான முறையீனங்கள், உடலுறவில் ஈடுபட்டமை, விபசாரத்தில் ஈடுபட்டமை, இரகசியத் திருமணம் செய்துள்ளமை போன்ற விக்கினங்கள் இருக்கின்றதா என்பதை அறிவதற்கான முதலாம் கூறல் கூறப்பட்டது. விக்கினங்கள் பற்றி எவரேனும் அறிந்திருப்பின் அவர்கள், பங்குத்தந்தையிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெரிவிக்கக் கடமைப்பட்டவர்களாக இருக்கின்றார்கள்.

வழமைப்படி மூன்று ஞாயிற்றுக்கிழமைகள் கூறல் கூறவேண்டி இருப்பினும் தளர்த்தப்பட்ட நடைமுறை காரணமாக ஒரு கூறலுடனேயே அடுத்துவந்த புதன்கிழமை கத்தோலிக்க முறைப்படி ஆலயத்தில் திருமணம் நடைபெற்றது.

தொடர்ந்து கல்யாண மண்டபத்தில் வரவேற்புபசாரம்.

வெளிநாட்டில் இருந்துவந்த பெண்ணின் திருமணம் என்பதால் பலரும் போற்ற சிறப்பாக நடைபெற்றது.

அன்பான உபசரிப்பு, பலவகைப் பலகாரங்கள், நிறைவான உணவு கலந்துகொண்டோரை பரவசப்படுத்தியதில் ஆச்சரியமெதுவு மில்லை. பலரும் வாயார வாழ்த்திச் சென்றனர்.

மூன்று வார விடுமுறையிலேயே நிஷாந்தினி வந்திருந்ததால் எட்டாம் சடங்கு முடிந்த மறுநாளே அவள் புறப்படவேண்டியிருந்தது.

நிஷாந்தினி நோர்வே சென்றாலும் சுதர்சன் அங்கு செல்வதற்குப் பல மாதங்கள் காத்திருக்கவேண்டும். அவள் நோர்வே சென்றதும், தான் திருமணம் செய்ததை உறுதிப்படுத்தி, மாப்பிள்ளையை அழைப்பதற்கான விண்ணப்பத்தைக் கொடுத்து அவருக்குரிய விசா பெற்றுக்கொண்ட பின்னரே சுதர்சன் அங்கு செல்ல முடியும்.

* * *

கொழும்பு - பண்டாரநாயக்கா சர்வதேச விமானநிலையத்தில், கண்ணீருடனும் வேதனையுடனும் பிரிய மனமின்றிப் பிரிந்தனர் இருவரும்...

கடந்த வார நினைவுகளை ஒவ்வொன்றாய் மீட்டுப்பார்த்தவாறு சுதர்சன் விமானநிலையத்தில் நிற்க, நோர்வே செல்லும் விமானம் புறப்பட்டுச் சென்றது...

விமானநிலையத்திலிருந்து லொட்ஜ் வந்ததுமுதல் அமைதியிழந்த வனாகவே காணப்பட்டான். தனது உடலின் பாதி பிரிந்துசென்ற நிலையிலேயே அவனிருந்தான். அவ்வளவுக்கு மனைவியை நேசித்தான்...

மிகக்குறைந்த நாட்கள் மட்டுமே கிடைத்த சந்தோஷம், அந்நாட்களின் புதிய அனுபவம், அவனைத் திக்குமுக்காடச் செய்தது.

கூடவே சென்றிருக்கக்கூடாதா என்று அவன் மனம் ஏங்கியது...

பகல் பூராவும் வெளியே செல்லாமல் அறையிலே தங்கிவிட்டான்.

வேதனை தொடர்ந்துகொண்டேயிருந்ததால் வேறுவழியின்றி றெஸ்ரோறன்ற் ஒன்றில் புகுந்து, ஒருபோத்தல் ஸ்ரவுட்டை வாங்கி கிளாசில் ஊற்றினான்...

ஸ்ரவுட் நுரையுடன் சேர்ந்து கிளாஸை நிரம்பியது...

நுரையை ஊதியபோது அதனுள் நிஷாந்தினியின் முகம்...



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகையுடன் ஒரே முறையில் குடித்து முடித்துவிட்டான்... நிஷாந்தினி உள்சென்ற திருப்தி அவனுக்கு...

மீண்டும், மீண்டும் ஊற்றினான். அதிலும் அவளின் முகம்தான்...

இரண்டு போத்தலை முடித்துவிட்டு வெளியேறினான்.

அதிகாலை செல்போன் தொடராக அடித்தபோது கண்விழித்த சுதர்சன், செல்போனில் நிஷாந்தினியே பேசினாள்...

அவள் குரலைக் கேட்டதில் எல்லையில்லா மகிழ்ச்சி அவனுக்கு...

ஏதேதோவெல்லாம் பேசவேண்டும் கேட்கவேண்டும் என்ற ஆசை புரண்டு எழுந்தது. ஆனால், அதற்கான அவகாசம் கிடைக்கவில்லை.

களைப்பாக இருப்பதாகவும், கடிதத்தில் விபரமாக எழுதுவதாகவும் கூறிவிட்டு செல்போன் இணைப்பைத் துண்டித்துக் கொண்டாள்...

* * *

சுதர்சன் யாழ்ப்பாணம் வந்ததுமுதல் நோர்வேயிலிருந்து வரவேண்டிய கடிதத்தையே எதிர்பார்த்துக் காத்துக்கொண்டிருந்தான்.

ஒருவார கால தமது சந்தோஷ வாழ்வின் வெளிப்பாடு அவளது கடிதத்தில் பிரதிபலிக்கும் என்பதால் தான் என்னனென்ன எழுதவேண்டும் என்ற கற்பனையில் மூழ்கியிருந்தான்.

தன் மனதைத் தொட்ட மறக்கமுடியாத நிகழ்வுகளை அப்படியே எழுத்தாக்கி அவளுக்கு அனுப்பவேண்டுமென்ற அங்கலாய்ப்பு அவனிடம் மிகுதியாகக் காணப்பட்டது.

“ட்றிங்... ட்றிங்...”

வாசலில் தபாற்காரன் தபாலுடன் நின்றார்...

தான் எதிர்பார்த்திருந்த அதே கடிதம்...

ஆவலுடன் பிரித்தான்...

அவன் எதிர்பார்த்திருந்ததைப்போல் நீண்ட வரிகளைக்கொண்ட கடிதமாக அல்லாமல் சில வரிகள்மட்டுமே காணப்பட்டன...

கற்பனைகள் இலவம்பஞ்சாக மாறிய ஏமாற்றத்துடன் கடிதத்தைப் படித்தான்...

“சுதர்சன்... என்னை மன்னித்துக்கொள்ளுங்க... அம்மா, ஐயாவுடைய கரைச்சலாலதான் யாழ்ப்பாணம் வந்து உங்களைக் கலியாணம் செய்யவேண்டி வந்தது. நான் இங்கு ஒருவருடன் சேர்ந்திருக்கிறது அவகளுக்குத் தெரியாது. என்னாலும் சொல்ல முடியவில்ல...”

சுதர்சனுக்கு தலை சுற்றியது...

நின்ற இடமெல்லாம் சுற்றியது...

அப்படியே நிலத்தில் அமர்ந்துகொண்டான்... ■

*2000 களில்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 28 சதைத் துகள்

காலடியில் கடல்நீர்; காலையும் மாலையும் கதிரவனின் வர்ண வித்தைகளை கண்குளிரக் காணும் களிகொள் காட்சி.

தெற்கே சிறுத்தீவு; அதனைச் சுற்றிச் சுழன்று உலாவரும் அலைகளின் நடனங்கள், சீறிடும் காற்றில் சிதறிடும் நீர்த்துளிகள், பீறிட்டுப் பாயும் இயந்திர - பாய்ப் படகுகளின் அணிவகுப்பு...

வடக்கே; அல்லும் பகலும் அணியணியாய்ச் செல்லும் மக்கள், நிரைநிரையாய்ச் செல்லும் வாகனங்கள், சுமைதாங்கியாய் நின்று மௌனித்துக் கிடக்கும் வீதிகள் - கட்டடத் தொகுதிகளின் கண்கொள்ளா வனப்பு...

மேற்கே; கடலை ஊடறுத்திருக்கும் கருங் கோடான பண்ணைப் பாலம், தொடுவானத்தில் இரதங்களின் நடமாட்டம்போல தொடராகச் செல்லும் வாகனங்களின் ஊர்வலம்...

கிழக்கே; கடலில் வழிகாட்டி நிற்கும் முகத்துவார வெளிச்சவீடு, மழை இருளானாலுங்கூட மின்மினிப் பூச்சியைப்போல் மின்னி மின்னி பாச்சிடும் ஒளிஜாலம், நூறு மீற்றர் பாதையுடன் கூடிய இறங்குதுறை, நீச்சல்தடாகத்தில் துள்ளிக் குதித்து நீந்துவதுபோல் விதம்விதமாக சாகசம் செய்யும் காளைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பருவத்தினர்...

இவற்றையெல்லாம் பார்க்கும் விழி மூடாது, மகிழும் மனம் பிறழாது. சோளகக் காற்றின் வெறித்தனத்திற்கும் முகம் சுழிக்காது எதிர்கொள்ளும் இம்மண், சர்வ சாதாரணமாக எதையும் எடுத்துக் கொள்ளும் - எத்தகைய இடர் வரினும் எடுத்த காரியத்தை நிறைவேற்றி முடிக்கும் மனித ஜீவன்கள் வாழும் யாழின் அணியூர்...

அந்த ஊர்தான் குருநகர்...

அந்த ஊரில் இன்று நிலவும் இயல்பற்ற நிலையால், முன்னைய சிறப்பில் பெரும்பாலானவை தடங்களின்றி அழிந்தும், தேய்ந்தும் காணப்படுகின்றன.

பல வசதிகளுடன் திட்டமிட்டு அமைக்கப்பட்ட குடியேற்றத்தை கொண்டதாக ஆரம்பத்தில் குருநகர் இருந்தபோதும், குறைந்த விஸ்தீரணத்தைக்கொண்ட நிலப்பரப்பை உடையதாகவே காணப் பட்டது. அங்கு குடியேறிய குடும்பங்களின் இயல்பான பெருக்கத்தினால் முன்னர் தரிசு நிலங்களாக இருந்த பல இடங்கள் அத்துமீறிய குடியிருப்புகளாக மாறிவிட்டன... காற்றோட்டத்திற்காகவும் - பயன்படுத்தலுக்காகவும் விடப்பட்ட ஒழுங்கைகள் மற்றும் பரந்த வெளிகள் யாவும் ஒற்றையடிப் பாதைகளாக மாறிவிட்டன.

இதுதான் இன்றைய குடியிருப்பு நிலை...

அதேவேளை, வந்தாரை வாழவைத்து, செல்வச் செழிப்புடன் திகழ்ந்து, பல வளங்களையும் தன்னகத்தே கொண்டுவிளங்கிய இந்த மண் இன்று வாழ்வாதாரத்திற்கு கையேந்தி நிற்கிறது...

ஏற்கெனவே தொழில் வளங்கள் - இல்லிடங்கள் யாவும் சிதைக்கப்பட்டு, சின்னாபின்னமாக்கப்பட்டு உயிர் அழிவுகளைச் சுமந்து - இடப்பெயர்வுகளில் அலைந்த இம் மக்கள், புனர்ஜென்மம் எடுத்து அழிக்கப்பட்ட வளத்தை மீண்டும் பெருக்கத் தொடங்கி, சிறுகச் சிறுகத் தமது முன்னைய நிலையை எட்டத்தொடங்கியபோதுதான் குறுக்கிட்டது ஆவணி *11*...

அன்றுமுதல் சொல்லொணா துன்பங்களை, சுமைகளைச் சுமக்கும் நிலைக்கு ஆளானார்கள்...

ஆழ்கடல் தொழில்கள் யாவும் முடக்கப்பட்டன.

சிறு தொழில்களைப் பயன்படுத்தி ஏரிக் கடலில் குறிக்கப்பட்ட எல்லைக்குள், வழங்கப்பட்ட நேரத்திற்குள், மட்டுப்படுத்தப்பட்ட தொழிலாளர்கள் - இறுக்கமான கட்டுப்பாடுகளின் மத்தியில் தொழில் செய்யவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள்.

இதனால் வருவாயின்றி வாழ்வாதாரம் தடம்புரண்டது...

ஆழ்கடல் தொழிலில் நிறைந்த வருமானத்தைப் பெற்ற இவர்கள் இன்று வேலைதேடும் படலத்திற்குள் நிற்கிறார்கள்....

இந்த வரலாற்றுப் பின்னணியில் வாழும் குடும்பங்களில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்திரனும் ஒருவன். தான் தொழில்செய்த காலத்தில் கைநிறைய சம்பாதித்து மனைவி மற்றும் நான்கு பிள்ளைகளைக் குறையின்றிக் காப்பாற்றிய அவன், இன்று தொழில்தேடி அலைகின்றான். மூத்த மகன் காண்டீபன் மிதிவெடி அகற்றும் வேலைக்குச் செல்வதால் அவனின் வருமானத்திலேயே அவர்களின் சீவியம் நகர்ந்தது.

தொழிலின்மை காரணமாக தினமும் அதிகமான நேரத்தை வீட்டில் செலவழிப்பதால் தனது இரண்டு பெண்பிள்ளைகளுடனும் எப்போதும் கலகலப்பாக இருப்பான் சந்திரன். இந்தக் கலகலப்பும் அதனாலெழுந்த சந்தோஷமும் இழக்கப்பட்ட தொழிலை மறக்கவே செய்தது...

* * *

நெடுநேரமாகச் சற்றுத் தூரத்தில் கேட்டுக்கொண்டிருந்த ஷெல் சத்தம் நித்திரையைத் தடுத்ததால் தொலைக்காட்சிப் பெட்டியின் முன்னால் குழுமியிருந்த சந்திரனும் பெண்களும் காண்டீபனின் அதட்டலால் படுக்கைக்குச் சென்றுவிட்டார்கள்...

* * *

சோளகக் காற்றின் சுகத்தில் அயர்ந்து தூங்கிக்கொண்டிருந்த குருநகர் மக்களை அடித்து எழுப்பியது துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும்...

மிக அண்மையிலே கேட்ட சத்தங்கள் பலரையும் பல கோணத்தில் சிந்திக்கவைத்தது. வீட்டுக்குள் இருந்த பலரும் ஊரடங்கு நேரமென்பதையும் மறந்து வீதிக்கு வந்துவிட்டனர்...

'பரா' வெளிச்சங்கள், சீறிப்பாயும் ஷெல்களின் ஒளிகள் கண்ணுக்கு, பயத்துடன் கூடிய விருந்தாக இருந்ததன. இவையாவும் இங்கிருந்தே இயக்கப்படுகின்றன என்பதால் அவர்களை ஆட்கொண்ட பயம் சற்றுக் குறைந்து சென்றது.

அதிகாலை 1.15 இலிருந்து சத்தங்கள் தொடராகக் கேட்டுக் கொண்டிருந்ததால் கடற்கரையோரமாக இருந்த குடும்பங்கள் பல வெளியேறி 'லாந்தர்' விளக்குகளுடன் ஆலயங்களைத் தேடிச் சென்றுகொண்டிருந்தனர்...

வீதியில் நின்றவர்களும் தொடர்ந்து நிற்க முடியாமல் வீட்டுக்குள் புகுந்துகொண்டனர்...

அதிகாலை 2 மணிக்கு மேலாகிவிட்டதால் நித்திரை வலிந்து இழுக்க துப்பாக்கி மற்றும், ஷெல் சத்தங்களின் தாலாட்டில் உறக்கம் அவர்களை அணைத்துக்கொண்டது.

சற்று நேரத்தால் மிக அண்மையில் ஷெல்கள் விழுந்து வெடித்த சத்தம் கேட்டு திடுக்குற்று எழுந்தவர்கள் விபரம் புரியாமல் தவித்தனர்... ஊருக்குள்ளே விழுந்திருக்கவேண்டும் என்பது அவர்களது முடிபாக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்ததால் பதட்டத்துடனேயே காணப்பட்டார்கள்.

சில நிமிட வித்தியாசத்தில் மத்திய கிழக்கு வீதியில் நடந்த கொடுமை ஊரடங்கையும் மீறி வெளியே தெரியவந்தது...

சந்திரனும் அவர் மனைவியும் படுத்திருந்த அறைக் கூரையை பிய்த்துக்கொண்டு உள் நுழைந்த ஷெல் வெடித்துச் சிதறியதால் இருவரும் உடல் சிதறிப் பலியானார்கள்...

சற்றுமுன் சல்லாபித்த அவர்கள் சத்தமேயின்றி அடங்கிப் போன தகவலால் ஊரே தடுமாறியது...

உடற் சதைத் துகள்கள் அறைச் சுவரெல்லாம்...

கூரை முற்றாக நொருங்கிக் கிடந்தது... பக்கத்து அறையில் படுத்திருந்த பிள்ளைகள் படுகாயங்களுக்கு உள்ளானார்கள்.

சிறு நிமிட வித்தியாசத்தில் வெடித்த இரண்டாவது ஷெல்லால் தென்னைமரம் பாதியாக வெட்டப்பட்டு தூக்கியெறியப்பட்டிருந்தது.

இந்த ஷெல்லை தென்னைமரம் ஏந்திக் கொண்டிருக்காவிட்டால் ஏற்பட்டிருக்கக்கூடிய உயிரிழப்புகளை எண்ணிப் பார்த்த அயலவர்களின் தேகம் நடுங்கி, உரோமங்கள் சிலிர்த்து நின்றன. இறந்தவர்களுக்காக இரக்கப்பட்டனர்...

சாயந்தரம் 5 மணி...

சிதைந்த உடலின் பாகங்கள் தனித்தனி சவப்பேழையில் வைக்கப்பட்டு சவ அடக்கத்திற்காக ஊர்வலமாக எடுத்துச் செல்லப்பட்டன...

கொழும்புத்துறை வளன்புரம் பகுதியில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தாய் - தகப்பன் - பிள்ளைகள் இருவர் உறக்கத்திலிருந்தபோது ஷெல் விழுந்து கொல்லப்பட்ட செய்தியும், சிறுத்தீவில் நடந்த சண்டையினாலேயே இந்த விபரீதங்கள் நிகழ்ந்தது என்பதும் மரண ஊர்வத்தில் பலராலும் நினைவு கூரப்பட்டது. ■

*2008 களில்*

❖❖



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆகுதி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org